
செப்டம்பர் 17, 2000 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

# சுடர் ஒளி

வாரமலர்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA



## ஊழலற்ற தேர்தல்: திரும்பிப் பாருங்கள்!

## மறக்கப்பட்ட மனிதக் கொலைகள்!

# சுடர் ஒளி

17 செப்டெம்பர், 2000

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834


## தேர்தல் சந்தேகம்

ஊழல் மோசடி இன்றித் தேர்தல் நடக்குமா?

பலருக்கும் இன்று இதில் சந்தேகம்.

நாட்டில் இப்போது தலைவிரித்தாடும் தேர்தல் வன்செயல்களும், படுகொலைச் சம்பவங்களும் அதற்கு ஒரு காரணம்.

சந்தேகத்திற்கான இரண்டாம் காரணம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவுக்கும் அரசுக்கும் குறிப்பாக, அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல்நிலை.

நாடாளுமன்றம் தவிர வேறு எவருக்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாகச் செயற்பட அதிகாரம் உடையவர் தேர்தல் ஆணையாளர். அவர் பதவியிலிருந்து தூக்கி எறியப்படுவாரா? அல்லது தாமாகவே பதவி விலகிவிடுவாரா? இப்படிப் பலரும் பேசிக்கொள்கிறார்கள். அந்த அளவிற்கு நிலமை முற்றி விட்டது.

எல்லாம் வாக்களிப்பில் ஊழல், மோசடி நடைபெறாமல் தடுப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்ட விசேட பாதுகாப்பு நடவடிக்கையால் வந்த வினை.

வாக்காளர் அட்டையில் கடைசி நேரத்தில் ஸ்டிக்கர் ஒட்டி வாக்காளர்களுக்கு வழங்கத் தேர்தல் ஆணையாளர் விரும்பினார்.

அப்படிச் செய்வதால் கள்ள வாக்குகள் போடப்படுவதைத் தடுக்கலாம் என்பது ஆணையாளரின் நம்பிக்கை.

அதற்காகத் தனக்கு நம்பிக்கையான தனியார் அச்சகம் ஒன்றிடம் இலட்சக்கணக்கான ஸ்டிக்கர்களை அச்சடிக்கும் பொறுப்பை அவர் ஒப்படைத்தார்.

இதில் என்ன பெரிய இரகசியம் வேண்டிக் கிடக்கிறது?

மற்றத் தேர்தல் தஸ்தாவேஜுகளைப் போல ஸ்டிக்கர்களையும் அரசாங்க அச்சகத்தில் அச்சிட்டால் என்ன? இது அரசாங்கத் தரப்புக் கேள்வி.

ஸ்டிக்கர்கள் அச்சிடப்படும் விஷயம் மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் அவர்களும் அப்படியான ஸ்டிக்கர்களைத் தயார் செய்து கொள்வார்கள். அதனால் நம்பிக்கைக்குப் பாத்திரமான அச்சகத்திலேயே மிக இரகசியமாக ஸ்டிக்கர்களை அச்சிட வேண்டி இருந்தது.

இதற்குத் தேர்தல் ஆணையாளர் எவரிடமும் அனுமதி பெறவேண்டியதில்லை.

இது தேர்தல் ஆணையாளரின் வாதம்.

ஸ்டிக்கர் அச்சிடப்பட்டிருக்கும் விஷயத்தை வெளியே தெரிய வைத்ததே பொலிஸார்தான்.

தேர்தல் சம்பந்தமான ஏதோ ஒன்று சம்பந்தப்பட்ட தனியார் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வருகிறது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்து விட்டது.

பொலிஸார் அச்சகத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடாத்தினார்கள். அச்சகத்தின் பொறுப்பாளர்களைக் கைது செய்தார்கள். அச்சடித்த ஸ்டிக்கர்களைக் கைப்பற்றினார்கள்.

கடைசியில்தான் தேர்தல் ஆணையாளரிடம் இந்த விஷயம் பற்றிக் கேட்டார்கள்.

ஸ்டிக்கர்களை அச்சடித்துத் தரும்படி அச்சகத்தாரிடம் தாமே பொறுப்பை ஒப்படைத்ததாகத் தேர்தல் ஆணையாளர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அவ்வளவோடு சரி. கைதான அச்சகத்தார் விடுதலை செய்யப்பட்டார்கள். ஸ்டிக்கர்கள் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆயினும் என்ன பயன்? ஸ்டிக்கர்கள் அச்சிடப்பட்ட விஷயம் வெளியே தெரிய வந்துவிட்டது. அதனால் ஸ்டிக்கர்களை இனிமேல் பயன்படுத்த முடியாது.

நஷ்டம் யாருக்கு? நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும்தான்.

கஷ்டம் யாருக்கு? தேர்தல் ஆணையாளருக்கு.

இதில் இலாபம் யாருக்கு? தேர்தலில் ஊழல் மோசடி செய்யக் காத்திருப்பவர்களுக்குத்தான். அதற்கான வழியை அடைக்கத் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்ட நல்ல முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டது.

அதனால் தான் சந்தேகம்!.

# தேர்தல்வரை யாழ் மோதல் அடிக்கடி நடக்கும் அபாயம்!

பொதுத் தேர்தல் வாக்களிப்புத் தினம்வரை யாழ் மோதல்கள் அடிக்கடி நிகழும் அபாயம் இருக்கிறது.

யாழ் பொதுமக்களுக்கு அவர்களின் பாதுகாப்புக் குறித்துப் பெரும் கவலை.

சொந்த வீடு வாசல்களை விட்டுவிட்டு எங்கே போவது?

போகும் இடத்தில் பாதுகாப்பாக இருக்கலாம் என்பதற்கு உத்தரவாதம் உண்டா? அதுவும் இல்லை, ஒரே கலக்கம்.

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள படையினர் சுமார் மூன்று மாத காலமாகச் சும்மா இருந்தார்கள். யுத்த களத்தில் அமைதி நிலவியது.

கடந்த மூன்றாம் திகதி திடீரென்று தாக்குதலை ஆரம்பித்தார்கள்.

யாழ் கரையோரக் கிராமங்கள் சிலவும் யாழ்-கண்டி A-G பிரதான போக்குவரத்துப் பாதையில் உள்ள சில பகுதிகளும் பீரங்கி மற்றும் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காயின.

அடுத்து ஒரு வார காலத்துள் யாழ் கொழும்புத்துறைப் பகுதியில் தாக்குதல்.

குறைந்தது வாரம் ஒரு தாக்குதலாவது நடைபெற வேண்டும் என்று செயல் திட்டம் வகுத்து வைத்திருக்கிறார்களோ என்னவோ!

எந்தத் தாக்குலும் படையினருக்கு அவர்கள் எதிர்பார்த்த அளவு வெற்றியை அளிக்கவில்லை.

படையினர் சீண்டும் போதெல்லாம் புலிகள் சும்மாவா இருக்கிறார்கள்? சீறிப் பாய்கிறார்கள். அதனால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் படையினர் செல்லும் வேகத்தை விட மிக அதிகமான வேகத்தில் திரும்ப வேண்டியதாக உள்ளது.

உயிர் இழப்பும், உடல் ஊனமுறுதலும் இரு பக்கங்களிலும் இடம்பெறுகின்றன. பொதுமக்களுக்கும் அழிவுகள் ஏற்படுகின்றன.

முக்கியமாக மூன்று காரணங்களை முன்னிட்டே படையினர் யாழ்ப்பாணத்தில் இப்போது புலிகள் மீது தாக்குதல் நடத்த முற்படுகின்றனர்.

1. படையினர் யுத்தத்தில் ஈடுபடாமல் வாரக் கணக்கில் சோம்பியிருந்தால் பின்னர் புலிகளை எதிர்த்து உக்கிரமாகப் போராட வேண்டிய கால கட்டங்களில் போர்த்திறனை இழந்து சாதாரணர்கள் ஆகிவிடுவார்கள். இப்படி இராணுவ மேலிடம் அஞ்சுகிறது.

2. புலிகள் தாக்குதல் ஆரம்பிக்கப் போகிறார்கள், அதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறார்கள் என்று இராணுவ உளவுப் பிரிவு மூலம் செய்தி கிடைத்ததும் படையினர் முந்திக் கொள்கிறார்கள்.

   சில சமயங்களில் புலிகளே தங்களுடைய ஆட்கள் மூலம் தாக்குதல் நடக்கப் போகிறது என்று படையினருக்குப் பொய்த் தகவல் கொடுப்பதும் உண்டு. வரட்டும், நன்றாகக் கொடுத்து அனுப்புவோம் என்ற எண்ணத்தில்.

3. அரசின் நெருக்குதல் காரணமாகவும் படையினர் புலிகள் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கிறார்கள்.

எங்கு எதை எப்போது, எப்படிச் செய்தாலும் இப்போதெல்லாம் எதிர்பார்த்தளவு வெற்றி கிட்டுவதில்லை, இழப்புகள் அதிகமாகின்றன.

இது தேர்தல் காலம். அரசாங்கப் படையினர் ஆனையிறவு முகாமை இழந்து நிற்கிறார்கள். யாழ்ப்பாணமும் புலிகளின் வசமாகி விடுமோ என்று அச்சம் நிலவுகிறது.

வடக்கு கிழக்கில் படையினர் சும்மா இருந்தாலும் சரி, புலிகளுடன் மோதி இழப்புக்களைச் சந்தித்தாலும் சரி தென்னிலங்கையில் அரசாங்கம் வாக்குகளைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும்.

அதேவேளை வடக்கில் ஒரு கிராமத்தைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டால் கூடத் தெற்கில் அர்சாங்கத்துக்குக் கூடுதலான வாக்குகள் விழும். ஆகவே தேர்தல் வாக்களிப்பு நடைபெறும் வரை எப்படியாவது யாழ்ப்பாணத்தில் படைகள் வெற்றிகளைக் குவிக்க முயல வேண்டும் என்று அரசு படைத் தலைமையை முடுக்கிவிட்டுக் கொண்டே இருக்கும்.

அதனால் ஷெல் அடி, குண்டுவீச்சு எல்லாம் தாராளமாக நடக்கும். யாழ் மக்களுக்குச் சதா கஷ்டம்தான்!.



## போராட்டத்துக்கு ஜோசப் வலுவூட்டப் போகிறார்

மட்டக்களப்பு போராளிகளின் தீர்க்க தரிசனமான போராட்டத்திற்கு வலுவூட்டும் நோக்கிலேயே எமது பணி தொடரும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை வேட்பாளருமான ஜோசப் பரராஜசிங்கம் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பின் விடுவிக்கப்படாத பிரதேசமான வவுணதீவு உபபஸ்டிப்போ திறப்பு விழா சமீபத்தில் நடந்தது. அதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு ஜோசப் பரராஜசிங்கம் உரையாற்றினார்.

அவர்தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

வவுணதீவு பஸ் டிப்போ ஏற்கனவே திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அது திறக்கப்படவில்லை. அதற்கு நான்தான் காரணம் என்று சில விஷமிகள் திட்டமிட்டுப் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டனர்.

தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கிடைக்கும் அபிவிருத்திகளை நான் ஏன் தடுக்க வேண்டும்? இப்பகுதிக்கு எனது முயற்சியால்தான் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. நாவற்காடு பாடசாலை கட்டடத்திற்காக நிதி ஒதுக்கியுள்ளேன். எமது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பெற்றுத் தராத எந்தத் தீர்வுத் திட்டத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள மாட்டாது.

தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தைப் போராளிகள் மிகவும் உக்கிரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வேளையில் எமது போராட்டத்தின் அழுத்தங்களைச் சர்வதேச மட்டத்தில் எடுத்துக்கூறி நியாயப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு நிறையவே உண்டு. அந்தப் பணியை செய்யக்கூடிய ஒரே கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணிதான். இப்படி அவர் கூறினார்.

## 1793 தமிழ் ஆசிரியர்கள் மலையகத்துக்குத்தேவை

கண்டி

மலையகத் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் 1793 ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

ஆரம்பக் கல்விக்கும், ஆங்கிலத்துக்கும், ஏனைய பாடங்களுக்குமே இந்த வெற்றிடங்கள் நிலவுகின்றன. மத்திய மாகாண இந்து கலாசார தமிழ் கல்வி அமைச்சர் திரு வே.இராதாகிருஷ்ணன் மத்திய மாகாண சபையில் இதுபற்றி தெரிவித்தார்.

இதேபோன்று உயர்தர வகுப்பில் கற்பிப்பதற்கு 46 பட்டதாரிகளின் தேவையும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மலையக தமிழ்ப் பாடசாலைகளில் இப்பொழுது பணி புரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 4305 ஆகும். இந்த எண்ணிக்கை 5598 ஆக அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது.

## நீரைத் திருடியவர் பணத்தை இறைத்தார்

புத்தளம்

நீர் மாற்றியில் (மீற்றர்) மோசடி செய்து நீண்ட காலமாக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையை ஏமாற்றி வந்த புத்தளம் நகரிலுள்ள பிரமுகரொருவர் பல்லாயிரக்கணக்கான ரூபா அபராதம் செலுத்த வேண்டுமென மாகாணத் தலைமை அலுவலகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

விவரம் வருமாறு:

புத்தளம் நகரில் தொழில் புரிகிறார் மேற்படி வர்த்தகர். அவர் தனது வர்த்தக நிலையத்திலும் தனது வீட்டிலும் பொருத்தப்பட்டிருந்த நீர் மாற்றியில் (மீற்றர்) மோசடி செய்து நீண்டகாலமாக நீர் பெற்று வந்துள்ளார்.

இது பற்றி தேசிய நீர் வழங்கல் சபைக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து குருநாகலிலுள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்த திடீர் பரிசோதனைக் குழுவினர் ஏக காலத்தில் வர்த்தக நிலையத்திலும், வீட்டிலும் சோதனை செய்து மோசடியைக் கண்டு பிடித்தனர்.

தற்சமயம் இரு நீர் இணைப்புக்களையும் துண்டித்து விட்டனர்.

நீர் மோசடி குறித்து மேலதிக விசாரணைகள் இடம் பெற்றபின்னர் வர்த்தக நிலையத்திற்கு அபராதமாக 91ஆயிரத்து 79 ரூபாய் 30 சதமும், வீட்டிற்கு 16 ஆயிரத்து 955 ரூபாய் 59 சதமும் (மொத்தம் 1 இலட்சத்து 8 ஆயிரத்து 34 ரூபாய் 89 சதம்) செலுத்த வேண்டுமெனத் தலைமைக்காரியாலயம் பணிப்புரை விடுத்துள்ளது.

இத் தொகையை செலுத்தத் தவறின் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊழலற்ற தேர்தல்: திரும்பிப் பாருங்கள்!



இன்று ஊழல் இல்லாமல் தேர்தல் இல்லை. வன்செயல்கள் இல்லாமலும் தேர்தல் இல்லை என்றாகிவிட்டது.

பதினோராவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கலாகி பிரசாரம் ஒரே அமர்க்களம்.

வன்செயல்கள் நாள் தவறாமல் நடந்து வருகின்றன.

உயிர்ப் பலியும் இடம்பெற்று வருகிறது.

உண்மையான ஜனநாயத் தேர்தலில் இவை எல்லாம் இடம் பெறலாமா?

தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற வேண்டும். மக்கள் தமக்குச் சேவை செய்யக் கூடியவர்களைத் தமது பிரதிநிதிகளாக எதுவித வற்புறுத்தலுமின்றித் தெரிவு செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை இருக்க வேண்டும்.

அது இன்று இல்லை. ஆனால் அன்று சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது.

அது முடியாட்சிக்கான ஜனநாயகத் தேர்தல். அந்தப் பழைய காலத்திலேயே இருந்தது.

திரும்பிப் பார்த்தால் தெரியும். தமிழ் நாட்டிலே சோழ மன்னர்கள் அதை ஏற்படுத்தி இருந்தார்கள்.

இன்று தமிழ் நாட்டில் கூட தேர்தல் ஒரு சூதாட்டமாக மாறிவிட்டது.

உண்மையான ஜனநாயகத் தேர்தல் நடைமுறை அன்று எப்படி இருந்தது என்பதைக் கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அவற்றை ஆராய்ச்சிக் கண் கொண்டு படித்து அறிந்தவர் பேரறிவாளர் டாக்டர் இரா நாகசாமி. அவர் தரும் விளக்கங்களைப் பார்ப்போம்!

சோழ மன்னர்கள் காலத்தில் கிராமங்களில் குடியாட்சி நிலவியது. அதற்கு கிராம மன்றங்கள் இருந்தன. அவற்றிற்கு ஜனநாயகத் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பிரதிநிதித் தேர்வுக்கு நிற்பவர்கள் முக்கியமாக ஏழு தகுதிகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

1. அசையாத சொத்து சிறிதாவது இருக்க வேண்டும்.
2. 35 வயதுக்கு மேற்பட்டவராகவும் 70 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
3. ஒரு குறிப்பிட்ட அளவு கல்வி கற்றிருக்க வேண்டும்.
4. செயல் புரிவதில் வல்லவராக இருக்க வேண்டும்.
5. ஒழுக்க சீலனாக இருக்க வேண்டும்.
6. நேர் வழியில் சம்பாதித்த பொருளை உடையவராகவும் நல்ல மனம் படைத்தவராகவும் இருக்க வேண்டும்.
7. ஒரு முறை தேர்ந்து எடுக்கப்பட்டவர் அடுத்த முறை தேர்தலுக்கு நிற்க முடியாது.

மூன்று வருடங்களுக்கு இந்தத் தடை.

தேர்தலில் நிற்கத் தகுதி உள்ளவர் யார் என்பது மட்டுமன்றி தகுதியற்றவர் யார் என்றும் கல்வெட்டுக்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒருவர் ஒழுங்காகக் கணக்கு காட்டாமல் இருந்தால் அவரோ அல்லது அவரின் சொந்தக் காரர்களோ வாழ்நாள் முழுவதும் தேர்தலில் நிற்க முடியாது.
- பொதுச் சொத்துக்கும் கணக்கு காட்ட வேண்டும். தவறினால் சம்பந்தப்பட்ட உறுப்பினரும் அவரது இரு வழிச் சொந்தக்காரர்களும் எப்பொழுதுமே தேர்தலுக்கு நிற்க முடியாது.
- மதுபானம் அருந்துபவர், பிறர் பொருளைச் சூறையாடியவர், பிறர் மனைவியை அபகரித்தவர்- இப்படியானவர்களும் தேர்தலில் நிற்க முடியாது.
- எவராவது லஞ்சம் வாங்கினால் ஏழு தலைமுறைக்குத் தேர்தலில் நிற்க முடியாது.

இந்தத் தேர்தல் முறைக்குக் "குடவோலை" முறை என்று பெயர்.

தேர்தலுக்கு நிற்க முன்வருபவர்களில் தகுதியற்றவர்களை நீக்கி விட்டு மற்றவர்களின் பெயர்கள் ஓலைகளில் எழுதப்படும். அந்த ஓலைகள் ஒரு குடத்தினுள் போடப்படும். எத்தனை பேர் தெரிவாக வேண்டுமோ அத்தனை ஓலைகளைச் சிறுவன் ஒருவன் ஒவ்வொன்றாகக் குடத்தில் இருந்து எடுப்பான்.

யார், யாருடைய பெயர்கள் வருகின்றனவோ அவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகப் பணியாற்றுவார்கள்.

இதில் தேர்தல் பிரசாரத்திற்கு இடமில்லை. அதனால் வன் செயல்களும் இல்லை. கொலைகள் விழுவதும் இல்லை.

இன்றெல்லாம் தேர்தல் பெட்டியில் முறைகேடு. வாக்களிப்பு நிலையங்களில் முறைகேடு. வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகளை எடுத்துச் சென்று வாக்குகளை எண்ணுவதில் முறைகேடு. இப்படி எல்லாம் புகார் கூறப்படுகிறது.

ஆனால் சோழர்காலத்துக் குடவோலைத் தேர்தல் முறையில் முறைகேடுகளுக்கு இடம் அளிக்கப்படுவதில்லை.

குடவோலை எடுக்கும் போது ஊர்மக்கள் அனைவரும் சமுகமளித்திருப்பர்.

ஊர்ப் பெரியவர்கள் மத்தியில் குடம் வைக்கப்படும்.

குழுமியிருப்பவர்களில் வயதானவர் எழுந்து நின்று பார்வையிடுவார்.

ஒரு சிறுவனை அழைத்து ஒரு ஓலையை எடுக்கச் சொல்வார்.

எடுத்த ஓலையை ஊர் மத்தியஸ்தர் கையில் கொடுப்பார்.

மத்தியஸ்தர் தாம் கையில் எந்த ஓலையையும் ஒளித்து வைத்திருக்கவில்லை என்பதை எல்லோருக்கும் தெரிவிக்க தனது கையை அகல விரித்துக் காட்டுவார்.

சிறுவன் குடத்தில் இருந்து எடுத்த ஓலையை வாங்கி அதில் எழுதியுள்ள பெயரை எல்லோருக்கும் கேட்கும்படி வாசிப்பார்.

அவ்வோலையை மண்டபத்தில் உள்ள அனைவரும் ஒவ்வொருவராக வாசிப்பர்.

வாசித்த அப்பெயர் சரிதான் என்ற பின்னர் அந்தப் பெயருக்கு உரியவர் தேர்ந்து எடுக்கப்பட்டவர் ஆவார்.

இவ்வாறு தேர்ந்து எடுக்கப் பட்டவர்கள் சேர்ந்து ஊர்ச்சபை. இச்சபையினர் சிறு குழுக்களாக இயங்கிப் பல பணிகளையும் கவனிப்பர்.

இந்தக் குழுக்களுக்கு "வாரியங்கள்" என்று பெயர்.

இளைஞர்களும் உடல் வலிவு உள்ளவர்களும் கடுமையான பணிகளைச் செய்வர்.

வயதாலும் ஆற்றலாலும் முதிர்ந்தவர்கள் மேற்பார்வை புரியும் பணிகளை மேற்கொள்வர்.

ஏரி வாரியம், தோட்ட வாரியம் என்றெல்லாம் பல வாரியங்களாகச் சபையார் பணிபுரிந்தனர்.

இவ்வாறு ஊர் தோறும் கிராமங்கள் தோறும் சோழர் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளே ஊராட்சி புரிந்தன.

தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் "பெருமக்கள்" என்று அழைக்கப்பட்டனர்.

இந்தப் பெருமக்களின் சீரிய பணியால் ஊர்கள் உயர்வு பெற்றன. செல்வம் செழித்தது. கல்வி மிகுந்தது. இயல், இசை, நாடகம் முதலான கலைகள் வளர்ந்து ஓங்கின.

அவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் வானுயர் கோயில் கட்டடங்களும் எழில் சொட்டும் அற்புதச் சிற்பங்களும் கலைப் பொக்கிஷங்களாகக் கிடைத்தன.

இன்று விமானங்கள் விர்ரென்று வந்து கோயில்கள் மீதும் குண்டுமாரி பொழிந்து விட்டு விரைகின்றன. கோயில் சிற்பங்கள் திருட்டுப் போகின்றன. தேர்தலில் வென்று மக்கள் சேவைக்கென்று வந்தவர்கள் கையாலாகாதவர்களாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சும்மா சுகமாக இருக்கிறார்கள்.

ஆக, ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சோழர் காலத் தேர்தல்முறை இன்றைக்குப் பொருந்துமா சிறு மாற்றங்களுடன் அதை நடைமுறைப் படுத்தலாமா என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## குத்து, வெட்டு, கொலை அனர்த்தங்கள் இல்லை



# திருமணம் இப்படி இருந்தால் எப்படி?

சீதனம் இல்லாத கல்யாணம் கேட்கக் காது குளிருகிறது அல்லவா? காதலித்துச் செய்யும் கல்யாணத்தில்கூட மாப்பிள்ளையின் பெற்றோர் மாப்பிள்ளைக்கு தெரியாமலே பெண்வீட்டாரிடம் சீதனம் கறந்து விடுகிறார்கள். இந்த நிலையில் சீதனமே இல்லாமல் பெண்களுக்கு கல்யாணம் என்றால் நம்ப முடிகிறதா? ஒன்று இரண்டல்ல, எட்டு வகை கல்யாணங்கள் இருக்கின்றன. அவை எதிலும் ஆணுக்குப் பெண் சீதனம் கொடுக்கும் வழக்கம் இல்லை.

அந்தக் கல்யாணங்கள் பழங்காலத்தில் இருந்தன.

எட்டு வகை கல்யாணங்களும் முறையே பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வ மணம், காந்தருவ மணம், ஆசுரம், இராக்கதம் பைசாசம் என்று அழைக்கப்பட்டன.

### பிரமம்

பிரமச்சாரிக்கு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது பிரம மணம் எனப்பட்டது. பிரமச்சாரி என்போர் முன் எப்போதாவது எந்த ஒரு பெண் இடமும் எதுவித தொடர்பும் இல்லாதிருந்தவராவர்.

### பிரசாபத்தியம்

பெண்ணின் பெற்றோரும் உற்றாரும், ஆடவரின் பெற்றோரும் உற்றாரும் சந்தித்துப் பேசி இணக்கம் கண்டு செய்யப்படும் திருமணம் பிரசாபத்தியத் திருமணமாகும். இந்தத் திருமணத்திலும், ஸ்ரீதனம், புருஷதனம் என்ற பேச்சு எழுவதில்லை.

### ஆரிடம்

குறிப்பிட்ட தொகையான பசுக்களையும், எருதுகளையும் பெண்ணின் பெற்றோருக்கு புருஷதனமாக வழங்கிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது ஆரிட மணம் எனப்பட்டது. மணமகன் ஸ்ரீதனம் வாங்குவது இந்த மணத்திலும் இல்லை.

### தெய்வ மணம்

வேள்வியில் வந்த கன்னியைத் தீ முன்னர் ஒரு வரனுக்கு கையளிப்பது தெய்வ மணம். இதிகாசங்களில் இப்படியான திருமணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

### ஆசுரம்

பெண்ணுக்கு மணமகன் பொன்னும் புடைவையும் கொடுத்து, தாய் தந்தையாருக்கு புருஷதனம் கொடுத்து பெண்ணை ஏற்றுக் கொள்வது ஆசுர மணம் எனப்படும். அரேபிய நாட்டில் ஆடவர் பெண் வீட்டாருக்குப் புருஷதனம் கொடுத்துப் பெண்ணை ஏற்கும் வழக்கம் இன்றும் நிலவி வருகிறது.

### காந்தருவ மணம்

கொடுப்பாரும் கேட்பாரும் இன்றி தலைவனும் தலைவியும் தாமாகவே சந்தித்து ஒருவரை ஒருவர் வரித்துக் கொள்வது காந்தருவ மணம் எனப்படும். இதுவே இக்காலத்தில் நடைபெறும் காதல் மணம் என்றும் கூறலாம்.

### இராக்கத மணம்

பெண்ணும், பெண்ணின் இனத்தவர்களும் உடன்படாதிருக்க, வலிந்து பெண்ணை யாருக்கும் தெரியாமல் கூட்டிச் சென்று மணம் முடித்துக் கொள்வது இராக்கத மணம் எனப்படும். இதையே ஆங்கிலத்தில் "இலோப்" **Elope** என்று சொல்கிறார்கள்.

### பைசாச மணம்

துயிலும் பெண்ணைக் கூடுவது. அல்லது பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக அவளை பலாத்காரம் செய்து மணம் முடித்துக் கொள்வது போன்ற செயல் பைசாச மணம் எனப் பட்டது. இதை ஆங்கிலத்தில் "றேப்" Rape என்பார்கள்.

இந்த எட்டு வகை மணங்களிலும் கவனிக்கத்தக்க அம்சம் ஒன்று உண்டு. அதாவது, எந்த ஒரு மணமுறையிலும் மணமகள் மணமகனுக்கு சீதனம் (ஸ்ரீதனம்) என்று காணியோ, வீடோ, ரொக்கமோ, டொனேஷனோ கொடுத்ததாக இல்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் ரூபா 400/- சம்பள உயர்வுக்காகத் தோட்டத்தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் இறங்க வைத்தது தவறு, அவசரப்பட்டுவிட்டார் என்று கண்டித்திருக்கிறார் மலையக மக்கள் முன்னணித் தலைவரான பெ.சந்திரசேகரன்.

தோட்டத்தொழிலாளர்கள் அத்தனை பேரும் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று அனைவருக்கும் அறிவித்தலும் கொடுக்கப்பட்டது.

ஆலோசனைக்கூட்டத்தில் ஆறுமுகம் தொண்டமானின் இ.தொ.கா. கலந்து கொள்ளவில்லை. மாறாக அரசுக்கு அவகாசம் கொடுக்காமல் 11.9.2000 தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் இறங்குமாறு இ.தொ.கா. அழைப்பு விடுத்துவிட்டது.



ஆறுமுகம்

விளைவு? தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் வேலைக்குச் செல்வதா வேண்டானமா என்ற குழப்பம் ஏற்பட்டது.

பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்ட தோட்டத்துறை தொழிற்சங்கங்களுக்கு இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் சுமார் 5 இலட்சம் அப்பாவி தொழிலாளர்கள் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மதிப்புக் குறைக்கப்பட்டது.

இதனால் இக்கூட்டு ஒப்பந்தத்தால் தொழிலாளர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடைக்கவில்லை.

பொருட்களின் விலைவாசி உயர்வு ரூபாவின் மதிப்பிறக்கம் என்பவற்றால் ஏற்பட்ட தாக்கத்தை ஈடு செய்யும் வகையில் அரச ஊழியர்களுக்கு 600/- ரூபாவும் தனியார் துறை ஊழியர்களுக்கு 400/- ரூபாவும் வழங்கப்படவேண்டும் என அரசு வர்த்தமானி மூலம் அறிவித்தது.

தற்போது மேலும் 1000 ரூபா வழங்கப்படவுள்ளது. அதேவேளை கூட்டு ஒப்பந்தம் மூலம் சம்பள உயர்வுகளைப் பெற்ற தொழிலாளர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் கிடைக்கா எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்ற ஒரே காரணத்தால் 22 தோட்டக் கம்பனிகள், மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை அரச பெருந்தோட்ட யாக்கம் என்பவற்றில் பணிபுரியும் சுமார் 5 இலட்சம் தொழிலாளர்கள் நேரடியாகவே பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஆறுமுகம் தொண்டமானுக்கு ஏன் இந்த அவசரம்?


ரூபா 400/- சம்பள உயர்வை அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கிறது. கூட்டு உடன்படிக்கைப்படி சம்பளம் அல்லது ஊதியம் பெறுபவர்களுக்கு இந்தச் சம்பள உயர்வு கிடைக்காது என்றும் அரசாங்கம் வர்த்தமானியில் தெரிவித்திருக்கிறது.

இதற்குத் திடுதிப்பென்று வேலை நிறுத்தமா என்று கேட்கின்றார் சந்திரசேகரன்.

வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டவர் ஜனாதிபதி. அவருக்கு கால அவகாசம் கொடுத்து வர்த்தமானி அறிவித்தலில் மாற்றம் செய்யும்படி கேட்கலாம். கூட்டு உடன்படிக்கைப்படி ஊதியம் பெறும் தோட்டத்தொழிலாளர்களுக்கும் அந்த ரூபா 400/- சம்பள உயர்வு கிடைக்கச் செய்யும்படி கோரலாம் என்பது சந்திரசேகரனின் வாதம். கோரிக்கைக்கு ஜனாதிபதி மறுத்தால் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் குதிக்கவைப்பது நியாயம் என்றும் சந்திரசேகரன் சுட்டிக்காட்டுகின்றார்.

தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் கடந்த 8ஆம் திகதி கொழும்பில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கு 8ஆம் திகதியிலிருந்து 14 நாட்கள் அவகாசம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

14 நாட்களுக்குள் சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால்



சந்திரசேகரன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் உட்பட 14 இதர தொழிற் சங்கங்களை உள்ளடக்கிய தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி பெருந்தோட்டக் கம்பனிகளை நிருவகிக்கும் முதலாளிமார் சம்மேளனத்துடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது.

கடந்த ஜூன் மாதம் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கைச்சாத்தான அன்றைய தினம் இரவே ரூபாவின்

அதேவேளை சிறுதோட்ட, தனியார் துறை ஊழியர்களுக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வயம்ப பிலாண்டேஷன், சிலாபம் பிலாண்டேஷன் ஆகிய இரு கம்பனிகளும் கூட (தென்னந்தோட்டம்) வழங்கி விட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

-ஆர். புத்திரசிகாமணி


## மிக விரைவில் ஆரம்பமாகிறது

உங்களுக்குப் பிடித்த

## கேள்வி — பதில் பகுதி!

விஞ்ஞானத்திலிருந்து
விளையாட்டு வரை
அரசியலில் இருந்து
ஆன்மிகம் வரை
எதைப் பற்றி
வேண்டுமானாலும்
கேட்கலாம்!

•

கேள்வி எத்தகையதோ
அத்தகையதாகவே
பதிலும் அமையும்

•

கேள்விகளை அஞ்சல்
அட்டையில் மட்டும் எழுதி
அடியில் உள்ள முகவரியை
வெட்டி ஒட்டி
அனுப்ப வேண்டும்.

•

உங்கள் கேள்விக்
கணைகளைச் சந்திக்க
சுடர் ஒளி (வாரமலர்) தயாராக
இருக்கிறது!

கேள்வி–பதில் பகுதி
சுடர் ஒளி (வாரமலர்)
36/2, பிரெட்றிக்கா வீதி,
கொழும்பு–06.


## திருடர்களுக்கே பணம்!

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனில் ஒரு பகுதியான ஜார்ஜ் டவுனில் உயர்தர அதிகாரிகளும் அமெரிக்க காங்கிரஸின் அங்கத்தினர் பலரும் வசிக்கின்றனர்.

அங்கு கொலையும் கொள்ளையும் மிகுந்திருப்பதால் வெளியில் செல்லும்போது குறைந்தது 20 டாலரையாவது பையில் எடுத்துக் கொண்டு செல்லும்படி ஜார்ஜ் டவுன் வாசிகளின் சங்கம் அங்குள்ள மக்களுக்கு அறிவுரை வழங்கி உள்ளது.

காரணம் பையில் ஒன்றுமில்லாமல் அவர்கள் கையில் அகப்பட்டால் ஒன்றுமில்லாத ஆத்திரத்தில் கொன்றுவிடப் போகிறார்களே என்ற அச்சம்தான்.

## வருங்கால மந்திரி

**மகன்:** அப்பா நான் வருங்காலத்தில் கட்டாயம் ஒரு மந்திரியாகி விடுவேனாம்.

**தந்தை:** அப்படியா?

**மகன்:** ஆமாம். எங்கள் பாடசாலையிலே பொய் சொல்வதில் திறமையானவன் நான்தானாம். ஆசிரியர் சொன்னார்.

# வேண்டாம்

# வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

**ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்**

திருமால்புரி திருவரங்கா...?''

திருவரங்கன் கண் மலர்ந்தான்.

''யார்..., மங்கை நல்லூர் அங்காள பரமேஸ்வரியா?''

''ஆமாம், அரங்கநாதா! நீ குடி கொண்டிருக்கும் கோவிலை புனருத்தாரணம் செய்திருக்கிறார்களே தெரியுமா?''

''தெரியும்?''

''உன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப் போகிறார்களே தெரியுமா?''

''தெரியும்.''

''கும்பாபிஷேகத்திற்கு இந்த ஊர் முதல் மந்திரி வருவதாக ஏற்பாடு செய்திருக்கிறார்களே, தெரியுமா?''

''தெரியும்''

''என்ன அரங்கா, எல்லாவற்றிற்கும் தெரியும், தெரியும் என்று பதில் சொல்கிறாயே? அந்த மனிதன் வந்தால் என்ன நடக்கும் தெரியுமா?''

''தெரியும்'' ''உன்னுடைய கோமேதகம் பதித்த ஒட்டியாணம் காணாமல் போனது போல் இங்கும் ஏதாவது காணாமல் போகும்.''

''ஐயையோ! என்ன அரங்கநாதா, சர்வ சாதாரணமாய்ப் பேசுகிறாய்?'' பரமேஸ்வரி பதைபதைத்தாள்.

''நமக்குப் போடப்பட்ட ஆபரணங்களெல்லாம் அந்தக் காலத்து மன்னன்களும், தர்ம சிந்தனை படைத்த வள்ளல்களும் பக்தியுடன் உயர்ந்த காணிக்கைகளாக அளித்தவை. இப்போது நமது கோவில் கோபுரங்கள் மீது கண்டபடி சாயத்தை மொழுகி கும்பாபிஷேகம் செய்கிறேனென்ற சாக்கில் இக்காலத்து மனிதர்கள் களவாடுவதென்றால் அதை நாம் அனுமதிக்கலாமா?''

பேசப்பேச, அங்காள பரமேஸ்வரியின் குரல் சூடேறியது. திருமால் புன்னகைத்தான்.

''ஈஸ்வரீ! நீ ருத்ரனின் மனைவி என்பது உன் பேச்சில் தொனிக்கும் ரௌத்திரத்திலிருந்தே தெரிகிறது. நீ ஏன் பதற்றப்படுகிறாய்? நீ சொல்லி விட்டாயல்லவா? நான் பார்த்துக் கொள்கிறேன்.''

ஆனால் பரமேஸ்வரி, அரங்கநாதன் சொல்வதைக் கேட்டுத் திருப்தி அடைந்தவளாய்த் தெரியவில்லை.

''உம்... உனக்குத் தெரியாது. மனிதர்கள் புராணத்தில் வந்த ராட்சதர்களைப் போல் சாதாரணமான முரடர்களில்லை.

நான் சொல்லி விட்டேன்... நீ என்ன செய்து கொள்கிறாயோ செய்து கொள்''. அவள் அத்துடன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

திருமால் மீண்டும் கண்ணயர்ந்தான்.

''அரங்கநாதா..., அரங்கநாதா...'' திடீரென ஒலித்த அந்த அவசரக் குரலை கேட்டு அவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான்.

''யார்.., பிச்சாண்டிபுரம் ஈசனா?'' கேட்டான்.

''ஆமாம், உமக்கு விஷயம் தெரியுமா? நீர் இருக்கும் கோவில் கும்பாபிஷேகத்திற்கு இந்த நாட்டு முதல் மந்திரி வரப் போகிறானாமே? அவன் வந்தால் என்ன நடக்கும் தெரியுமா?'' ஈசுவரனின் குரலில் உண்மையான கவலை தொனித்தது.

''ஏனய்யா, ஈசுவரா! இப்போதுதான் உம் மனைவி அங்காள பரமேசுவரி மங்கை நல்லூரிலிருந்து பேசினாள். இப்போது நீரா? என்ன கேட்டீர்? என்ன நடக்கும் தெரியுமா என்றுதானே? ஓ தெரியுமே, உம்ம கோவில் மரகத லிங்கம் காணாமல் போனதுபோல், இங்கும் ஏதாவது காணாமல் போய்விடும் என்கிறீர், அவ்வளவுதானே?''

பெருமாளின் அலட்சியப் பேச்சு, பெருமானுக்குக் கோபத்தை அளித்தது.

''உம்மை எச்சரிக்க நினைத்தேன் பாரும்! எனக்கு நன்றாக வேண்டும். லோகத்திலேயே ஏழைக்கோவில், சிவன்கோவில்தான் என்பார்கள்!. அந்த நிலை உமக்கும் வரவேண்டாமென்று பார்த்தேன். உம்...விதி யாரை விட்டது?

அதுவும் நீர் இடம் பெரிதாகக் கிடைத்தால், அப்பாடா என்று காலை நீட்டிப் படுத்து விடுகிறீர். 'அனந்தசயனம்' என்று பேரும் வாங்கிவிடுகிறீர். இந்த உலகத்திலே பாதிப் பிரச்சினைகள் நீர் தூங்குவதால்தான். இதிலே உமக்குக் காக்கும் கடவுள் என்று பெயர் வேறு! உம்மை எப்படி காபந்து பண்ணுவது என்றே உமக்குத் தெரியவில்லை எப்படி வேண்டுமானாலும் போம்...'' சிவன் கோபத்துடன் ஒதுங்கினான்.

முதல் அமைச்சர் கலந்து கொள்ள, கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடந்தது. அதற்கு அடுத்த நாள் அங்காள பரமேஸ்வரி பதைபதைத்துப் பேசினாள்.

''என்ன அரங்கா... உம் மார்பில் இருந்த நவரத்தின மாலை காணாமல் போய் விட்டதாமே? நான் அப்போதே சொன்னேனே?''

''நீ மாத்திரமா சொன்னாய்? நான் கூடத்தான் சொன்னேன். மற்றவர் பேச்சை மதித்தால்தானே! பேரைப் பார்...

அரங்கநாதனாம். 'உறக்கநாதன்' என்று பெயர் வைத்திருந்தால் இன்னமும் நன்றாக இருந்திருக்கும்.'' ஈசனும் கோபமாகப் பேசினான்.

அவர்கள் இருவர் பேச்சையும் கேட்டுவிட்டு, திருவரங்கன் சிறிது நேரம் பேசாமலிருந்தான். பிறகு அமைதியான குரலில் சொன்னான்.

''இப்போது திருடு போன நவரத்தின மாலை அசல் இல்லை. நகல்.:. போலி... வெறும் சாதாரணக் கற்கள் பதித்த முலாம் பூசிய தகடு...''

''அப்படியா?''

பரமசிவனும், பரமேஸ்வரியும் ஆனந்தத்தில் துள்ளினார்கள். 'திருமால்..., யார்? மாயக் கண்ணனாய் அவதாரமெடுத்தவராயிற்றே! நினைத்து மகிழ்ந்தார்கள்.

''அப்படியானால் ...அந்த... சோழர் காலத்து நவரத்தின மாலை? அதை எப்படி பத்திரப்படுத்தி வைத்தீர்கள்?'' இருவரும் சேர்ந்தே கேட்டார்கள். நாராயணன் இப்போது தாழ்ந்த குரலில் பதில் சொன்னான்.

''அதுபோன கும்பாபிஷேகத்தின்போது அப்போதைய அறநிலையத்துறை அமைச்சர் வந்தபோதே களவு போனது.

இத்தனை நாள் அவர்கள் அச்சமயம் மாட்டிய வெறும் போலி நகையைப் போட்டுக் கொண்டிருந்ததை உங்களுக்குச் சொல்ல எனக்குக் கேவலமாக இருந்தது. இப்போது பரவாயில்லை, அதுவும் போய்விட்டது. நிம்மதியாக இருக்கிறது.''

சொல்லிவிட்டுப் பரந்தாமன் மென்மையாகச் சிரித்தான்.

*- நன்றி: 'அம்பலம்' ஆண்டு மலர்*

**''ஈஸ்வரீ! நீ ருத்ரனின் மனைவி என்பது உன் பேச்சில் தொனிக்கும் ரௌத்திரத்திலிருந்தே தெரிகிறது. நீ ஏன் பதற்றப்படுகிறாய்? நீ சொல்லி விட்டாயல்லவா? நான் பார்த்துக் கொள்கிறேன்.''**

—ராஜ்



# தேவ ரகசியம்

# மசாலா மிக்ஸ்



## யுத்த டாங்கி பறக்கிறதா?

யுத்த டாங்கிகள் ஒரு புறத்தில் வீடுகள் மதில்களைத் தகர்த்துக் கொண்டிருக்க மறுபுறத்தில் யுத்த விமானங்கள் குண்டு மாரி பொழிந்து கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாண மக்கள் தினமும் சந்திக்கும் அவலங்கள் இவைகள். இந்த சூழ்நிலையில் பறக்கும் யுத்த டாங்கிகளும் வந்து விட்டனவா?

இங்குள்ள படத்தைப் பார்த்ததும் இந்தக் கேள்விதானே எழுகிறது? ரஷ்ய ரீ- 80 யுத்த டாங்கியை விற்பனைக்கு விடுவதற்காக அதனை பரீட்சித்துக் காட்டினார்கள். அவ் வேளையில் ஒரு மேட்டிலிருந்து டாங்கி விரைந்து இறங்கிய போது இவ்வாறு பறப்பது போல் தென்பட்டது. அவ்வளவு தான். ஆனால் பறக்கும் சக்தியை இது பெற்று விட்டால் எப்படி இருக்கும்?



## கண்ணீரே காட்டிக்கொடுக்கும்!



பெண்கள் என்றால் கூடவே வருவது அழுகை! அவர்களது கண்ணீருக்கு சக்தியும் அதிகம்! இந்தக் கண்ணீரை (பெண்களின் கண்ணீர் மட்டுமல்ல) வைத்தே ஒருவருக்குப் புற்று நோய் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடித்து விடலாமாம்!

இந்தக் கண்டுபிடிப்பைச் செய்திருப்பது அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள்! ஒருவர் கண்ணீரைப் பரிசோதிப்பதன் மூலம் அவரது குடும்பத்தில் யாருக்காவது புற்று நோய் இருந்தால் அதையும் கூடக் கண்டுபிடித்து விடலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

## விடலையான புடலை



இந்தியாவின் கேரள மாநிலத்தில் பெண்கள் எந்தத் துறையையும் விட்டு வைக்கவில்லை. விவசாயத்திலும் அவர்கள் ஆண்களுடன் போட்டி போடுகிறார்கள். திரிமராடி பஞ்சாயத்தில் ஒரு பெண் தனது விவசாயப் பண்ணையில் நவீன வசதிகளுடன் கூடிய விவசாய உத்திகளுடன் மரக்கறி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார். அவர் தோட்டத்தில் விளைந்த இந்தப் புடலங்காயின் பருப்பத்தைப் பார்த்தாலே அவருடைய திறமை பளிச்சிடவில்லையா?

## சமையல் அறையில் இளவரசர்

ஹோட்டல்களில் விதம் விதமாக உணவு அருந்தும் வசதி இருக்கிறது. இருந்த போதிலும் வீட்டில் கைப்படச் சமையல் செய்து சாப்பிடுவது சிலருக்கு பிடிக்கும். அதுவும் தாங்களே சமைத்து சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள் சில இளவட்டங்கள்.

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் தற்போது வயதுக்கு வந்து விட்டார். காலஞ்சென்ற அம்மா டயானா இளவரசியின் துடிப்பு இவருக்கு இருக்கிறது. இளவரசன் என்ற மமதை இல்லாமல் எல்லோருடனும் ஒட்டி உறவாடுகிறார். அவரைக் ''கொத்தி''க் கொண்டு போவதற்கு ஒரு அழகிகள் பட்டாளமே விரட்டிக் கொண்டிருக்கிறது. ஆயினும் இளவரசர் வில்லியம் இது விடயத்தில் அம்மாவைப் போல் இருக்காமல் அவதானமாகவே இருக்கிறார். தனது கையாலேயே சமைத்துச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுகிறார்.

சமையல் அறையில் தமக்குப்



பிடித்தமான சிற்றுண்டியை இளவரசர் வில்லியம் எவ்வளவு நாசூக்காக சமைக்கிறார் என்பதை இங்குள்ள படம் விளக்குகிறது. அம்மாவும் கல்லூரி மாணவியாக இருந்த போது தாமே சமையல் செய்து சாப்பிட்டிருக்கிறார். டயானாவின் சமையலை ருசிக்கும் மனப்பக்குவம் கணவர் சார்ள்ஸுக்கு இல்லாமல் போனதுதான் எல்லா அழிவுக்கும் காரணம் ஆகும்.

முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் மன்னராகும் வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது. எனவே அடுத்து மன்னராகும் வாய்ப்பு இளவரசர் வில்லியமுக்கு என்கிறார்கள். இந்நிலையில் அவர் சமையல் அறைக்குள் போவது சரியா?

— சிருநா

## தேர்தல் சூட்டைத்தணிக்க...

நம் நாட்டில் தேர்தல் சூடு பிடித்துக் கொண்டிருக்கும் காலமிது. இந்தப் படத்தில் காணப்படுபவரும் ஒரு அரசியல் பிரமுகர்தான். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளர் துணை ஜனாதிபதி அல்கோர், ஒஹையோ மாநிலம் ஸின்சின்னாடியில் ஒரு ஐஸ்கிரீம் பார்லரில் ஐஸ்கிறீம் சுவைத்த போது பிடித்த படம்.

ஜனாதிபதி பில் கிளின்டனின் துணை ஜனாதிபதியாக இருந்து பெருமளவு புகழ் பெற்று விட்டார் அல்கோர். இவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கூறுகிறார்கள். ஜனாதிபதியாகி தமது ''குருவின்'' பாதையில் இவரும் ஒரு ''மோனிகா''வைத் தேடிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

## விமானத்தில் ஒரு ஃபாஷன் ஷோ!

எத்தனை நாளைக்குத்தான் பூமியிலே பாஷன்ஷோவை நடத்துவது! ஒரு மாற்றத்திற்காக விமானத்திலேயே ஒரு ஃபாஷன் சோவை நடத்திப் பார்த்து விட்டனர்.


2001 வசந்தம் - கோடை கலெக்ஷன் என்று பெயரிடப்பட்ட இந்த ஷோவிலிருந்து ஒரு காட்சி தரையைத் தொடும் ஆடையில் தரையில் இறங்கி பவனி வரும் ஒரு அழகியின் எழிற்கோலம் இது.





## முன்னுக்குப்பின் முரண்

முழுப்பக்க விளம்பரங்கள் போட்டதில் ஏற்பட்ட செலவு ஒரு மில்லியனுக்கு மேல். இதனை தபால் திணைக்களம் செலுத்தும் (ஒரு செய்தி). தபால் திணைக்களம் நட்டத்தில் இயங்குகிறது. அதனை கூட்டுத்தாபன மாக்குவோம் - அமைச்சர் (இன்னுமொரு செய்தி). தபால் திணைக்களம் நட்டமடையவில்லை வீண் விரயமும் நிர்வாகச் சீர்கேடுமேயுள்ளது - தொழிற்சங்கத் தலைவர் உபாலி நவரத்ன (இன்றைய செய்தி).



## ஒளிந்திருக்கும் முகம் எது?

கண்டுபிடிப்பதற்கு இதோ 'க்ளு'

இவர் 'ஒளி'யைப் பெயரில் கொண்ட ஒரு பிரபலமான நடிகை!

'வாலி'யில் அறிமுகமாகி 'பூவே பூவே' என பூவெல்லாம் கேட்டுப் பார்த்தவர்!

'குஷி' வரவால் குளிர்ந்து போயிருக்கும் இவர். இப்போது மார்க்கண்டேய நடிகரின் வாரிசோடு உயிரிலே கலந்து விட்டிருக்கிறார் என்று ஒரு கிசுகிசு.

கண்டு பிடித்த வாசகர்கள் தங்கள் பதிலைஅஞ்சல் அட்டையில் எழுதி, பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

'சுடர் ஒளி'

36/2 பிரெட்ரிகா வீதி, கொழும்பு – 6



சென்ற வார விடை
ராணி முகர்ஜி

## இரு தோணிகளில் கால்


ஒரு வேட்பாளர் இரண்டு கட்சிகளில் தேர்தலில் நிற்கலாம். அவர் வேட்புமனு செல்லுபடியாகும். ஆனால் அவர் வெற்றி பெறும் பட்சத்தில் அவர் தனது வாக்கை அளிக்கவோ, நாடாளுமன்றத்தில் இருக்கவோ முடியாத நிலை ஏற்படும் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் கூறியிருக்கிறார்.

## பதில் அளிக்கிறார் சினிமா சிங்காரம்



பாரதிராஜா, பாலசந்தர், பாலுமகேந்திரா போன்றவர்கள் சினிமாவை விட்டு ஒதுங்கி இருக்க என்ன காரணம்?

பாலசந்தர், பாலுமகேந்திரா இருவரும் சின்னத்திரையில் பிஸியாகி விட்டார்கள். இப்போதைய கிராஃபிக்ஸ் யுகத்தில் என்னால் எதுவும் புதுமையாக செய்ய முடியாது என்று பகிரங்கமாக பாலசந்தர் ஒப்புக்கொண்டிருக்கிறார். பாலுமகேந்திரா எப்போதுமே பரபரப்பான, பிஸியான டைரக்டர் இல்லை. பாரதிராஜா 'கடல் பூக்கள்' என்ற ஒரு படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். இப்போது இருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியையும், புதிய அணுகுமுறையையும் வைத்து சினிமாவை இயக்கினால் பாரதிராஜா பிழைத்துக் கொள்வார். கோவணம் கட்டி கிராமத்து ஆசாமிகள் நடமாடுவதையும், கோழிக்குஞ்சுக்கு கலர் பெயின்ட் அடித்து ஓடவிடுவதையும் பாரதிராஜாவே...ப்ளீஸ் நிறுத்திக் கொள்ளுங்கள்.



சரத்குமார் செய்யும் கதாபாத்திரங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஏதாவது ஒரு ஜாதியை மையப்படுத்தியே இருக்கிறதே?

இனக்கலவரங்களும், ஜாதிப் பூசல்களும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும்போது சரத்குமார் இதுபோல் ஜாதி பெயரைக் குறிப்பிட்டு கதாபாத்திரங்கள் செய்வது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையைச் சொறிந்து கொள்வது போல் ஆகிவிடும். 'சூரியவம்சம்' 'நாட்டாமை' போன்ற படங்களில் கிராமத்து பெரியவராக குறிப்பிட்ட ஜாதிக்கு பெருமை ஏற்படுத்துபவராக நடித்தாலும் நடித்தார். படத்திற்கு படம் இது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது சரத்திற்கு எப்படியோ தெரியவில்லை. படம் பார்க்கும் மக்களுக்கு எரிச்சல் ஏற்படுத்தும் என்பது உண்மை. தப்பித்தவறி புண்படுத்தும்படி வசனங்கள் படத்தில் இடம் பெறும் போது தேவையில்லாத சங்கடங்களை ஏற்படுத்தும். இதை சரத் புரிந்து கொள்ளாதவரை பிரச்சனை எப்போதாவது நிச்சயம் வெடிக்கும்.

# தேவனின் படைப்புகளும் கர்த்தரின் ஏழு வசனங்களும்



புனித வேதாகமத்தில் உள்ள சகல வாக்கியங்களுக்கும் அவற்றோடிணைந்த கருத்துள்ள வேறு வாக்கியங்களும், பொருளும் இருக்கும் என்பது திண்ணம்.

இதன்படி ஆதியில் தேவனது படைப்பையும், பிந்திய நாட்களில் கல்வாரி மேட்டிலே கர்த்தரின் இறுதி வசனங்களையும் ஒப்பிட்டு நோக்குவோம்.

*முதலாம் நாள்*

படைப்பின் போது முதலாம் நாளிலே இரவும், பகலும் படைக்கப்பட்டன.

முதலாவது சிலுவைத் திருவசனம் ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.''

எது இருள்? எது ஒளி? எது தவறு? எது சரி? என்று அறியாதவர்கள் எம்மில் எத்தனையோ பேருளர். இரவையும் பகலையும், அதாவது ஒளியையும் இருளையும் பகுத்து உணர வைக்கக் கூடியவர் கடவுள் ஒருவரே.

''வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தான்'' என்று வேதம் கூறுகிறது. அப்படியிருந்தும் மனிதன் தன் அறியாமையினாலே அதற்குள்ள வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளவில்லை. எனவேதான், இவர்களுக்கு மன்னியும் என்றார்.

*இரண்டாம் நாள்*

இரண்டாம் நாளிலே ஆகாய விரிவு படைக்கப்பட்டது.

அந்த ஆகாய விரிவில் தான் எங்கோ எப்படியோ ''பரதீஸ்'' என்றொரு இருப்பிடம் இருப்பதாக விசுவாசிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

எனவே சிலுவை மீது தரப்பட்ட இரண்டாம் வசனம் இதற்கு ஒத்ததாகவே அமைந்துள்ளது எனத் துணிந்து கூறலாம்.

இரண்டாவது வாக்கியம் ''இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுறேன்'' என்பதாகும்.

*மூன்றாம் நாள்*

மூன்றாம் நாளின் படைப்பு ''பூமி, சமுத்திரம், தாவரங்கள்'' என்பனவாகும்.

இப்படைப்பில் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. பூமியைச் சூழ சமுத்திரம். அணைத்து ஆதரிக்கும் அன்னை போன்று ஆழ்கடல். மறுபுறம் தாவரங்கள். பூமியைப் போஷிப்பதற்காக நிறுவப்பட்டவை.

இதற்கொப்பவே சிலுவையில் வரும் மூன்றாம் வாக்கியமும், ''ஸ்தீரியே! அதோ உன் மகன்; அதோ உன் தாய்'' நீங்கள் ஒருவர் பாரத்தை ஒருவர் ஏற்று, ஒருவரையொருவர் அனுசரித்து, ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு வாழ வேண்டும் என்ற நோக்கில் இவ்வசனம் மொழியப்பட்டிருக்கிறது.

*நாலாம் நாள்*

நாலாம் நாள் சூரிய, சந்திர நட்சத்திரங்கள் படைக்கப்படுகின்றன.

நாலாம் வாக்கியம் ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்பதாகும். அவ்வேளை, சூரியன் இருளடைந்து சந்திரன் ஒளியிழந்து நட்சத்திரங்கள் வலுவிழந்த காரணத்தால் பூமியெங்கும் அந்தகாரம் உண்டானதாக வேதம் கூறுகிறது.

*ஐந்தாம் நாள்*

ஐந்தாம் நாள் நீர்வாழ்வனவும், பறவைகளும் படைக்கப்பட்டன.

இயேசு ஒரு முறை பின்வருமாறு கூறினார். ''நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை''

அதே போல் நீரையும் நீர்வாழ்வனவற்றையும், பழவர்க்கங்களையும் பறவைகளையும் படைத்தவர் ஈற்றில் (ஐந்தாம் வாக்கியமாக) ''தாகமாயிருக்கிறேன்'' என்று சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாயினார்.

*ஆறாம் நாள்*

ஆறாம் நாளிலேதான் மிருகங்களையும் மனிதனையும் உருவாக்கினார். இத்தோடு அவரது படைப்பும் முடிவுற்றது. ஆறாம் வாக்கியமாக ''முடிந்தது'' என்றே கூறியுள்ளார். இதைத் தெளிவுபடுத்த வேண்டியதில்லை.

*ஏழாம் நாள்*

ஏழாம் நாளில் ஓய்ந்திருந்த தேவன் தனது இறுதி வார்த்தையாக இறைவனிடத்தில் பேசும் வாக்கியம் ''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' என்பதாகும்.

இவ்வண்ணமே இச்சிலுவைத் திருவசனங்களுக்கு புனித யோவான் ''பத்மு'' தீவில் கண்ட தரிசனங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

-தேவதாசன் ஜெயசிங்



# கருணை மதம் இஸ்லாம்: மிருக வதைக்கு அனுமதி இல்லை



ஒருவருக்கொருவர் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளப்பணிக்கும் இஸ்லாம், விலங்கினத்தைக் கூட அரவணைக்கத் தவறவில்லை. விலங்கினத்தை கொடூரமாக, நடத்துவதையும் இம்சை செய்வதையும் இஸ்லாம் தடுக்கிறது.

இறைச்சிக்காக விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சில மிருகங்களை மட்டும் அறுக்க அனுமதித்திருக்கிறது இஸ்லாம். அதேவேளை, அவசியமின்றி மிருகங்களைக் கொலை செய்வதையும் அவற்றைக் கொடுமைப் படுத்துவதையும் இஸ்லாம் தடுக்கிறது.

''சிட்டுக் குருவியையோ அல்லது அதனை விட மிகச் சிறிய பறவைகளையோ உரிய நியாயமின்றிக் கொலை செய்தால் கூட அதனைப் பற்றியும் இறைவன் நாளை மறுமையில் அவனிடம் கேட்பான்'' என்று மாநபீ (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''தேவையின் நிமித்தம் அறுக்கப்படுகின்ற மிருகங்களை அறுக்கும் போதும் எல்லா வகைகளிலும் கனிவாக நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் மனிதன் எல்லாவற்றுடனும் கருணையாக நடந்து கொள்வதை இறைவன் கடமையாக்கி இருக்கின்றான். என்ற கருத்தை ''புஹாரி'' யில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

பிராணிகளுக்கு எந்த அளவு அன்பு, கருணை காட்ட வேண்டுமென இஸ்லாம் பணித்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவற்றுக்கு செய்யப்படும் தீவினைகள், துன்பங்களை பெருங்குற்றமென இஸ்லாம் கணிக்கின்றது.

ஒரு முறை பூனையொன்றை ஒரு பெண் கட்டி வைத்தாள். அதற்கு உணவோ, நீரோ அவள் கொடுக்கவில்லை. இறுதியில் கட்டப்பட்ட நிலையிலே அப்பூனை இறந்து விட்டது. இச்செயலின் காரணமாகவே அப்பெண் (நரகத்துக்கு செல்லும்படியான) பாவியானாள் என் மொழிந்தார்கள். கோமான் நபி (ஸல்) அவர்கள்.

(புஹாரி)

மிருகங்கள் விடயத்தில் நாயகத் தோழர்கள், முன்னோர்கள் மிகவுமே பேணுதலாக நடந்து கொண்டார்கள்.

இரண்டாம் கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சியில் ஒட்டகம், கழுதை போன்ற சுமைகள் சுமக்கும் பிராணிகளுக்கும்கூட மட்டுப்படுத்தப் பட்ட பாரங்களைச் சுமக்க வேண்டுமென சட்டம் வகுக்கப்பட்டிருந்தது.

பிராணிகளுக்கு ஒருவர் தாமாக வேதனை செய்யாவிடினும், பிற வழிகளில் வேதனைகள், சங்கடங்களை ஏற்படுத்துவதையும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வெறுத்தார்கள்.

''இரண்டு பிராணிகளைத் தூண்டி விட்டு; அவை ஒன்றையொன்று மோதுவதைக் கண்டு மகிழ்பவர்களுக்கு, அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்ப பிறிதொரு சமயத்தில் மிருக கொடுமையை வன்மையாக கண்டித்தார்கள் தாஹா நபியவர்கள்.

மிருக இனமும் அல்லாஹ்வின் படைப்பினமே. எனவே மிருகங்களுக்கு இரக்கங்காட்டி ஆதரிப்பது, இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெற வழி வகுக்கும்.

பனீ இஸ்றாயில் காலத்தில் விபசாரத்தில் காலங் கழித்து வந்த ஒரு பெண் இருந்தாள். அவள் ஒரு நாள் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். செல்லும் வழியில் ஒரு கிணற்றடியில் தண்ணீர்த் தாகத்தினால் ஒரு நாய் தன் நாவை வெளியே தொங்க விட்ட வண்ணம் அக்கிணற்றைச் சுற்றி வருவதை அப்பெண் அவதானித்தாள்.

உடனே அந்நாயின் மீது பரிதாபப்பட்டு; தான் அணிந்திருந்த ''ஹுப்பு'' (ஒருவகை பாதரட்சை)யைக் கழட்டி அதன் மூலம் தண்ணீர் அள்ளி அந்நாயின் தாகத்தை போக்கினாள். இதன் காரணத்தினால் அப்பெண் சுவர்க்கம் நுழைகிறாள். (புஹாரி)

[அந்த ஹதீஸ் வேறு சில விதமாகவும் புஹாரியில் பதியப்பட்டுள்ளது.]

ஒரு நாய்க்கு நீர் புகட்டியதன் காரணத்தினால் ஒருவரது மிகப் பாரதூரமான பாவம் மன்னிக்கப்பட்டு; சுவர்க்க வாசகம் கிடைக்கும் என்றால் மிருகங்களுக்கு இரக்கங் காட்டுவது எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாகிறதல்லவா?

''நீங்கள் பசும் புல்லார்ந்த காலத்தில் பயணம் செய்வதாயிருந்தால், ஒட்டகம் அதன் மூலம் பயன் பெறுமாறு செய்யுங்கள்.

கடும் வரட்சியான பருவத்தில் பிரயாணம் செய்தால், அதனை விரைவாக ஓட்டிச் சென்று விடுங்கள்'' என்ற இறைத் தூதரின் இனிய வார்த்தை மேலும் மிருக இனத்துக்கு நீதத்தை வழங்குகின்றது.


அண்ணல் நபியின் அருமைத் தோழர் இப்னு மஸ் ஊத் (ரலி) அவர்கள்; ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கிறார்கள்.

''ஒரு நாள் நாம் அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களோடு ஒரு பிரயாணத்தில் இருந்தோம். அவ்வேளை எறும்புகள் கூடியிருந்த ஓர் இடத்தை நெருப்பினால் பொசுக்கினோம் இதனைக் கண்ணுற்ற நபியவர்கள், ''இவ்வாறு நெருப்பினால் எரித்தது யார்? என்று கோபமாக வினவினார்கள்.

''நாங்கள்தான் நாயகமே!'' என பதிலளித்தோம் இதற்கு பெருமானார் அவர்கள் ''இவ்வாறு நெருப்பினால் பொசுக்குவது கூடாது; உலக இரட்சகனான அல்லாஹ் மாத்திரமே அவ்வாறு செய்வதற்கு உரித்தானவன்'' என்று கூறித் தடுத்தார்கள்.

எறும்புக்குக் கூட துன்பம் விளைவிப்பதை அனுமதிக்காத இஸ்லாம் எப்படி மிருக வதையை அங்கீகரிக்கும் என்ற உண்மையை இதன் மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்

- மௌலவி ரஷீத் எம். ராஸிக்.



ஒவ்வொரு முறையும் தேர்தல்கள் வருகின்றன.

ஒவ்வொரு முறையும் யாராவது ஓர் அரசியல்வாதி வெற்றி பெற்றுக் கொண்டு தான் இருக்கிறார்.

ஆனால் எப்போதுமே தோற்பது மக்கள்தான். ஒவ்வொரு தேர்தலின் போதும் அவர்கள் எதிர்பார்ப்புகளும் கனவுகளும் தவணைமுறையில் உசுப்பி விடப்படுகின்றன.

'வாக்குறுதிகள்' என்னும் கனவுக் கன்னியின் பிடியில் சிக்கிப் போகும் வாக்காளர்கள், அதிலிருந்து தெளிவு பெற்று மீளும் சமயம், அடுத்த தேர்தல் வந்து விடும். மீண்டும் 'கவர்ச்சிக்கன்னி' தயாராவாள்.

இப்படித்தான் ஒவ்வொரு முறையும் நடந்து கொண்டிருக்கிறது.

எமக்கு கிடைத்த தகவல்களின்படி முக்கிய அரசியல்வாதிகள் சிலரது பி.ஏ.க்களின் தலைமுடி அண்மையில் விரைவாகக் கொட்டி விட்டதாம்.

மேலும் சில பி.ஏ.க்களுக்கு நரைக்க வேறு தொடங்கி விட்டதாம்! காரணம் எத்தகைய வாக்குறுதிகளை, எந்தவிதமான வாக்குறுதிகளை,

## சொன்னது நீதானா?

### ஒரு புதுமைப் பகுதி ஆரம்பம்!

எவ்வளவு தூரம் கவர்ச்சிகரமாகத் தரமுடியும் என்கிற பெருத்த சிந்தனையில் அவர்கள் ஆழ்ந்து இருப்பதுதான்.

ஏற்கனவே சொல்லி நிறைவேறாத வாக்குறுதிகளைக் கூட புதியவிதமாகச் சொல்லி மக்களை மயக்க ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் தெரிகிறது.

இந்த நிலையில் கடந்த தேர்தலில் முக்கிய அரசியல்வாதிகள் அள்ளி இறைத்த வாக்குறுதிகள் என்னென்ன, அவற்றில் அவர்கள் நிறைவேற்றியது – நிறைவேற்றத் தவறியது எவையெவை என்பதையெல்லாம் அம்பலப்படுத்த ஓர் அரபிக் குதிரையின் வேகத்துடன் புறப்படுகிறது சுடர் ஒளி!

இனி ஒவ்வொரு வாரமும் ஒரு முக்கிய அரசியல்வாதியின் வாக்குறுதிகள் குறித்து இப்பகுதியில் அலசப்படும்.

அலசப்போவது யார்?

நீங்கள்தான்!

ஆம், வாசகர்களே.. எந்தத் தலைவர்களைப் பற்றியும் எந்தக் கட்சி பற்றியும் – அதன் வாக்குறுதி தொடர்பாகக் காரசாரமாக – அதே நேரத்தில் உண்மைத் தகவல்களுடன் எழுதி அனுப்புங்கள்!

தபால் மீது 'சொன்னது நீதானா?' என்று குறிப்பிட வேண்டும்.

எடுங்கள் பேனாவை! உங்கள் ஜனநாயகக் கடமையைத் துவக்குங்கள்!

**G.C.E. A/L.** தேர்வுக்குத் தோற்றிய பாடசாலை மாணவர்களுக்கு விசேட **English** பாடநெறி

* **Spoken English**
* **TOEFL**

**V.Varathasuntharam**
39, 36வது ஒழுங்கை,
வெள்ளவத்தை.

# மறைக்கப்பட்ட புதைகுழிகள் புதைக்கப்பட்ட உண்மைகள்

ஆர். துரைரத்தினம்

**நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தமது வாக்கு வங்கியை நிரப்பிக்கொள்வதற்காகப் பறந்து கொண்டிருக்கின்றன. மக்களோ நடந்த சோக சம்பவங்களை அசை மீட்டு ஆழ்ந்த துயரில் இருக்கிறார்கள்**

இரு தசாப்தங்களாக மட்டக்களப்பு மக்கள் அனுபவித்து வரும் சொல்லொணாத் துயரங்களின் உச்சக்கட்ட நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்தது கிழக்கு பல்கலைக்கழகத்தில் 192 பேர் காணாமல் போன சம்பவம். அதன் 10 ஆவது ஆண்டு துக்கதினம் சமீபத்தில் மட்டக்களப்பில் அனுட்டிக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான பின் கைதுகள், காணாமல்போதல், வெள்ளைவான் கடத்தல், சித்திரவதைகள், படுகொலைகள் எனக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் மீது பல்வேறு அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன.

1990 செப்டம்பர் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழகத்தில் அகதிகளாக இருந்த 158பேர் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் காணாமல் போனமை-

9.9.1990 அன்று சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி-

இராணுவத்தளபதி ஜெரி டி.சில்வாவும் கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமுக்கு வந்து கைது செய்யப்பட்ட 158 பேரும் விசாரணையின் பின் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

இவர்களுக்கு என்ன நடந்தது என அவர் தெரிவிக்கவில்லை.

மட்டக்களப்பு சமாதானக்குழுவினர் 158 பேரும் 16 பேருமாக 174 பொதுமக்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குப் பல தடவைகள் கொண்டு வந்தனர்.

## எவரும் வீடு வரவில்லை

அப்போது பாதுகாப்புப் பிரதியமைச்சரின் செயலாளர் மட்டக்களப்புச் சமாதானக் குழுவுக்கு எழுதிய கடிதத்தில் 1990 செப்டம்பர் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதிமுகாமில் 32பேர் மட்டுமே கைது செய்யப்பட்டனர் என்றும் -

அவர்கள் கூட விசாரணையின் பின் 24 மணிநேரத்திற்குள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் என்றும்-

இவர்களில் யாரும் பாதுகாப்புப் படைகளின் தடுப்புக்காவலில் தற்போது இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

அந்த 32 பேரின் பெயர்ப்பட்டியலையும் அனுப்பிவைத்திருந்தார்.

ஆனால் இந்தப் பெயர்பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்களோ அல்லது கைது

ஆணைக்குழு அறிக்கை, சாட்சிகள் மூலம் தெரிவித்திருக்கிறது.

சம்பவதினம் கடத்திச் செல்லப் பட்டவர்களில் காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பிவந்தவர் கந்தசாமி கிருஷ்ணகுமார் என்ற இளைஞர், அவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் 184 பேருக்கும் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமில் நடந்த பயங்கரம் பற்றி விவரித்திருந்தார். (ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பக்கம் 33,44,)

9.9.90 அன்று மாலை 4.30 மணியளவில் சத்துரக்கொண்டான் பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி, ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அனைவரையும் சத்துரக்கொண்டான் இராணுவ முகாமுக்கு வருமாறு படையினர் உத்தரவிட்டனர்.

இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பொதுமக்கள் அனைவருக்கும் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார். வீடுகளில் யாரும் இருக்கக்கூடாது அனைவரும் முகாமுக்கு வரவேண்டும் என்ற இராணுவ சிப்பாயிகளின் உத்தரவு இது.

இந்த உத்தரவுக்குப் பணிந்து அனைத்துமக்களும் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்குச் சென்றனர் முகாமில் அனைவரும் அடைத்துவைக்கப்பட்டனர் இரவு 7 மணிக்குப் பின்னர் முகாம் பின்புறத்திற்குக் கொண்டுவரப்பட்டு அனைவரும் கட்டிப் படுகொலை செய்யப் பட்டனர்.

வெட்டி வீசப்பட்ட கிருஷ்ணகுமார் என்ற இளைஞர் காயங்களுடன் இராணுவத்

## மட்டக்களப்பு மக்கள் நெஞ்சை விட்டு அகலா நினைவு அலைகள்

ஆகிய கிராமங்களைச்சேர்ந்த 184 பொதுமக்கள் கடத்திச்செல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்டமை-

28.8.1990 அன்று சித்தாண்டி முருகன் கோவில் அகதிமுகாமில் வைத்து 33 பேர் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனமை-

இவை அராஜகத்தின் உச்சக்கட்டக் கொடுமுடிகளாக அமைந்தன.

1990 ஜூன் 10ஆம் திகதிக்குப்பின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுமார் 45 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

அதிகாலை 6 மணிக்கு கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமைச் சுற்றிவளைத்த கொம்மாதுறை இராணுவத்தினர் அகதி முகாமில் இருந்த அனைவரையும் பொதுமைதானத்திற்கு வருமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்: மக்கள் உடனடியாக மைதானத்திற்கு வந்து சேர்ந்தனர்.

ஐந்து மூகமூடிகள் முன்னிலையில் நிறுத்தப்பட்டு இவர்களில் 158 பேர் கைது செய்யப்பட்டனர் கைகள் கட்டப்பட்டு இ.போ.ச பஸ் வண்டிகளில் ஏற்றி வாழைச்சேனைப் பக்கம் கொண்டு செல்லப்பட்டனர்.

## ஜோசப் எம்.பி.

பின்னர் 23.9.90 அன்றும் இதேபோல் சுற்றிவளைப்பை நடத்தி அங்கிருந்த 16 பேரைக் கைதுசெய்துசென்றனர்.

அப்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராசசிங்கம் இச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் கவனத்திற்குக்கொண்டுவந்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் களையும் அகதிமுகாமுக்கு அழைத்து வந்து நிலைமைகளை விளக்கினார்.

செய்யப்பட்ட 174பேரில் எவர் ஒருவரோ பத்து வருடமாகியும் இன்னும் வீடு வந்து சேரவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவி சந்திரிக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டதும் கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்கள் பற்றி ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கே. பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்தியது.

## ஆணைக்குழு பரிந்துரை

ஜனாதிபதி ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் இச்சம்பவத்திற்குப் பொறுப்பாக இருந்த கப்டன் தரத்திலான மூன்று பேரும் மேஜர் தரத்திலான இருவருமாக மொத்தம் ஐந்து பேரின் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்களே இச்சம்பவத்திற்குப் பொறுப்பு என்றும் இவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பரிந்துரைசெய்தது.

ஆனால் இந்த ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்த சட்ட நடவடிக்கைகளோ, ஒழுக்காற்று நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை.

விசாரணைக்கென அழைத்துச் செல்லப் பட்ட 174 பேருக்கும் இதுவரை என்ன நடந்தது என்று தெரியாமல் உறவினர்கள் கதிகலங்கி நிற்கிறார்கள்.

இதே போன்ற பெரும் எண்ணிக்கை யானவர்கள் ஒரே தடவையில் காணாமல் போன மற்றொரு சம்பவம்தான் 9.9.1990இன் சத்துருக்கொண்டான் படு கொலையாகும்.

ஒருவயதுக்குட்பட்ட ஐந்து குழந்தைகள் உட்பட 184பேர் ஒரே இரவில் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப் பட்டதாக ஜனாதிபதி

திணருக்குத் தெரியாமல் முகாமிலிருந்து தப்பிவந்தார் என்றும் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு காப்பாற்றப்பட்டார் என்றும் விசாரணைக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவயதுக்குட்பட்ட 5 குழந்தைகள். பத்துவயதிற்கு உட்பட்ட 42சிறுவர் சிறுமிகள், 85 பெண்கள், 28 வயோதிபர்கள் உட்பட மொத்தமாக 184 பேர் படுகொலை செய்யப்பட்டனர் என விசாரணைக்குழு அறிக்கையில் விவரம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது (விசாரணை ஆணைக்குழு அறிக்கை பக்கம் 102 -106)

இந்தப் படுகொலைகள் பற்றியோ கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் எங்கே புதைக்கப்பட்டன என்பது பற்றியோ எத்தகைய விசாரணைகளும் மேற்கொள்ளப் படாமல் எல்லாம் மூடிமறைக்கப்பட்டு விட்டன.

## வேட்பாளர்கள் கரிசனை

சத்துருக்கொண்டான் படுகொலைச் சம்பவங்கள் பற்றியும், அந்தப் படு கொலைகளின், சூத்திரதாரிகள் யார் என்பது பற்றியும் அம்பலப்படுத்தப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப் படவேண்டும். இச்கிராமத்திற்கு வந்து ஆய்வினை மேற்கொண்ட அமெரிக்காவைச் சேர்ந்த செல்வி. பற்றிக்கா லோரான்ஸ் என்ற மனித உரிமை ஆர்வலர் கூட விசாரணைக்குழுத்தலைவர் நீதியரசர் பாலகிருட்ணருக்கு 7.2.1995இல் எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்.

மட்டக்களப்பின் பல இடங்களில் மறைக்கப்பட்ட புதைக்குழிகளுக்குள் அதற்கு காரணமாக இருந்த சூத்திரதாரிகள் யார் என்ற உண்மைகளும் புதைக்கப்பட்டு விட்டன.

வாக்குக் கேட்டு வரும் வேட்பாளர்கள் இதுபற்றிக் கவலைப் படுகிறார்களா? அவர்களுக்கு தாம் வெல்ல வேண்டும் என்ற ஒரே கரிசனைதான்!

**மிஸ்டர் க்றோ**

# டொமினிக் ஜீவாவுக்கு இப்படியும் ஒரு கௌரவம்



ஜீவா சம்ஸ் அயூப் கனகரத்தினம் காசீம் சம்சாத் பேகம் சௌமியன் பீரிஸ்

புதிய பத்திரிகை தானே என்று தட்டிக் கழிக்காமல் சுடர் ஒளிக்கும் அழைப்பு விடுத்தது தகவல் திணைக்களம்.

எதற்கு?

பெருவிழா ஒன்றிற்கு!

தேசிய இன ஒற்றுமைக்கு மொழி ஆற்றலைப் பயன்படுத்திய சிங்கள, தமிழ் முஸ்லிம் அறிஞர்களில் 11 பேருக்கு நன்றி தெரிவிப்பதற்கு. அத்துடன் அவர்களுக்கு ரூபா 25,000/- பணமும் கேடயமும் சான்றிதழும் கொடுத்து அவர்களைக் கௌரவிப்பதற்குமான விழா அது.

மிஸ்டர் க்றோ விடுவாரா? மகிழ்ச்சியுடன் பறந்தார் பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்துக்கு .

அங்கே நாற்புறமும் ஒரு நோட்டம் விட்டார். மேடையில் பிரமுகர்களின் ஆசனங்களுக்குப் பின்னால் விழாவின் பெயர் பொறிக்கப்பட்ட பதாகை மிஸ்டர் க்றோவின் கண்களில் பட்டது. பதறிப் போனார். அதில் தமிழ்க் கொலை.

நன்றி தெரிவித்து கௌரவிக்கப்படுகின்ற நான்கு சிங்களவர்கள், நான்கு முஸ்லிம்கள், மூன்று தமிழர்கள் ஆகியோரின் விவரங்கள் அடங்கிய பிரசுரம் ஒன்று மிஸ்டர் க்றோவுக்குத் தரப்பட்டது. அதைப் பார்த்தால் அதிலும் தமிழ் சிதைக்கப்பட்டிருந்தது.

தமிழ்க் கொலை மூலம் இன ஒற்றுமையா?

அந்தத் துர்ப்பாக்கியம் போகட்டும்!

நன்றி தெரிவித்து கௌரவிப்பதற்கு என்று அழைத்திருந்த தமிழர்களில் ஒருவரையும் அல்லவா மேடையில் நாணிக் கோணி, கூனிக் குறுகி நிற்க வைத்துவிட்டார்கள்!

முதன் முதலாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா மேடைக்கு அழைக்கப்பட்டார். அவரும் மிகுந்த உற்சாகத்தோடு தமக்குரிய பரிசைப் பெறுவதற்காக மேடைக்குச் சென்றார். அமைச்சர் ஜி.எல். பீரிஸும் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக் கொடியும் பரிசை வழங்கத் தயாராக இருந்தார்கள்.

முதலில் பரிசைப் பெறவேண்டியவர் டொமினிக் ஜீவா அல்லர், எம்.எச்.எம். சம்ஸ்தான். தவறாக டொமினிக் ஜீவா அழைக்கப்பட்டு விட்டார் என்பது அப்போது தான் ஏற்பாட்டாளர்களுக்குத் தெரியவந்தது.

அழைத்தவர் சாமான்யமானவர் அல்லர். பிரபல்யமான வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர். ஒலி வாங்கி மற்றும் கமரா முன் இருந்து அறிவிப்புச் செய்து அனுபவம் பெற்றவர். மேடை யேறியதும் தடுமாறி விட்டாரே!

பாவம் டொமினிக் ஜீவா. அவருக்கு என்னவோ மாதிரி இருந்தது. அமைச்சர்கள் அவருடைய முதுகில் தட்டியது தெரிந்தது. மன்னிப்புக் கேட்டார்களா அல்லது "டேக் இற் ஈசி" (Take it easy) என்று சொன்னார்களோ தெரியாது.

எம். எச்.எம். சம்ஸ், டொமினிக் ஜீவா ஆகிய இருவருடன் முகம்மது ஐயூப், தம்பு கனகரத்தினம் , நிஸார் எம்.காசிம், செல்வி சம்சாத் பேகம், சுந்தரம் சௌமியன், டேவிட் பீரிஸ், ஆதர் ஜோன் பெர்ணான்டோ, விஸ்வ நாத், வஜிரசேன, வஜிரபிரபாத் விஜயசிங்க ஆகியோர் மேடைக்கு அழைத்து கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கும் விழா கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன தலைமையில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. ஆயினும் அமைச்சர் றிச்சட் பத்திரன சுகவீனம் என்று சொல்லி வராமலே நின்றுவிட்டார். அதனால் அமைச்சர் ஜி.எல். பீரிஸும் லக்ஷ்மன் ஜெயக் கொடியும் காரியத்தை ஒப்பேற்றினார்கள்.,

இனங்களுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டு பாரிய இடைவெளி தோன்றக் காரணமாக இருந்தது கல்வித் திட்டம் என்று அமைச்சர் பீரிஸ் கல்வித்திட்டத்தைச் சாடினார்.

சிறுபான்மையினர் என்ற சொல் ஓர் இனத்தைத் தாழ்வு படுத்தும் எனக் குறிப் பிட்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு கௌரவமான பதத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி.

விழா ஆரம்பத்தில் இன ஒற்றுமைக் கீதம் என்று எதையோ சிறந்த பாடகர்களான குணதாச கபுகேயும் முத்தழகும் முறையே சிங்களத்திலும் தமிழிலும் ஒருவர் பின் ஒருவராக வரிவரியாக மாறி மாறிப் பாடினார்கள். இசை ஓரளவு இனிமையாக இருந்தாலும் பொருள் விளங்காததால் பலருக்கு அது விழல் ஆகவே போய் விட்டது.

ஒருவாறு விழா முடிந்ததும் ஒரு நிமிஷம் கூடத்தாமதிக்காமல் ஆபிஸுக்கு இறக்கையை விரித்து விட்டார் மிஸ்டர் க்றோ.

# படித்தவன் திருந்தினால் பாமரன் தானாக திருந்துவான்





பூம் பூம் ஷக்கலக்கா ரேவதியை அவருடைய அடையாறு பங்களாவில் சந்தித்தோம்.

நடிப்பு, சமூக சேவை, நடன நர்த்தகி, டி. வி தொடர் தயாரிப்பு எனப் பல முகங்களுடன் உலவி வரும் ரேவதிக்குப் பிடித்த முகம் எது?

நடிப்பதும் டி. வி. தொடர் தயாரிப்பதும் என் தொழில். நடனத்தை தொடர்ந்து என்னால் பிராக்டிஸ் செய்ய முடிவதில்லை . சமூகத்தின் மீது வைத்துள்ள பற்று, ஆர்வம்தான் நிஜமானது . ஒவ்வொருத்தர் சினிமாவில் தாங்கள் சம்பாதித்த பணம், புகழை வைத்துக் கொண்டு சொந்தமாகத் தொழில், வர்த்தகம் போன்றவற்றிற்குப் பயன்படுத்தும் போது நான் இந்தச் சமூகத்திற்கு ஏதாவது நல்லது செய்யத்தானே பார்க்கிறேன்.

என் கவனத்திற்கு வரும் பிரச்சனைகளை உடனே அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதன் மூலம் நல்லது நடக்கையில் அதில் எனக்கு ஒரு ஆத்மதிருப்தி. சினிமா, டி. வி. இரண்டையும் பார்க்கையில் டி. வியை கொஞ்சம் அதிகமாகவே நான் நேசிக்கிறேன். சினிமாவைப் பொறுத்தவரை அது ஆணாதிக்கம் மிகுந்த துறை.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின் நடிகைகளுக்கு அம்மா, அக்கா வேஷம்தான். ஆனால் ஹீரோக்கள் மட்டும் முகச் சுருக்கத்தை மறைத்துக் கொண்டு கல்லூரிக்குப் புத்தகத்தைத் தூக்கிச் செல்வார்கள்.

டி.வி. அப்படியில்லை. உங்களுக்கு பிடித்த விஷயங்களைப் பாரபட்சமின்றி சொல்லலாம், நடிக்கலாம். எனவே தான் டிவியில் நடிப்பதை நான் அதிகம் விரும்புகிறேன்.

இவ்வளவு பேசுகிறீர்கள், சிந்திக்கிறீர்கள் உங்களுக்குள்ளே ஆயிரம் கதைகளை வைத்துள்ளீர்கள். அவற்றையெல்லாம் உங்கள் பாணியில் எழுதி இயக்கி டி.வி திரைக்குக் கொண்டு வரலாமே, அப்படி ஏதாவது திட்டமுள்ளதா?

ஏன் இல்லை, இருக்கு- அதுக்கெல்லாம் காலம் கனிந்து வரணும். நிச்சயமா இயக்குவேன்.

உங்களின் அரசியல் ஈடுபாடு என்ன ஆனது?

தற்போதைக்கு ஒதுக்கி வைத்திருக்கிறேன். சும்மா வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டு கட்சிகளின் மீது கற்களை வீசி எறிவதில் எனக்கு உடன்பாடு இல்லை. பாமர மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்பதை விடவும் படித்தவர்கள் திருந்துவது தான் முக்கியம். எத்தனை பேர் தங்கள் கடமைகளை உணர்ந்து செயல் புரிகிறார்கள்? படித்தவர்கள் முதலில் திருந்தினால் பாமரர்கள் தாங்களே திருந்துவார்கள்.

நடிகர் சங்கத்தில் நடிகைகளுக்கும் பதவிகள் தர வேண்டும் என்று கேட்டீர்களாமே?

ஆமாம் இதில் தப்பு என்ன? ஏதாவது பிரச்சினைன்னா கூப்பிடுகிறீர்கள். ஊர்வலம் போகையில் நாங்கள் தேவை. நட்சத்திர விழாவுக்குத் தேவை. ஆனால் பொறுப்புக்களை மட்டும் நடிகர்களே அனுபவிக்கனும்னா எப்படி? எங்ககிட்டேயும் சில பொறுபபுக்களைக் கொடுங்க, நாங்க யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை.

நான் எனக்காகவோ ராதிகாவுக்காகவோ கேட்கவில்லை. நடிகைகளுக்கும் பிரதி நிதித்துவம் கொடுங்கன்னுதான் சொல்றேன்.

-சந்துரு

# தலைமைக்கான போட்டி

கனடா கூட்டு முன்னனி (Canadian Alliance) யின் தலைமைக்கு அல்பேட்டா மாநில மத்திய பகுதியைச் சேர்ந்த ஸ்ரொக்வெல் டே தெரிவாகியுள்ளார்!

49 வயதான இவர் ஒரு கிறிஸ்தவ அடிப்படைவாதி! 1978ல் ஒரு கிறிஸ்தவக் கல்லூாயின் ஆசிரியராக இருந்த இவர், 1986ல் மாநிலச் சட்ட மன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு அரசியலிலும் புகுந்தார்.

இவருடன் தலைமை பதவிக்குப் போட்டியிட்டு இரண்டாமிடத்திற்கு தள்ளப்பட்டிருப்பவர், பிறிஸ்ரோன் மானிங். இவர் இப்போதே கனடாவில் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் - பிரதமராவோம் என்று எதிர்பார்த்திருப்பவர். இவருக்கு 36.6 வீத வாக்குகளே கிடைத்துள்ளன. ஸ்ரொக்வெல்டேக்கு ககிடைத்த வாக்குகள் 63.4வீதமாகும்.

கனடா கூட்டு முன்னணி (FÙ) யின் முன்னைய பெயர் சீர்திருத்தக் கட்சி (Reform Party) என்பதாகும். தோல்வி கண்டவரான மானிங்கின் தந்தையார் 13 ஆண்டுகளாக சீர்திருத்தக் கட்சியை கண்டனங்கள்? சிக்கல்கள் மத்தியில் வழிநடத்தியவர்.

முற்போக்கு பழமைவாதிகளையும் தன்னுடன் அணைத்துக்கொண்டவர் பிறிஸ்ரோன் மானிங். கட்சியில் தன்போக்கில் நடந்துகொண்டதால் பகைமை சம்பாதித்தார். கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கண்டிப்பார். 1999ல் ஒன்ராறியோ மாநிலத்த்வர்களின் அதிருப்தியை இவர் சம்பாதித்துக் கொண்டார். ஒன்ராறியோ மாநிலத்திற்கு பாராளுமன்ற ஆசனங்கள் அதிகம். அம்மாநிலத்திலிருந்து கணிசமான அளவு ஆதரவை வைத்திராத எவரும் கனடாவை ஆளமுடியாது!

கடந்த தேத்தலுக்கு முன்னர் மானிங் சிறுபான்மை மக்களை பெரும்பாடுபட்டு தன்னுடன் இணைத்துக் கொண்டார்! இதனால்தான் சீர்திருத்தக் கட்சியின் சார்பில் தீபக் ஒபராய், ரஹம் ஜபார், கோ்மன்ற் கிரேவல் ஆகிய 3 இந்தியர்கள் எம்.பி.க்கலாயினர்.

3வது இடத்திற்கு தள்ளப்பட்டவர் லோங்! இவரது தோல்விக்கு காரணமாக இவர் நிதி நிறுவனங்கள் பக்கம் அதிகம் சார்ந்திருந்தமை, கியூபெக் மாகாணத்திலிருந்து பெருவாரியான உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டு பின் 700 பேர்கள் வரையிலானவர்களை களையெடுத்தமை, 'நாஷனல் போஸ்ற்' பத்திரிகையிடமிருந்து ஆதரவு பெற்றது ஆகியன கூறப்படுகின்றன.




இந்நிலையில் லோங் இரண்டாவது சுற்றில் தனது ஆதரவையும் மானிங்கிற்கே வழங்கியிருந்தார். மொத்தம் நான்கு பேர்கள் பேட்டியிட்டிருந்தனர். 4ம் இடத்திற்கு வந்தவர் ஒரு இந்தியர். பெயர் டாகடர் மாட்டிடன்.

அல்பேட்டா மாநிலத்தில் 14 ஆண்டுகள் அரசியல் ஈடுபாட்டைக் கொண்டதனால் அம்மாநிலத்தவர். இவரிகன் வெற்றிக்கு அல்பேட்டா மாநிலத்தின் பிரதமர் ரால்வ் கிளீன் கொடுத்த ஆதரவும் காரணம்!

வரும் தேர்தலில் இவர் பிரிட்டிஷ் கொலம்பியா தொகுதியில் போட்டியிடும் எண்ணங்கொண்டுள்ளார். இப்பொழுது அவரது கோஷம் "New Century! New Party! New Day!". எதிர்கால வெற்றிகளில் பெரும் நம்பிக்கை வைத்திருப்பதை இவ்வார்த்தைகள் காட்டுகின்றன.

என்றாலும் லிபரல் மற்றும் இடதுசாரி வட்டாரங்களில் 'டே' தலைவராக தெரிகூசெய்யப்பட்டமை பற்றி அதிருப்தியும் கவலையும் தெரிவிக்கபக்ப்பட்டுள்ளது. சமூக ரீதியான பிரச்சினைகளில், குறிப்பாக இளைஞர்களின் உல்லாச நடவடிக்கைகள், கருச்சிதைவு, தன்னிச் சேர்க்கை போன்ற விவகாரங்களில் அவர் கண்டிபப்பான போக்குடையைவர். குடும்பங்கள் மனமுறிவை ஏற்படுத்திக் கொள்வதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், இளைஞர் மட்டத்தினரின் குற்றச் செய்ல்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும், இளைஞர் மட்டத்தினரின் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர் டே. 1990ல் கல்லூரிகளில் பாலியல் கல்வி அறிமுகப்படுத்தப்படுவதற்கெதிராக செயற்பட்டவர் என்பன போன்றவை அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள்!

# ஜன்னலுக்கு வெளியே...

பல ஆண்டுகள் தயக்கம் காட்டிவந்த பூட்டான் தனது நாட்டிலிருந்து இந்தியக் கிளர்ச்சியாளர்களை வெளியேற்றும் விடயத்தில் இந்தியாவுடன் இணைந்து கூட்டு இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலிருந்து தீவிரவாதிகள் ஊடுருவி பூட்டான் காடுகளில் தளங்கள் அமைத்துக்கொண்டுள்ளனர். இவர்களுக்கெதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதென பூட்டானின் தேசிய சட்டமன்றம் ஜூலையில் முடிவு செய்தது.

இது இவ்வாறிருக்க, இருநாடுகளும் கூட்டு நடவடிக்கையிலிறங்கவேண்டும் என்று இந்தியா முன்னரே அபிப்பிராயம் தெரிவித்திருந்தது. இதனால், பூட்டானின் வெளியுறவு அமைச்சர் லியொன்போ ஜிக்மி தின்லே, ஏப்ரலில் புதுடில்லிக்கு வந்து இவ்விடயம்பற்றி விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஜூலையில் மீண்டும் நடைபெற்றசட்டமன்றக் கூட்டம் தீவிரவாதிகளை வெளியேற்றும் நடவடிக்கைகளைஎடுக்கும் அதிகாரத்தை அரசாங்கத்திற்களித்தது. ஆயினும், கூட்டு இராணுவ நடவடிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. என்றாலும், முன்னரே தீர்மானித்திருந்தபடி உல்பா, மற்றும் போடோ தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அவர்களில் ஒரு பிரிவினர் வெளியேறுமாறு கேட்கப்பட்டனர். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வமைப்புகளின் 2500 போராளிகள் பூட்டான் காடுகளில் இருப்பதாகவும், பெருமளவு ஆயுதங்களை சேகரித்து வைத்திருப்பதாகவும் இராணுவப் புலனாய்வுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை நாகாலாந்து தீவிரவாதிகளின் முய்வா (Muivah) குழுவொன்று பூட்டானுக்குள் நுழைந்து பயிற்சி முகாம்களை அமைத்துள்ளது. இதன் இன்னுமொரு குழுவான கப்லாங் (Khaplang) தனது இரகசிய முகாம்களை இந்திய-பூட்டான் எல்லைகளில் அமைத்துள்ளது.

உல்பாவும், போடோவும் பேச்சுகளுக்கு வர மறுத்துவிட்டன. இதனையடுத்து, பூட்டானின் தேசியமன்றம் இந்திய-பூட்டான் கூட்டு இராணுவ நடவடிக்கையை அங்கீகரித்தது.

பூட்டான் அரச இராணுவத் தளபதி டோர்ஜி தேசிய மன்றத்தில் தெரிவிக்கையில், இராணுவ முன்னேற்பாடாக வழங்கல் நிலையங்கள் அமைத்தும், ஆளணிகளை திரட்டியும் ஆயுத்தங்களில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாக கூறினார்.


பூட்டானின் இம்முடிவை வரவேற்ற அசாம் முதல்வர் பிரபல்லகுமார் மொஹந்தா, இந்தியா இராணுவரீதியிலும், பொருளாதாரரீதியிலும் பூட்டானுக்கு உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

உல்பா மற்றும் போடோ தீவிரவாதிகள் பூட்டான் மக்கள் கட்சி (BPP) என்ற பெயரில் தலைமறைவு இயக்கமொன்றையும் ஆரம்பித்துள்ளனர். தென்பூட்டானில் வாழும் நேபாள மக்களின் கனிசமான ஆதரவும் இதற்குள்ளது. நேபாளத்தவர்களில் ஒரு இலட்சம் பேர்கள் வரையில் அன்னியர்கள் என நாமம் சூட்டப்பட்டதனால், அவர்கள் இந்திய எல்லையில் ஐ.நா. அகதிகள் நிறுவனம் (UNHCR) அமைத்துள்ள முகாம்களில் உள்ளனர்.

பூட்டானின் அரச ஆட்சிமுறைக்கெதிரான சிந்தனைப்போக்கு ஏற்பட்டுவருகிறது குறிப்பாக தென்பூட்டான் மக்களே இதனை வரவேற்கின்றனர். இப்பின்னணியில் பூட்டான் மன்னர் ஜிக்மிசிங்ஜி வாங்சுக் தீவிரவாதிகளுக்கு இலக்காக அமையலாம் என்ற அச்சத்தில் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியப் போராளிகளுடன் நேபாளத் தீவிரவாதிகள் கைகோர்த்து நிற்பதால் பிரச்னை மோசமடைந்துள்ளது என டோர்ஜி அச்சமடைந்துள்ளார்.

அயல் மாநிலமான திரிபுராவும் இதன் பாதிப்புகளுக்கு உட்படலாமென்ற நிலையில் அதன் முதலமைச்சர் மாணிக் சாகர், பூட்டானுக்கு சகல உதவிகளையும் வழங்க முன்வருமாறு இந்திய அரசைக் கேட்டுள்ளார். 'இதனை ஒரு தேசியப் பிரச்னையாக கருத வேண்டும்' எனவும் அவர் கேட்டுக்கொண்டார். இது தொடர்பில் ஏழு முதலமைச்சர்கள் இணைந்து ஒரு மகஜரை பிரதமர் வாஜ்பாயிடம் கையளித்துள்ளதாகவும், கிளர்ச்சியாளர்கள் வெளியிலிருந்து ஆதரவைப் பெறுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

*ஒவ்வொரு நாட்டிலும் கிளர்ச்சியாளர்கள் ஏதோ*



*செய்து கொண்டு தானிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டியோ வெளியிலிருந்து உதவிகள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன இதுவே ஒவ்வொரு நாட்டிலும் கிளர்ச்சிகளை ஒடுக்குவதில் அந்தந்த அரசுகளுக்கு பெரும் தலையிடியாயிருக்கிறது.*

# தீவிரவாதிகளுக்கெதிராய் பூட்டானின் போர்



மாதவன், ரீமா சென் - மின்னலே

# நான் ஒரு உலகம் சுற்றிய வாலிபன்

—இளம் ஹீரோ மாதவன்



மாதவன் - யுவதிகளின் கனவில் புகுந்து இம்சித்து வரும் கனவு இளைய நாயகன். தி . நகரில் ஒரு நட்சத்திர ஓட்டலில் இவர் தங்கியிருந்த அறையின் கதவை தட்டினேன். மாதவனின் பளபள வழவழ பளிச் முகம் தாடிக்குள் மறைந்திருந்தது. ''ரம்யா புரடக்ஷன்ஸ் தயாரிக்கும் படத்திற்காக இந்தத் தாடி! கூடிய விரைவில் ஷூட்டிங் '' என்று சொல்லி ''டூத்பேஸ்ட்'' சிரிப்பை வீசினார்.

அறையின் உள்ளே டைரக்டர் சுரேஷ் தான் எழுதிய வசனங்களையும், காட்சிகளையும் அவருக்கு விபரித்துக் கொண்டிருந்தார். கொஞ்சநேரம் அவரை நிறுத்திவிட்டு நம்மிடம் பேசஆரம்பித்தார் மாதவன்.

ஷாலினிக்கும் எனக்கும் சேர்த்துதான் மணிரத்னம் ஸ்கிரின் டெஸ்ட் வைத்தார். என்னைப் பிடித்திருப்பதாகவும் கதாநாயகனாக தேர்வு செய்துள்ளதாகவும் கூறினார். நான் வானத்திற்கும், பூமிக்கும் குதியாய் குதித்தேன். நான் தமிழ் நன்றாக பேசியதைப் பார்த்து தமிழ்நாட்டுக்காரரா என்று ஆச்சரியப்பட்டார்.

என் பூர்வீகம் தமிழ்நாடு தான்! அப்பா சென்னை. அம்மா தஞ்சாவூர். நான் பீகாரில் வளர்ந்த மும்பையில் வாழ்கிற தமிழன்! என் அப்பா ரங்கநாத். டாட்டா ஸ்டில் கம்பெனியில் ( பீகார்- ஜாம்ஜெட்பூர் ) வேலை பார்த்ததாலும் என் அம்மா சரோஜா ரங்கநாத் ''பேங்க் ஆப் இந்தியா''வில் ஆபிஸராக இருந்ததாலும், எனக்கும், என் தங்கை தேவிகாவிற்கும் நல்ல தமிழில் பேச பழக்கப்படுத்தினார்கள். எங்களுக்கு பேச மட்டும்தான் தெரியும். எழுதப் படிக்கத் தெரியாது. மாடலிங்தான் உங்களை சினிமாவிற்கு அழைத்து வந்ததா என்று என்னை கேட்காதவர்களே இல்லை. முதலில் நான் ஒரு மாடல் இல்லை. இரண்டே இரண்டு விளம்பரபடங்களில் மட்டுமே நடித்தேன். ''ஒன்று பாண்ட்ஸ் டால்கம் பவுடர், மற்றது ''பேர் அன்ட் லவ்லி'' இவை தவிர சில டி.வி. தொடர்கள்.

நான் நடித்த சூழல் வேறு! ஆனால் மணி சாரின் அப்ரோச் வேறு! அதிகாலையில் படப்பிடிப்பு நடத்தும் வழக்கம் உண்டு. அவர் ஆறு மணிக்கு முதல் ஷாட் என்றால் நாலரை ஐந்து மணிக்கெல்லாம் இருப்பார். அதிகாலையில் நான் அலாரம் வைத்து அவருக்கு முன்பே அங்கு இருக்க வேண்டும் என்று லொகேஷனுக்கு போய் பல முறை ஏமாந்து இருக்கிறேன். அதிகாலையில் படப்பிடிப்பு நடத்தினால் எந்தவிதமான சலனமும் இன்றி வேலைகள் நன்றாக நடக்கும் என்று நம்புகிறவர். இயல்பாகவே அதிகாலையில் சூட்டிங் போவதற்கு எனக்கும் வசதியாக இருந்தது. நடிக்க வருவதற்கு முன்பு பிகார், ஜாம்ஷெட்பூரில் ரோட்டரி சங்கத்தின் மூலம் எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்தது. இதனால் அந்த மாணவர் பருவத்திலேயே மேல்படிப்புக்காக கனடா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு போனேன்.

கோலாப்பூர் ராஜாராம் கல்லூரியில் எலட்ரானிக்ஸ் படித்த போது நான் என்.ஸி.ஸி.யில் இருந்தேன். அதில் சிறந்த மாணவனாக தேர்ந்தெடுக்கப்பட்டு ''இராயல் ஆர்மி நேவி ஏர்போர்ஸ்'' பயிற்சி க்காக இங்கிலாந்து சென்றேன். பிறகு இந்தியா வந்து ''ஜூனியர் சேம்பியன் கோர்ஸ் '' படித்தேன். பின் ஜப்பான் சென்று பிஸினஸ் செமினாரிலே கலந்து கொண்டேன். என் இருபத்திரெண்டு வயதிற்குள்ளாக கிட்டத்தட்ட எல்லா உலக நாடுகளையும் பார்த்து வந்துவிட்டேன். நான் மணிரத்தினத்தின் தீவிர ரசிகன். அவரை நாம் பார்க்க முடியுமா? அவரிடம் பேச முடியுமா? என்று நினைத்துக் கொண்டிருந்த காலம் போய், படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் என்னிடம் உள்ள கதைகளை அவரிடம் விவாதித்து இருக்கிறேன். கேட்டுவிட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார். சில திருத்தங்களையும் சொல்லுவார். ''அலைபாயுதே'' படத்திற்காக காஷ்மீர், ஆக்ரா, இந்தூர், அந்தமான் போன்ற பல இடங்களுக்குச் சென்றோம். நாங்கள் எங்கு சென்றாலும் மழை வந்து விடும். பாதிப்படம் மழையில் தான் ஷூட்டிங். அந்தமானில் இருந்த போது கடலில் ஸ்விம் பண்ணிக் கொண்டேயிருப்பேன். அப்போது மணி சார் என்னை தேடி, தேடி அழைத்து வந்து சத்தம் போடுவார். நான் ''அலைபாயுதே'' படப்பிடிப்பின் போது மணி சாரிடம் நிறைய கற்றுக் கொண்டிருக்கிறேன்.

என் குடும்பத்தை பற்றி சொல்ல வேண்டும் என்றால் அப்பா அம்மா ரிடையர்டு ஆகிவிட்டார்கள். இப்போது என்னுடன் உள்ளனர். தங்கை தேவிகா டாட்டா கம்பெனியில் ''டிரேடிங் சர்விஸில்'' வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறார். சென்ற வருடம் ஜூன் மாதம் 6ம் தேதி எனக்கு திருமணம் ஆனது. எங்கள் திருமணம் காதல் கல்யாணம் தான், மனைவியின் பெயர் சரிதா. எனக்கும் என் பெற்றோர்களுக்கும் ஒரே தேதியில்தான் திருமண நாள் வரும் என்பதால் வீடே மிகவும் குதூகலமாக இருக்கும்.

எனக்கு பெண் ரசிகைகளிடமிருந்துதான் நிறைய கடிதங்கள்! கல்லூரி மாணவிகள் மத்தியில் எனக்கு கல்யாணமானது தெரிந்தால் கிரேஸ் போய் விடும் என்றனர். இமேஜ் போய்விடும் என்பதற்காக எனக்கு திருமணம் ஆனதை மறைத்தால் அது என் மனைவிக்கு நான் செய்யும் துரோகம். ஒரு நடிகனாக நான் எப்படி நடிக்கிறேன், ஏற்றுக் கொண்டிருக்கும் கதாபாத்திரத்தை எப்படிச் செய்கிறேன் என்பது தான் முக்கியம். இது தான் ரசிகர் மத்தியில் ஒரு நிரந்தரமான இடத்தை பெற்றுக் கொடுக்கும். திருமணத்தை மறுப்பதும் - பின்பு அது ஒருநாள் தெரிந்து அசடு வழிவதும் தேவையில்லாத ஒன்று. எனக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு உண்டு. ஜாதகம், ஜோசியம் இதிலெல்லாம் கூட நம்பிக்கை உண்டு. பிறந்த தேதி ஜூன் ஒன்று. நட்சத்திரம் பரணி. மும்பையின் ஜனசந்தடி எனக்குப் பழக்கப்பட்டு விட்டாலும், சென்னையில் வாழவே விரும்புகின்றேன்.



ஸ்நேகா

## இதுதாண்டா நேரம்

'விரும்புகிறேன்' படத்தில் அறிமுகமாகும் 'ஸ்னேகா'விற்கும் அந்தப்படத்தின் டைரக்டர் சுசிகணேஷிற்கும் ஏகப்பட்ட பிரச்சனை! புதுமுகமாக அறிமுகமாகும் 'ஸ்னேகா' 'விரும்புகிறேன்' படத்தை முடித்துவிட்டுதான் வேறு படங்களை ஏற்றுக் கொள்வார் என்று எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் போடவில்லை! திடீரென்று 'சுகம்' படத்தில் மாதவனுக்கு ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார். இதை 'விரும்புகிறேன்' படத்தின் தயாரிப்பாளரிடமும், இயக்குநரிடமும் தெரிவிக்கவில்லை.

எங்களைக் கேட்காமல் எப்படி புதுப்படம் ஏற்றுக் கொள்ளலாம் என்று ஆக்ரோஷமாக காரணம் கேட்க, 'ஸ்னேகா', விரும்புகிறேன் கம்பெனி மீது தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் செய்தார். தீர்ப்பு ஸ்னேகாவிற்கு சாதகமாக வர டைரக்டர் சுசிகணேஷும், படத்தின் தயாரிப்பாளரும் கடுப்பாகிவிட்டார்கள், நடிகர் சங்கத் தலைவர் விஜய காந்திடம் போய் புகார் செய்தார்கள். அங்கேயும் ஸ்நேகாவிற்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. இப்போது நடிகை வேறு சில படங்களுக்கு கால்ஷீட் தந்து நடித்துக் கொண்டிருக்க - அறிமுகம் செய்தவர்கள் நடிகையின் கால்ஷீட்டிற்காக காத்துக் கொண்டி ருக்கிறார்கள். (இதுதாண்டா நேரம் சாமி!)

## உருண்டார் ரம்பா

ரம்பாவுக்கு திருப்பதி வெங்கடாஜலபதி மீது அளவு கடந்த பக்தி!. திருச்சானூரில் உள்ள அலர்மேல் மங்கை கோவிலுக்குச் சென்று அங்கபிரதட்சணம் செய்திருக்கிறார். எல்லாம் எதற்காக? வீட்டின் கிரஹபிரவேசம் நடந்த கையோடு அண்ணன் வாசுவின் திருமணம் நன்றாக நடந்து எல்லாம் சுபமாக இருப்பதால் பிரார்த்தனை செலுத்தியிருக்கிறார்.



## குழந்தையுடன் சிம்ரன்

'பார்த்தேன் ரசித்தேன்' படப்பிடிப்பின் இடைவெளியில் சிம்ரன் கையில் ஒரு குழந்தையுடன் அமர்ந்திருந்தார். அந்தக் குழந்தைக்கு ஒரு வயது இருக்கும். உச்சி முகர்ந்து அள்ளி அணைத்து முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார். யார் அந்தக் குழந்தை? யாரிடம் கேட்பினும் தெரியவில்லை. அவரிடமே போய ''மேடம் உங்களுக்கு உடம்பு சரியில்லையாமே பரவாயில்லையா? என்று அவரது உடல்நிலை பற்றி கேள்விப்பட்டு ரொம்பவும் அக்கறையோடு(!) விசாரித்தோம்.

சிம்ரன் ரொம்பவும் சீரியஸாக ''கடுமையான ஜலதோஷம் அதோடு உடம்பு வலி வேறு. ஷூட்டிங் கேன்சல் செய்யலாம்னா ஸ்டுடியோவில் செட் போட்டு விட்டார்கள். நான் வரலைன்னா புரொடியூசருக்கு நிறைய நஷ்டம். அதனால் என் உடலைப் பற்றி கவலைப்படாமல் வந்து விட்டேன்'' என்றார் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க. (வீசிங் ப்ராப்ளமா மேடம்)

சரி யார் இந்த குழந்தை? என்று வந்த நோக்கத்தைப் பற்றி கேட்க 'அதுவா சஸ்பென்ஸ் என்றார். பொறுக்க முடியாமல் 'சொல்லுங்க மேடம் உங்களுக்கின்னும் குழந்தைன்னு' என்று பேச்சை ஆரம்பிக்க ''ஸ்ரப்.. ஸ்ரப்.. இது டைரகடர் சரணின் தம்பி குழந்தை. குழந்தைன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். ஒருவயது கூட ஆகவில்லை. என்னைப் பார்த்ததும் அப்படியே ஒட்டிக் கொண்டு விட்டது'' என்றார். (ஹும் இவ்வளவு தானா)

## உடம்பு கறுத்தால் குங்குமப்பூ

'வெற்றிக் கொடி கட்டு' படத்தில் நடிக்கும் மீனா தினமும் பாலில் ஏலம், குங்குமப் பூ போட்டு சாப்பிடுகிறார் ஏன்? 'வெற்றிக் கொடி கட்டு' படத்திற்காக மைசூரில் வெயிலில் நடித்தபோது உடம்பு கறுத்துவிட்டதாம். குங்குமப்பூ சாப்பிட்டால் தோல் பன்னீர் நிறமாக மாறும் என்று முரளி சொல்ல குங்குமப் பூவும் கையுமாக அலைகிறார் மீனா! அவரது மேக்கப் பெட்டியில் எப்போதும் குங்குமப் பூ இருக்கிறது.

## பாவாடை தாவணியில் கௌஸ்

கௌசல்யா, 'வானத்தை போல' 175 ஆவது நாள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். அதுவும் எப்படி? பாவாடை தாவணியில்! (சூப்பரா இருக்குங்கோ) வந்தவர் இரண்டு வார்த்தை பேசினார். ''வானத்தைப்போல, படத்தில் நான் இந்த அளவிற்கு டான்ஸ் ஆடியதற்கு காரணம் பிரபு தேவாதான். நடனம் ஆடத் தெரியாத இந்த பொம்மையை ஆட்டுவித்தவர் அவர். அதேபோல விஜய்காந்தை நான் திட்டும் காட்சியில் ரொம்பவும் பதட்டப்பட்டேன். அவர் என்னை 'சும்மா பயப்படாதீங்க, நல்ல சீன் இது நன்றாக நடித்தால் உங்களுக்கு பெயர் கிடைக்கும்' என்று ஊக்கம் கொடுத்தார். தமிழ் நடிகர்களுக்கு 'ஈகோ' (Ego) இல்லை'' என்று வெளிப்படையாக பேசினார் கௌஸ்!

## காமெடி கல்யாணம்

எஸ்.எஸ்.சந்திரன் இயக்கி, தயாரித்த 'பொம்பள சிரிச்சா போச்சு' படம் ஒரு வழியாக ரிலீசாகப் போகிறது. 'காமெடி கல்யாணம்' என்று புதிதாக பெயர் சூட்டி வெளியிடப் போகிறார் எஸ்.எஸ்.சந்திரன்.



## அது முடிஞ்சு போன விஷயம்!

'உன்னில் என்னைக் கண்டேன்' படத்தில் மந்த்ரா கையில் தெலுங்கு நாவல் ஒன்றை வைத்து படித்துக் கொண்டிருந்தார். ''உங்கள் அப்பா, அம்மா இருவரும் உங்களுக்கு பிரச்சனையாக இருந்தாங்களாமே உண்மையா?'' எனக் கேட்டதும், 'விடுங்கள் அதெல்லாம் முடிந்து போன விஷயம். இப்போது நான் சந்தோஷமாக இருக்கிறேன்' என்றார் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு. 'நீங்களே என்ன பிரச்சனைன்னு சொல்லி விடுங்களா' என்று திரும்ப வற்புறுத்தியதும் மந்த்ரா 'அவர்களுக்கு பெத்த பெண் என்னை விட நான் வாங்கும் சம்பளம், பாங்க் பேலன்ஸ் இதுபற்றியே அக்கறை இருந்தது. என்னை கேட்காமல் படங்களை ஒப்புக் கொள்வதும், பணத்தை வாங்குவதுமாக இருந்ததால் எனக்கு கெட்ட பெயர் வந்து விட்டது' என்றார் மந்த்ரா.



மந்த்ரா





நிஷா பார்வே - சுனில் 'உயிரின் உயிரே'

## வாஜ்பாய் வச்ச பேரு!

'உயிரின் உயிரே' படம் இந்தியிலிருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தியில் அந்த படத்தைப் பார்த்தார் அந்த மிக மிக முக்கிய பிரமுகர். இருக்கும் பிசியில் டென்ஷனிலிருந்து ரிலாக்ஸாக இருக்கும் என்று நினைத்துப் போனவருக்கு ஏகப்பட்ட ஆச்சரியம். ரொம்பவும் ரசித்தார்.

'படத்திற்கு இன்னும் பெயர் சூட்டவில்லை. நீங்கள்தான் பெயர் வைக்க வேண்டும்' என்று சொல்ல அந்த முக்கிய பிரமுகர் 'நிதான்' (NITHAAN) என்று பெயர் வைத்தார். அது மட்டுமல்ல 18 மொழிகளிற்கும் 'டப்' செய்து தூர்தர்ஷனில் ஒளிபரப்ப அவரேயே சிபாரிசு செய்தார்.

இந்தப் படம் மக்கள் மத்தியில் பேசப்பட வேண்டும் என்று 'Tax Freeக்கும் சிபாரிசு செய்தார். அடேங்கப்பா 'நிதான்' படத்திற்கு இவ்வளவு சிபாரிசு செய்யும் முக்கிய பிரமுகர் யார்?

சாட்சாத் இந்திய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்தான். காரணம் படம் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு படம் என்பதால் (நியாயமான சிபாரிசு)! படத்தை நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (New Indian Express) பத்திரிகை இந்தியா முழுதும் விநியோகம் செய்கிறது என்பது கூடுதல் சமாசாரம்.

## பேண்ட் சட்டையை கழட்டு

விக்னேஷ் ஹீரோவா நடிக்கும் 'நீ எந்தன் வானம்' படம் அந்த மாதிரி 'அஜால் குஜால்' படம்!. இந்த செக்ஸ் போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா? என்கிற மாதிரிதான் கிளம்பியிருக்கிறார் ரேஷ்மா! விக்னேஷ் நடிப்பதற்கு முன் பிருத்விராஜ்தான் நடிப்பதாக இருந்தது! தலைக்கோணம் ஷூட்டிங் ஸ்பாட்டிற்குப் போன பிருத்வியிடம் பேண்ட் சட்டையை கழட்டு என டைரக்டர் சொல்ல... யோவ்... இப்படி படங்கள்ல நடிச்ச இப்பதான் மீண்டு வந்திருக்கேன்! ஆளைவிடு! எனச் சொல்லி வனத்துறை ஜீப் உதவியோடு தப்பி வந்துவிட்டார்!

## யார் ஜாடை?



'ப்ரெண்ட்ஸ்' படத்தில் நடிக்கும்போது விஜய்க்கு அவசர அவசரமாக ஒரு தகவல். விஜய்யும் அவரது மனைவியும் பிரிந்து விட்டார்கள்- விவாகரத்து கோரியிருக்கிறார்கள் எனப் புலனாய்வு பத்திரிகைகள் செய்தி சேகரித்து கவர் ஸ்டோரியாக வெளியிட்ட சமயம் பார்த்து இப்படி ஒரு சந்தோஷமான தகவல்! சந்தோஷம் என்றால் இரட்டிப்பு சந்தோஷம் இல்லை முட்டிப்பு சந்தோஷம். பின்னே! அழகான ஓர் ஆண் குழந்தையை விஜய்யின் மனைவி சங்கீதா பெற்றுக் கொடுத்ததால்.... ஷூட்டிங்கிலே உற்சாகமாகிவிட்டார். அடுத்த நாளே லண்டன் போனார். குழந்தையைப் பார்த்தார்.

இப்போது பார்த்து சங்கீதாவிற்கும் விஜய்க்கும் புதிய பிரச்சனை! சாதாரண பிரச்சனையில்லை, மிகப்பெரிய பிரச்சனை.

பிள்ளை யார் ஜாடை .... விஜய் அப்படியே அம்மாவை உரிச்சு வச்சிருக்கான் என்று சொல்ல, சங்கீதா இல்லை இல்லை அப்பாவை அப்படியே உரிச்சு வச்சிருக்கான் எனச் சொல்ல... (சுகமான பிரச்சனைதான்)

## தொப்புளைச் சுற்றி

'சபாஷ்' படத்தில் தொப்புளுக்குப் பக்கத்தில் திடீரென்று வலி. யாருக்கு? திவ்யா உன்னிக்கு. துடித்தார், புரண்டார். அப்போது பார்த்தீபன் இதைப் பார்த்து விட்டு 'சூ' மந்திராக்காளி என்று கையை மேலே தூக்கி ஆட்ட நாமக்கட்டி ஒன்று கைக்குள் வருகிறது. இப்போது வயிற்றுவலியாவது மண்ணாங்கட்டியாவது இரண்டே நிமிடத்தில் வலி இருக்கும் இடம் தெரியாமல் போயிடும் பார்' என்று சொல்லி நாமக்கட்டியை தொப்புளில் வைத்து தொப்புளை சுற்றி பத்துப்போட வலி உடனே போயே போயிற்று. திவ்யா உன்னியின் நாமக்கட்டி தொப்புளைப் பார்த்து ரசிகர்கள் கிறங்குகிறார்களோ இல்லையோ தொப்புளைச் சுற்றி பத்து போடும் போது அவர் பேசுவது நிச்சயம் தொப்புள் இருக்கும் பெண்களுக்கு கூச்சம் கிளுகிளுப்பை ஏற்படுத்தும். (ஆம்லட், பம்பரம், ஆயில் மசாஜ் வரிசையில் இப்போது நாமக்கட்டி)



பார்த்தீபன் - திவ்யா உன்னி 'சபாஷ்'

## துணிச்சல்காரர்

மணிவண்ணன் இயக்க சத்யராஜ் நடிக்க மீண்டும் கைகோர்க்கும் 'அக்மார்க்' அலம்பல் படம் ஆண்டான் அடிமை. இந்தப் படத்தில் திவ்யா உன்னியும் சுவலட்சுமியும் ஜோடிகள். பொதுவாக இப்போதுள்ள டைரக்டர்கள் எல்லோரும் கதையை வெளிப்படையாகச் சொல்ல அஞ்சுகையில் மணிவண்ணன் மட்டும் முழுத்திரைக்கதையை அப்படியே விவரிக் கிறார். கேட்டால் நம்ம கதையை எல்லாம் காப்பி அடிக்க முடியாதுங்க. அதுக்குத் தனி தைரியம் வேண்டும் என்கிறார்.

## மச்சம்னா மச்சம்

மச்சம் தேவயானியின் முகத்தில் மட்டுமல்ல உடம்பின் பல இடங்களிலும்இருக்க வேண்டும்! இந்த யூகத்திற்குக்காரணம்; மும்பையின் மையப் பகுதியான லிங்கிங் ரோட்டில் உள்ள பெரிய காம்புவுண்டுக்குள் விசாலமான ஒரு வீட்டில் (வாடகைக்குத்தான்) இருக்கிறார் தேவயானி. இந்த வீட்டிற்கு வாடகை... வெறும் நூறு ரூபாய் தான் நம்புங்கள் ரெண்ட் கண்ட்ரோல் சட்டப்படி பல வருடங்களாக இந்த வீட்டில் குறைந்த வாடகைக்கு குடித்தனம் இருக்கின்றனராம் தேவயானியின் பெற்றோர். இப்போது மறுபடியும் முதல்வரியைப் படியுங்கள்!



சரத்குமார் - மீனா 'ரிஷி'

## துக்கடாவான சரத்!

சரத்குமார் 'ரிஷி' படத்தில் மீனாவுடன் சேர்ந்து டூயட் பாடி ஆடிக் கொண்டிருந்தார். அவரிடம் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்', 'பெண்ணின் மனசை தொட்டு' இப்படி துண்டு துக்கடா கேரக்டரில் நடிக்கிறீர்களே. ஒரு ஆக்ஷன் ஹீரோவிற்கு இது அவசியமா? என்றதும் "நான் இனிமேல் இது போல் கெஸ்ட் (guest) ரோல் பண்ண வேண்டாம்னு நினைக்கிறீங்களா? சரி, இனிமேல் பண்ணவில்லை போதுமா" என்றார் படு காஷுவலாக (அதிரடி புரட்சியா சரத்!)

## ஒட்–உன்னி

கேரளத்து பெண் குட்டி திவ்யாஉன்னியை 'கண்ணன் வருவான்' படத்தில் நிஜக் கண்ணனான கார்த்திக்கின் ஜோடியாக நடிக்க வைத்தார் சுந்தர்.சி. கல்வெட்டு படத்தில் முரளிக்கு ஜோடியாக நடிக்கத்தான் மலையாளக் கரையோரம் விட்டு மெரீனா பீச்சோரம் அம்மணி வந்தார். ஆனால் அவரின் சொக்கவைக்கும் அழகு நம்மூர் ஹீரோக்கள் பலரையும் பித்துப் பிடிக்க வைக்க... சட்டென்று ஏழெட்டுப் படத்தில் பிஸியாகி விட்டார்!.

உன்னியா? ஒட்டுண்ணியா?



ஜெயராம் - தேவயானி 'தெனாலி'

## ரஜினி ரசிகர்களுக்கு பக்குவம் இல்லையா?

'தெனாலி' படத்தில் ஜெயராம் கமல்ஹாசனை 'டார்ச்சர்' செய்யும் கேரக்டரில் நடித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரிடம் "கமல்ஹாசனை இப்படி துன்புறுத்தும் கேரக்டரில் நடிக்கிறீங்களே, அவரது ரசிகர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்களா?" என்று கேட்டதும் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். "இதுபோல் பெரிய்ய்ய நடிகர்களை திட்டுவதுபோல், அடிப்பதுபோல் நடிப்பதில் நிஜம்மாகவே பெரிய பயம் எனக்கு உண்டு. இதற்கு முன்பு டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் 'முத்து' படத்தில் என்னை ஒப்பந்தம் செய்ய வந்தபோது ரஜினியை ஓங்கி கன்னத்தில் அறைவதாக காட்சியிருக்கிறது என்று சொன்னபோது 'சாமி இந்தப் படமே எனக்கு வேண்டாம், நானாவது அவரை அறைவதாவது, அப்புறம் அவரோட ஃபான்ஸ் (Fans) கிட்டே யார் அடிவாங்குறது' என்றேன். கமலைப் பொறுத்தவரை முன்பு 'சாணக்கியன்' என்ற படத்தில் அவரை திட்டும்படி நடித்திருக்கிறேன். அதனால்தான் இப்போது தெனாலியில் கமலை திட்டும்படி நடிக்கிறேன். பயம்தான்! இருந்தாலும் கமல் ரசிகர்கள் பக்குவப்பட்டவர்கள்" என்றார். (ரஜினி ரசிகர்களுக்கு பக்குவம் இல்லை என்கிறாரா ஜெயராம்?) ✤✤

Sydney 2000

# விளையாட்டுச் செய்திகள்!

# 27வது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பம்

— சேதுராமன்

## 28 விளையாட்டுக்கள்

செப்டம்பர் 15 முதல் ஒக்டோபர் 1ம் திகதிவரை அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறும் 27ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன.

28 வகையான விளையாட்டுக்களில் மொத்தம் 267 விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும். சுமார் 200 நாடுகளில் இருந்து 10,000 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

சிட்னி நகரில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் தீர்மானம் 1993 செப்டம்பர் 23ம் திகதி அறிவிக்கப்பட்டது. ஜேர்மனி, சீனா, துருக்கி, பிரேஸில் ஆகிய நாடுகளும் 2000 ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை தமது நாட்டில் நடாத்த விரும்பியிருந்தன. அவுஸ்ரேலியா தூரத்தில் உள்ள நாடாகையால் பிரயாணச் செலவு அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டது.

இதில் வெல்வதற்காக போட்டியாளர்கள் தமது உபகரணங்களுடன் சிட்னிக்கு வருவதற்கான பிரயாணச் செலவையும் அவுஸ்ரேலியாவே ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளை ஒளிப்பதிவு செய்வதற்காக 700 கமெராக்கள் பாவிக்கப் படவிருக்கின்றன. சுமார் 15,000 செய்தியாளர்கள் போட்டிகள் பற்றிய தகவல்களை திரட்டுவதில் ஈடுபடுகின்றனர்.

போட்டிகளுக்கான செலவு 2.6 பில்லியன் டொலர்களாகும். அனுசரணை, வர்த்தக உரிமைகள் முதலியவற்றால் 800 மில்லியன் டொலர்களும், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமைகள் மூலம் சுமார் 950 அவுஸ்ரேலிய டொலர்களும் வருமானமாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கை குழுவினர்

இலங்கையிலிருந்து 19 பேர் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். இவர்களுள் 14 தடகள வீரர்களும், 2 நீச்சல் போட்டியாளர்களும் ஒரு படகோட்ட போட்டியாளரும் அடங்குவர்.



தமயந்தி தர்ஷா இலங்கைக் குழுவுக்கு தலைமை தாங்குகிறார். இலங்கையின் ஒலிம்பிக் குழுவுக்கு தலைமை தாங்கும் முதல் வீராங்கனை இவர். இவர்கள் தவிர 11 அதிகாரிகளும் இலங்கை குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

1948ற்கு பின் இலங்கை பதக்கம் எதுவும் பெறவில்லை. எனினும் இம்முறை சுசந்திகா ஜயசிங்க (200 மீ), தமயந்தி தர்ஷா (400 மீ), சுகத்திலகரத்ன, ரொஹான் பிரதீப் (400 மீ), சிறியானி குலவன்ஷ (100 மீ தடைதாண்டல்) மற்றும் ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்ட வீரர்கள் ஆகியோர் எதிர்பார்ப்புக்குரியவர்களாக விளங்குகின்றனர்.

## முதலிடம் யாருக்கு?

ஒலிம்பிக் போட்டிகளில் ஏதாவது ஒரு பதக்கம் கிடைக்காதா என நம் நாட்டவர் ஏங்குகிறார்கள். ஆனால் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் அதிக தங்கப் பதக்கங்களை வென்று முதல் இடத்தை பெறுவதிலும் மோதுகின்றன.



1896 முதல் 1948 வரை ஒருசில தடவைகள் தவிர அமெரிக்காவே முதலிடத்தைப் பெற்றது. 1952இல் சோவியத் யூனியன் முதல் தடவையாக ஒலிம்பிக்கில் பங்குபற்றியது. அதன் பின் 1956, 60, 72, 76, ஆண்டுகளில் சோவியத் முதலிடம் பெற்றது.

1980இல் அமெரிக்காவும் 84இல் சோவியத் யூனியனும் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளவில்லை.

1988இல் இரு நாடுகளும் பங்குபற்றிய போது சோவியத் முதலிடம். இரண்டாமிடம் கிழக்கு ஜேர்மனிக்கு. அமெரிக்காவுக்கு மூன்றாமிடமே.

1992இல் உடைந்த சோவியத் யூனியனின் குடியரசுகள் சுதந்திர ராஜ்ஜியங்களின் பொதுநலவாயம் என்ற பொதுப் பெயரில் ஒரே அணியாகப் பங்குபற்றி முதலிடம் பெற்றன. 96ல் அமெரிக்கா முதலிடத்தையும், ரஷ்யா இரண்டாம் இடத்தையும் பெற்றன.

சிட்னியில் இரு நாடுகளுமே முதலிடத்தைப் பெறுவதாக சூளுரைத்துள்ளன பார்க்கலாம். ●

## ஒலிம்பிக் கிராமத்தில் இட நெருக்கடி

இம்முறை எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையான போட்டியாளர்கள் வருகை தந்துள்ளதால் ஒலிம்பிக் கிராமத்தில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஒலிம்பிக் கிராமத்தில் உள்ள அறைகளில் 15,750 கட்டில்கள் இருக்கின்றன. ஆனால் இதைவிட கூடுதலான வீரவீராங்கனைகள் வந்துதிருப்பதாக ஒலிம்பிக் கிராம அமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

ஏற்கனவே சுமார் 10,000 போட்டியாளர்களே பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்பட்டது.

இடநெருக்கடி அதிகமானால் ஒரு அறையில் 3பேர் வீதம் தங்கும்படி கேட்கப்படுவர் என அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## ஒரு வீராங்கனையின் குமுறல்

நட்சத்திர வீராங்கனையொருவர் தாம் பலவழிகளில் புறக்கணிக்கப்படுவதாக கருதுகிறார். இவர் குற்றஞ்சுமத்துவது பிரபலமான ஒரு தம்பதியினரை. கடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டி சமயத்தில் இது பகிரங்கமாகியது.

இது பற்றி அமைச்சரிடம் முறையிட வீராங்கனை குறித்த அமைச்சுக்குச் சென்றாராம். அங்கு இரு உயரதிகாரிகளைச் சந்தித்து இதுபற்றி கூறினாராம்.

"இது உண்மையென்பது எமக்குத் தெரியும். ஆனால் இதில் நாம் உதவுவதற்கு வழியில்லை. இதுபற்றி நாம் பேச முயன்றால் எமக்கும் ஆபத்தாகி விடலாம்" என்று பதிலளித்தார்களாம் அதிகாரிகள். இறுதியில் அமைச்சரை சந்திக்காமலேயே கண்ணீருடன் வெளியேறினாராம் அந்த வீராங்கனை.

## தங்கம் நிச்சயம்

சிட்னி ஒலிம்பிக்ஸில் குறுந்தூர ஓட்டத்தில் அதிக எதிர்பார்ப்புக் குரியவர்களாக அமெரிக்காவின் மௌரிஸ் கிறீன் மற்றும் மேரியன் ஜோன்ஸ் ஆகியோர் விளங்குகின்றனர்.





ஆண், பெண் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் அநேகமாக இவர்களுக்குத்தான்.

மேரியன் ஜோன்ஸ் இம்முறை 5 தங்கப்பதக்கங்களை வெல்வதாக உறுதி கூறியுள்ளார்.

## சீன குழுவில் 40 பேர் நீக்கம்

தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து விவகாரத்தில் இம்முறை கடும் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏற்கனவே பல வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுவிட்டது. சீனா தனது குழுவிலிருந்து 40பேரை நீக்கியுள்ளது. தங்கப்பதக்கம் வெல்லும் வாய்ப்புள்ள வர்களும் இதில் அடங்குவர்.


சீனா அதிக பதக்கங்களை வெல்லும் நாடுகளில் ஒன்று. கடந்த ஒலிம்பிக்கில் சீனா 4ம் இடம் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

## பொன்னான பெண்கள் என்ன ஆனார்கள்


1966ல் அமெரிக்கா பத்து வயதுப் பெண்கள் ஏழு பேர்களில் மையல் கொண்டது. அவர்கள் அழகிகள் உருக்குப்போல் உறுதியானவர்கள். 'மகோன்னதமான எழுவர்' என அழைக்கப்பட்ட இவர்கள் ஒலிம்பிக்கில் தங்க மெடல்களை வென்று பெரும் ரசிகர்களை கொள்ளை கொண்டனர். அவர்களின் சிலர் இப்போது மீண்டும் அதே முயற்சியிலுள்ளனர். வேறுசிலர் அத்துறையில் இல்லை.

ஒலிம்பிக்கில் தங்க மெடல்களை வெல்வதற்கு முன்னரேகூட அவர்கள் தம்மை 'மகோன்னத எழுவர்' என்றே அழைத்தனர். இப்போது யாவரும் வளர்ந்தவர்கள். போட்டிகளில் ஈடுபடமுடியாத காயங்களுடன் சிலரும் தனிப்பட்ட பிரச்சினைகளுடன் சிலரும் போய்விட்டனர். ஆனால் அவர்களில் நால்வர் சிட்னியில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். அவர்கள் பற்றி இதோ:-

அமந்தா போர்டன் (23) - இவர் 1996ல் அணித்தலைவியாக இருந்தார். இம்முறை சிட்னி நகரில் இவரை எதிர்பார்க்க முடியாது. அரிசோனா மாநிலத்தில் 4ம் ஆண்டைப் பூர்த்தி செய்த ஒரு மாணவி. உடற்பயிற்சிக் கூடங்களில் கற்பித்துவருகிறார்.




அமிக்கோ (22) - அட்லான்ராவின் பார்பயிற்சிகளில் வெள்ளி மெடல் பெற்றவர். பின்னர் ஸ்ரன்போட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். மீண்டும் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுகளில் பங்குபற்றுவதற்காக தனது மருத்துவப் படிப்பை தற்போதைக்கு கிடப்பில் போட்டு வைத்துள்ளார். அணிக்கு தலைமை தாங்கும் வாய்ப்பை பெற்றிருந்தாராயினும் தேசியமட்டத்தில் பார்பயிற்சிகளில் 5வது இடத்தைப்பெற்று அந்த வாய்ப்பை இழந்துள்ளார்.



டொமினிக் டாவெஸ் (23) - தரைப்பயிற்சியில் வெண்கலப் பதக்கத்தை 1996ல் பெற்றவர். பின்னர் மெரிலான்ட் பல்கலைக்கழகத்திற் சேர்ந்திருந்தார். வீடியோ திரையில் தோன்றி 'கிறீஸ்' (grease) நிகழ்ச்சியில் மிகப்பெரும் ரசிக வரவேற்பையும் பாராட்டையும் பெற்றவர். தேசிய மட்டத்தில் 9வது இடம்.

ஷனொன் மில்லர் (23) - கடந்த ஆண்டில் இவர் ஒரு கண்மருத்துவ ஆய்வாளரை திருமணம் செய்து கொண்டுள்ளார். சிட்னி ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்களை தொலைக்காட்சிக்கு வர்ணித்துவிடும் பணியில் இறங்க ஆயத்தமாக இருக்கின்றார். இரண்டு ஒலிம்பிக்ஸ்களில் ஏழு மெடல்களை பெற்ற இவருக்கு வலதுகாலில் ஒரு வெடிப்பு முன்னர் ஏற்பட்டிருந்தது.



டொமினிக் மூயானு (18) - அட்லான்ரா அணியின் குறும்புக்காரியாக இருந்தார். காயங்கள் ஏற்பட்டமை, இவரது தந்தையாருடன் பிணக்குகள் ஏற்பட்டமை, இரண்டு ஆண்டுகளுள் ஐந்து தடவைகள் பயிற்சி என்பன சுமையாகியிருந்தன. தேசியமட்டத்தில் 8வது இடம்.

ஜெயிமி டென்ட்ஸ் (20) - அரிசோனா மாநிலத்தில் கல்விகற்றபடி உடற்பயிற்சி கற்பித்தும் வருகிறார். ஒலிம்பிக் போட்டிகளுக்கான பரீட்சார்த்த விளையாட்டு நிகழ்வுகளிலிருந்து கடந்த வாரம் இவர் விலக வேண்டியதாயிற்று. முழங்காலில் ஏற்பட்ட காயமே இதற்குக் காரணமாகும்.

கேரி ஸ்ரக் (22) - தனது கணுக்காலில் காய மேற்பட்டதை, தொடர்ந்து அற்லான்ரா நிகழ்வுகளிலிருந்து பின்வாங்கியுள்ளார். இப்பொழுது ஸ்ரன்போட் பல்கலைக்கழகத்தில் கற்கும் இவர், மேலும் ஒரு ஒலிம்பிக்ஸ் நிகழ்வை தவறவிட்டுள்ளார். நேரத்தை வியல் வடம் நூல்நிலையங்களில் செலவிடுகிறார்.

1. ஒலிம்பிக் போட்டியொன்றில் சாம்பியன் பட்டம் வென்ற ஒரே கிரிக்கெட் வீரர் — அவர் பங்கேற்ற போட்டி எது?
2. எந்த ஒலிம்பிக்கில் பெண்களுக்கான மரதன் போட்டிகள் முதன்முதலாக இடம்பெற்றன? அதன் முதல் வெற்றியாளர் யார்?
3. ஒலிம்பிக் போட்டியின் துவக்க நாள் அணிவகுப்பில் எந்த நாடு முதலில் செல்லும்? எந்த நாடு கடைசியில் செல்லும்?

*பதில்கள் (தலை கீழாய்)*

[illegible]

## வயதான வீராங்கனை திறந்த ஒலிம்பிக் கிராமம்

ஒலிம்பிக் போட்டியாளர்கள் தங்கும் ஒலிம்பிக் கிராமத்தை அவுஸ்திரேலியாவில் உயிர் வாழும் அதிக வயதான முன்னாள் ஒலிம்பிக் வீராங்கனை எடிபெய்ன் திறந்து வைத்தார்.

முதன்முதலில் பெண்கள் பங்குபற்றிய 1928ஆம் ஆண்டு போட்டிகளில் 100மீற்றர், 800மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்றியவர் இவர். தற்போது இவருக்கு 94 வயதாகிறது. அவுஸ்திரேலியாவின் முதல் ஒலிம்பிக் வீராங்கனையும் இவரே. 1928இல் ஒலிம்பிக் போட்டிகளுக்காக 6 வாரங்கள் படகில் பயணம் செய்து நெதர்லாந்துக்கு சென்றதையும் அவர் செய்தியாளர்களிடம் நினைவுகூர்ந்தார்.

# அண்ணாவின் குட்டிக் கதை

குட்டிக் கதைகள் மூலம் மேடைகளில் பிரச்சினைகளை விளக்குவதில் கெட்டிக்காரரான அறிஞர் அண்ணா , தரகர்களால் ஏற்படும் விளைவு பற்றிக் கூறிய கதை இது:

ஐரோப்பிய நாட்டிலே, ''பிரடெரிக் தி கிரேட்'' என்ற மன்னன் ஒருவன் இருந்தான்.

''ஏழைகளுக்கு எவ்வளவோ செய்கிறேன். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று குறை கூறுகின்றார்களே! அது எப்படி என்று ஒரு பெரிய விருந்து நடைபெறும்போது தன்னுடைய பிரபுக்களையும், அமைச்சர்களையும் கேட்டானாம்.



அவர்களிலே வயது முதிர்ந்த அமைச்சர் ஒருவர், ''நான் இதற்குப் பதில் சொல்கிறேன்'' என்றார்.

ஆனால் அவர் அதற்கு வார்த்தையாலே பதில் தரவில்லை!

தனக்காக விருந்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு ஐஸ் கட்டியை எடுத்துப் பக்கத்திலிருந்தவரிடம் கொடுத்து, ''இதை அடுத்த பிரபுவிடம் கொடு'' என்றார்.

அவர் அடுத்தவரிடம் கொடுத்தார். அந்தப்பிரபு இன்னொருவரிடத்திலே கொடுத்தார். அப்படி 50-60 கைகள் மாறிக் கடைசியிலே மன்னர் கையிலே போய்ச் சேரும்போது, இரண்டு சொட்டுத் தண்ணீர்தான் மிச்சம் இருந்ததாம்.

முதலில் இருந்ததோ ஓர் ஐஸ் கட்டி, ''எங்கே ஐஸ் கட்டி?'' என்று கேட்டானாம் மன்னன்.

''உங்களுக்குக் கிடைத்த இரண்டு சொட்டுத் தண்ணீர்தாம். அது ஐஸ் கட்டியாகத்தான் புறப்பட்டது, இத்தனை தரகர்கள் நடுவே எடுத்ததாலே கடைசியில் உங்களுக்கு இரண்டு சொட்டுத் தண்ணீர்தான் கிடைத்தது.''

என்று விளக்கினாராம் அந்த அமைச்சர்.

# விளையாட்டுப் பிரியர் காந்தி



இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்திலே புனாவில் ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்த போதிலும் காந்தியின் ''விளையாட்டுத்தனம்'' போகவில்லை.

மாளிகையில் கிடங்கு ஒன்றில் ''டேபிள் டெனிஸ்'' கிளப் ஒன்றை ஆரம்பிக்க அன்னை கஸ்தூரிபாய் முடிவு செய்தார். ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் இந்த கிளப்பைத் தொடங்கி வைக்க காந்தி இசைந்தார்.

முதல் டேபிள் டென்னிஸ் போட்டி தனக்கும் கஸ்தூரிபாய்க்கும் இடையே நடக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

காந்திஜி ஒருபுறமும், கஸ்தூரிபாய் மற்றொரு புறமும் மட்டைகளைப் பிடித்து டேபிள் டென்னிஸ் விளையாடத் தயாரானார்கள். கஸ்தூரிபாய் முதன் முதலாக அடித்த பந்து, காந்தியின் மொட்டை மண்டையில் போய் 'சொட்' என்று விழுந்தது.

கஸ்தூரிபாய் பதறி அடித்துக் கொண்டு மட்டையைக் கீழே போட்டு விட்டு ஓடி வந்தார். ஆனால் மொட்டையில் காயம் ஏற்படவில்லை என்றாலும் மேற்கொண்டு விளையாடக் கஸ்தூரிபாய்க்குப் பிரியமில்லை.

ஆனால் காந்தியோ விடுவதாக இல்லை. எதுவும் நடவாதது போல் தொடர்ந்து விளையாடினார்.

''வெள்ளையனே வெளியேறு''- போராட்டத்திற்குப் பின்னர், காந்தியும் மற்றத் தலைவர்களும் ஆகாகான் மாளிகையில் அடைக்கப்பட்டிருந்தனர். ஒரு சமயம் காந்தியை ''பேட்மிண்டன்'' விளையாடக் கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு அழைத்தார்.

''இதற்கு முன்னர் நான் பேட்மிண்டன் விளையாடியதில்லை, என்றாலும் உன்னைத் தோற்கடிக்கிறேன் பார்'' என்று காந்திஜி சவால் விட்டார்.

திருமதி சரோஜினி நாயுடுவுக்கு வலது மணிக்கட்டில் ஏதோ காயம் ஏற்பட்டிருந்தது.

அதனால் இடது கையில் மட்டையைப் பிடித்து விளையாடத் தொடங்கினார். காந்தியும் இடது கையில் மட்டையைத் தூக்கிக் கொண்டு விளையாட முற்பட்டார்.

''எந்தக் கையில் மட்டையைப் பிடிப்பது என்றே உங்களுக்குத் தெரியவில்லையே நீங்களா என்னைத் தோற்கடிக்கப் போகிறீர்கள்?'' என்று திருமதி சரோஜினி நாயுடு கேலி செய்தார்.

''நீ மட்டும் ஏன் இடது கையில் மட்டையைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று காந்தி வினவினார்.

''வலது கையில் காயம், அதனால்தான்'' என்று கவிக்குயில் பதில் கூறினார்.

எனினும் காந்தி தொடர்ந்து இடது கையிலேயே மட்டையைப் பிடித்துக் கொண்டு விளையாடினார். ''ஏன்?'' என்று சரோஜினி நாயுடு மீண்டும் வினவினார்.

''முதலில் தவறுதலாக இடது கையில் மட்டையைப் பிடித்தேன். ஆனால் இப்போது தவறு புரிந்து விட்டது. ஆனால் ஒரு பெண்ணுக்குக் காயம் பட்டிருக்கும்போது அந்நிலையை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை'' என்று காந்தி தமக்கே உரிய முறையில் பதில் சொன்னார்.

# கடத்தல் வீரப்பனுக்கு சற்றலைட் பாரசூட்!

சந்தன மரக்கடத்தல்காரனாக இருந்த வீரப்பன் கர்நாடக நடிகர் ராஜ்குமாரைக் கடத்திச் சென்ற பின்னர் அவனுடைய கீர்த்தி பெருதாகித்தான் விட்டது.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியும் கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணாவும் அவனுக்குத் தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குக் கிடைத்த தூதுவர் நக்கீரன் பத்திரிகையாளர். தூதுவர் அங்குமிங்குமாகத் தூது சென்று கொண்டிருக்கிறபோதிலும் ராஜ்குமார் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் பொலீஸ் என்ன செய்கிறது என்று இரு மாநிலங்களின் மக்கள் கேட்கத் தொடங்கி விட்டார்கள். எனவே வீரப்பனை மடக்குவதற்கு இந்திய ராணுவம் திட்டம் தீட்டி வருகிறது.

வீரப்பனைப் பிடிப்பது எப்படி? இது தொடர்பாக இந்திய ராணுவ நிபுணர்கள் அதிரடித் திட்டம் வகுத்திருக்கிறார்கள். சற்றலைட் எனப்படும் செயற்கைக்கோள், மற்றும் பாரசூட் ஆகியவற்றைப் பயன்படுத்த திட்டம் தீட்டியிருக்கிறார்கள்.

வீரப்பன் இருக்கும் பகுதியைச் செயற்கைக் கோள் மூலம் கண்டறிந்து பின்னர் விமானத்தில் சென்று பாரசூட் மூலம் வீரர்களை அங்கே குதிக்க வைத்து வீரப்பனை மடக்குவது. இது தான் திட்டம்.



வீரப்பன் கோஷ்டி பதுங்கியிருக்கும் சத்தியமங்கலம் காட்டுப் பகுதி 6000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டது. தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய 3 மாநிலங்களைச் சேர்ந்த 8 மாவட்டங்களில் இந்தக் காட்டுப் பகுதி விரிந்து கிடக்கிறது.

இந்தக் காட்டுப் பகுதிக்குள் இருக்கும் வீரப்பனின் இருப்பிடத்தைச் செயற்கைக்கோள் மூலம் துல்லியமாகக் கண்டு பிடிக்கலாம். வீரப்பன் இருக்கும் இடத்தை, அவனுடைய நடமாட்டத்தை வானவெளியிலிருந்து செயற்கைக்கோள் கமெரா மூலம் படம் பிடிக்கலாம் என்று நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

வீரப்பன் இருக்கும் பகுதியை செயற்கைக் கோள் கண்டு பிடித்ததும் விமானம் மூலம் ராணுவ கமாண்டோ படை வீரர்கள் அங்கு அனுப்பப்படுவார்கள். அவர்கள் பாரசூட் மூலம் அந்தப் பகுதியில் குதிப்பார்கள். பின்னர் வீரப்பனைச் சுற்றி வளைப்பார்கள் என்று திட்டமிடப் பட்டுள்ளது.

அதே நேரத்தில் வீரப்பன் மறைந்துள்ள பகுதிகளில் குண்டுமாரி பொழிவதற்கும் திட்டம் இருக்கிறது. குண்டுகள் வந்து வீழ்ந்தால் வீரப்பனின் கும்பல் சிதறி ஓடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீரப்பன் பதுங்கும் எல்லா ஒளிவிடங்களையும் பட்டியலிட்டு செயற்கைக்கோள் மூலம் அந்த இடங்கள் கண்காணிக்கப்படுகின்றன. கொள்ளைக்காரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் அவர்களிடம் இருக்கும் ஆயுதங்கள் எத்தகையவை என்பதெல்லாம் கணக்கிடப்படும். இதன் அடிப்படையில் அதிரடித் தாக்குதல் நடத்தப்படும்.

வீரப்பனைப் பிடிப்பதற்கு இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று இந்திய ராணுவ நிபுணர்கள் அதிரடித் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

வீரப்பனைப் பிடிப்பதற்கு ஏற்கனவே பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றுடன் ஒப்பிடும் போது இந்தப் புதிய அதிரடித் தாக்குதல் திட்டம் பிரமிப்பைத் தருவதாகத்தான் இருக்கிறது. ஆனால் இது நடைமுறையில் சாத்தியப்படுமா என்று அரசியல்வாதிகள் கேட்கிறார்கள்.

வீரப்பன் தனியாகக் காட்டுக்குள் அட்டூழியம் செய்து கொண்டிருக்கும் வேளையில் இத்தகைய தாக்குதல்களை நடத்துவது சாத்தியப்படலாம். ஆனால் உயர்ந்த தரத்திலுள்ளவரும் கர்நாடக மக்களின் உள்ளம் கவர்ந்தவருமான நடிகர் ராஜ்குமார் வீரப்பன் பிடிக்குள் சிக்கியிருக்கும் இவ்வேளையில் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமா?

வீரப்பனைப் பிடிக்க சற்றலைட்டையும், பாரசூட்டையும் பயன்படுத்தினால் அதனால் முதலில் பாதிக்கப்படுபவர் நடிகர் ராஜ்குமாராகத்தான் இருப்பார்.

–கதாசி

17.09.2000 தொடக்கம்
23.09.2000 வரை

# ராசி பலன்

பொ.சந்திரன் ஜோதிடர்

## மேஷம்

*அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்.*

சுபமான காலம். இரண்டாம் வீட்டில் சனி குரு இருப்பதால் பொருளாதாரம் தடைப்படாமல் இருக்கும். பேச்சுக்கு மதிப்பிருக்கும். சுக்கிரன் தன் சொந்த வீட்டுக்கு வருவதால் குடும்ப சுகம், தன தான்யப் பெருக்கம், நண்பர்களின் உதவி, பங்கு வியாபாரம் பல மடங்கு இலாபம் தரும். உறவினர் அன்பு பாராட்டுவர். சுற்றத்தவர் கூடிக் குலாவுவர். வீரிய ஸ்தானத்தில் ராகு இருப்பது உடல் உறுதி, விவசாயப் பெருக்கம், நோய் இன்மை, இளைய சகோதர உதவி உண்டு. 6இல் சூரியன் இருப்பது பகைவரின் தொல்லை இல்லாமல் இருக்கும். அரச மரியாதை கிடைக்கும்.

## ரிஷபம்

*கார்த்திகை 2,3,4ஆம்பாதம். ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்.*

இராசிநாதன் வார மத்தியில் ஆட்சி பெறுவதால் தாமதமானாலும் காரிய சித்தியுண்டு. 2இல் ராகு இருப்பது பணப்புழக்கம் தடைப்படலாம். சொல்லிய வண்ணம் செயற்பட முடியாது. தேக ஆரோக்கியம் நன்றாயிருக்கும். உடன் பிறந்தவர்கள் உதவுவர். வீடு, வாகன சுகம் உண்டு. மனத்தில் இனம் புரியாத பயம் இருக்கும். 7ஆம் அதிபன் கேந்திரம் ஏறுவது நலம். குருவின் பார்வை 7ஆம் வீடு பெறுவது நண்பர்கள் உதவி, பங்கு வியாபாரம் செழிக்கும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். 10ஆம் அதிபன் கேந்திரத்தில் இருப்பது தொழில் வளர்ச்சி, பதவியில் மதிப்பு பேர் புகழ் ஏற்படும்.

## மிதுனம்

*மிருகசீரிடம்3,4ஆம்பாதம். திருவாதிரை. புனர்பூசம் 1,2,3ஆம் பாதம்.*

இராசிநாதன் 4ஆம் அதிபன் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருப்பது அதிஷ்டம், சுகம் உண்டு. வீடு, வாகன லாபம், மனத் தைரியம், கல்வி முன்னேற்றம் என்பன உண்டு. இருப்பினும் இராசியில் ராகுவும் 7இல் கேதுவும் இருப்பது நண்பர்களால் தொல்லை. குடும்ப உறவு பாதிப்படைதல், கூட்டு வியாபார விரிசல். 2ஆம் வீட்டை சனி பார்ப்பது நாளாந்த பணப் புழக்கத் தட்டுப்பாடு உரிய நேரத்திற்கு பணம் வராது. 4ஆம் வீட்டை குரு பார்ப்பது ஓர் அளவுக்கு ஆறுதல் உண்டு. 10ஆம் வீட்டை சூரியன் பார்ப்பது தொழில் விருத்தி ராஜ மரியாதை பதவி உயர்வு பேர் புகழ் உண்டு.

## கடகம்

*புனர்பூசம் 4ம்பாதம், பூசம். ஆயிலியம்.*

இராசியை சனி நோக்கினாலும் சந்திரன் உச்சம் பெறுவது கருதிய கருமம் கைகூடும். மதிப்பு உயரும். 2இல் செவ்வாய் இருப்பது கைப்பொருள் கரையும். கடும் சொற்களைப் பயன் படுத்துவீர்கள். 3இல் சூரியன் இருப்பது உடற்சுகம் நன்றாக இருக்கும். சகோதர உதவி இருக்கும். விவசாய முன்னேற்றம் உண்டு. உழைத்து வாழ்பவர்கள் பயன் பெறுவர். 4ஆம் வீடு பலம் பெறுவது வீடு, வாகன யோகம் உண்டு. உறவினர் அன்பாய் இருப்பர். கல்வி முன்னேற்றம் உண்டு. 6ஆம் 12ஆம் இல்லங்களில் பாம்பு இருப்பது யோகம். கடன் தீரும். எதிரிகள் தொலைவார்கள். 10ஆம் வீட்டை சந்திரன் நோக்குவது தொழில் வளம் பெருகும்.

## சிங்கம்

*மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்.*

இராசிநாதன் 2இல் இருந்து குருவின் பார்வை பெறுவது நல்லது. எல்லா இடரும் தீரும். பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். சொல்லியவாறு செயற்பட முடியும். 3ஆம் வீடு வலுப்பெறுவது உடற் பலம் அதிகரிக்கும். நோய் எதிர்ப்புச்சக்தி பெருகும். 4ஆம் அதிபன் இலக்கினத்தில் இருப்பது வீடு, வாகனத்தைப் பற்றிய கவலை இருக்கும். தாயின் உடல் நிலை பாதிப்படையும். குருவின் பார்வை பெறுவதால் நலமடையும். இனபந்துக்கள் ஒற்றுமையாக இருப்பர். 10இல் குரு இருப்பது சகல விதமான நன்மைகளையும் தருவார். பதவி உயர்வு உண்டு. சமூகத்தில் மதிப்பு உண்டு.

## கன்னி

*உத்தரம் 2,3,4ஆம் பாதம். அத்தம். சித்திரை 1,2ஆம் பாதம்.*

இராசியில் குருவின் பார்வை படுவது நினைத்த மாதிரி வாழ்க்கையை நடத்திச் செல்லலாம். இது வரை இருந்து வந்த மனக் கஷ்டங்கள் விலகும். 2ஆம் வீட்டை சந்திரன் ஆட்சி செய்வது யோகம். பணவரவு அதிகரிக்கும். சொல்லுக்கு மதிப்பு உண்டு. 3ஆம் வீட்டை குரு திருஷ்டிப்பது சகோதர உதவி இருக்கும். தேகசுகம் நன்றாக இருக்கும். 4இல் கேது இருப்பதால் சுற்றத்தவர் பகை கொள்வர். வாகனம் ஓட்டுவதில் நிதானம் வேண்டும். வீட்டில் திருத்த வேலைகள் இருக்கும். 10இல் ராகு இருப்பது பதவிக்கு ஆபத்து. தொழில் போட்டி இருக்கும். இறை பிரார்த்தனை அமைதியைக் கொடுக்கும்.

## துலாம்

*சித்திரை 3,4ஆம் பாதம். சுவாதி. விசாகம் 1,2,3ஆம் பாதம்.*

இராசிநாதன் இராசியில் வருவது நல்லது. நெடுநாள் கண்ட கனவு நனவாகும். 2ஆம் அதிபன் இலாபம் அடைவது நல்லது. பணக்கஷ்டம் இருக்காது. 3இல் கேது இருப்பது சிறப்பு. உடற்சுகம் நன்றாக இருக்கும். சகோதர உதவியுண்டு. சளி, சுரம் அல்லது தொண்டையில் கரகரப்பு இருக்கும். 4ஆம் வீட்டை குரு பார்ப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. உறவினர் உதவி செய்வர். வீட்டில் வருமானம் உண்டு. 7ஆம் அதிபன் 11இல் இருப்பது நண்பர்கள் உதவி செய்வர். புதிய காதல் உருவாகும். கூட்டு வியாபாரம் நன்மை அடையும். குடும்ப விசுவாசம் இருக்கும். 10ஆம் வீட்டை சனி நோக்குவது வெளியார் தலையீடு தொழிலில் இருக்கும்.

## விருச்சிகம்

*விசாகம் 4ஆம்பாதம். அனுசம். கேட்டை.*

குருபகவானின் பார்வை இராசியில் படுவது சரியோ பிழையோ எடுத்த காரியம் முடிப்பீர்கள். 2இல் கேது இருப்பது பொறுத்த நேரத்தில் பணத் தட்டுப்பாடு நிலவும். 6ஆம் அதிபன் இராசியை நோக்குவது பகைவரின் அச்சுறுத்தல் இருக்கும். கடன்பட நேரிடும். 4ஆம் அதிபன் கேந்திரத்தில் இருப்பது வாகன யோகம் உண்டு. உறவினரின் ஒத்துழைப்பு இருக்கும். கல்வி முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் உதவி செய்வார்கள். பங்கு முதலீடு நன்மையில் முடியும். 8இல் ராகு இருப்பது ஆயுள் பலம் இருக்கும். 10இல் செவ்வாய் இருப்பது தொழில் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். எல்லாவித சவாலையும் எதிர் கொண்டு வெல்வீர்கள்.

## தனு

*மூலம். பூராடம். உத்தராடம் 1ஆம் பாதம்.*

இராசியில் கருநாகம் இருப்பது சங்கடத்தைக் கொடுக்கும். 7இல் ராகு இருப்பது நண்பர்களுக்கிடையில் மோதல், பங்கு வியாபாரம் தோல்வியில் முடியும். காதலர் வாழ்வு கசக்கும். இருப்பினும் 7ஆம் அதிபன் இலாபத்தானத்தில் இருப்பது ஆறுதலைத் தரும். 2ஆம் 3ஆம் அதிபன் 6இல் இருப்பது கடன்பட நேரிடும். சகோதர உதவி இருக்காது. 10இல் சூரியன் இருப்பது எல்லாவித நன்மைகளையும் கொடுக்கும். தொழில் பாதுகாப்பு, பதவி உயர்வு. குருபார்வை பெறுவது சமூகத்தில் மதிப்பு, அரச மரியாதை, ஆயுள் பலம், தெய்வ பக்தி, குறுகிய பயணம் அமையும்.

## மகரம்

*உத்தராடம் 2,3,4ஆம் பாதம். திருவோணம். அவிட்டம் 1,2ஆம் பாதம்.*

இராசிநாதன் இரண்டாம் அதிபன் 5இல் இருப்பது பூர்வ புண்ணியம் வேலை செய்யும். பலநாள் கண்ட கனவு நனவாகும். பொருளாதாரம் பலமடையும். மூன்றாம் அதிபன் 5இல் இருப்பது பிற் சகோதர நன்மை, உடல் ஆரோக்கியம், தொழிலாளர் நன்மை பெறும் காலம். 4ஆம் 11ஆம் அதிபன் 8இல் இருப்பது மாதா நோய்வாய்படல், இலாபம் குறைதல் உண்டு. 5ஆம் 10ஆம் அதிபன் பலம் பெறுவது குழந்தைகள் சுகமாக இருப்பார்கள். தொழில் நன்கு விருத்தியடையும். மனோபலம் பெருகும். நல்ல சிந்தனைகள் செயல்கள் உருவாகும். அதிஷ்டம் வரலாம். தொலைந்த பொருள் சேரலாம்.

## கும்பம்

*அவிட்டம் 3,4ஆம் பாதம். சதயம். பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்.*

இராசி நாதன் சுகஸ்தானத்தில் இருப்பது நல்லது. வீடு, வாகன சுகம், உறவினர் உதவி இருக்கும். சுற்றத்தாரோடு சேர்ந்து கூடிக் குலாவலாம். 10ஆம் அதிபன் செவ்வாய் கேந்திரத்தில் இருந்து நோக்குவது கவனம், நிதானம் வேண்டும். நண்பர்கள் உதவுவார்கள். எதற்கும் பிணைக்குப் போக கூடாது. 5ஆம் வீட்டில் ராகு இருப்பது மாறுபாடான சிந்தனைகள் தோன்றும். அம்மன் அருள் கிடைக்கும். 9ஆம் இடம் பலம் பெறுவது பிதா நலம், அதிஷ்டம் கிடைக்கலாம். தூர தேச பிரயாணம் அமையலாம். தொழில் சிறப்பு உண்டு. புதிய நட்புகள் அமையும். குடும்ப சுகம் உண்டு.

## மீனம்

*பூரட்டாதி 4ஆம் பாதம். உத்தரட்டாதி. ரேவதி.*

இராசிநாதன் 10ஆம் அதிபன் 3இல் இருப்பது செய்கருமம் தடைப்படல், செய் தொழில் முன்னேற்றம் இல்லை. எதிரிகள் பலம் பெறுவர். 2ஆம் 9ஆம் அதிபன் 6இல் இருப்பது கடன்பட நேரிடும். பிதா நோய் அடையலாம். அதிஷ்டம் இல்லை. இருப்பினும் தெய்வ வழிபாடு, பிரார்த்தனையில் சகல தோஷங்களையும் நீக்க 6இல் உள்ள செவ்வாய் உதவி செய்வார். முருகப் பெருமானின் அருள் கிட்டும். 7இல் சூரியன் இருப்பது குடும்ப சுகம் பாதிப்படையலாம். நண்பர்கள் விலகி இருப்பார்கள். பங்கு வியாபாரம் பாதிப்படையலாம். சுக்கிர பார்வை கிட்டுவது நல்லது.



# பரிசு: அரசனின் அங்கியை வென்ற பழந்துணி!

கலை ஆர்வமுள்ள ஒரு மாமன்னன். கலைஞர்களுக்கு அள்ளி அள்ளித் தரும் நாட்டம் மிக்கவன். கலை வளர்ச்சிக்குக் கொடை தரத் தயங்காதவன்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு கூத்தாடி வந்தான். அவன் மாடு வேஷம் போட்டுப் புதுமையாக ஆடுபவன். அவனது ஆட்டத்தின் சிறப்புணர்ந்த பல அரசவை அங்கத்தவர்கள் அவனைப் பற்றி மாமன்னனுக்குக் கூறி வைத்தனர்.

கலைப் பக்தனான மாமன்னன், உடன் கலைஞனைக் கூட்டி வர ஆளனுப்பினான். கூத்தாடி வந்தான். மாடு வேஷத்தில் அவன் மன்னனுக்கு முன் அற்புதமாக ஆடினான். அந்த ஆட்டத்தில் மாமன்னன் அப்படியே சொக்கிப் போனான் ஆட்டம் மாமன்னனைப் பெரிதும் கவர்ந்தது.

ஆட்ட முடிவில், மாமன்னன் தனது மணியாரம் தரித்த மேலங்கியை அந்த அற்புதக் கலைக் கூத்தாடிக்கு அணிவித்து மகிழ்ந்தான்.

அங்கியைப் பரிசாகப் பெற்றுக் கொண்டு வெளியே வந்த கூத்தாடியை மக்கள் சூழ்ந்து கொண்டனர். தமக்கும் ஆடிக் காட்டும்படி வற்புறுத்திக் கேட்டனர்.

கூத்தாடி, மன்னன் தந்த பரிசைக் கீழே வைத்து விட்டு மாடு வேஷத்தில் ஆடினான். மக்கள் மெய்மறந்து ரசித்தனர். மன்னனும் தனது மேல் மாடியிலிருந்து இரண்டாந் தடவையாக ரசித்தான்.

ஆட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் கூட்டத்திலிருந்து ஒருவர் உள்ளே நுழைந்து கூத்தாடியின் பக்கத்தே வந்து தன் கையிலிருந்த சிறு தடியால் கூத்தாடியின் மீது ஒரு குத்து விட்டார்.

கேட்க வேண்டுமா? ஆட்டம் சூடு பிடித்தது. கூத்தாடி மன்னன் முன்னிலையில் ஆடியதை விடப் பல மடங்கு உற்சாகமாக, வேகமாக ஆடினான். மறுபடியும் அந்த மனிதன் லாகவமாக மறுகுத்து விட்டான்.

ஆஹா! ஆட்டம் புதுத் திருப்பம் பெற்றது. "அற்புதம்! அற்புதம்! என்று எல்லா மக்களும் வாய் விட்டுக் கூச்சலிடும் வரை ஆட்டம் களை கட்டி நின்றது.

ஆட்டம் முடிந்து கூத்தாடி போகும் போது தடியினால் குத்து விட்ட அந்த மனிதன் அழுக்கும் தூசியும் படிந்த தனது கிழிசல் அங்கியைக் கூத்தாடி மீது போர்த்து மகிழ்ந்தான்.

கூத்தாடி கீழே கிடந்த மாமன்னன் தந்த விலை மதிப்பு மிக்க பரிசான மணியாரம் தரித்த அங்கியைக் கீழே விரித்தான். அதனுள் அந்த அழுக்குப் படிந்த கிழிசல் அங்கியை வைத்து மணியார அங்கியைக் கொண்டு அதை மூடையாகக் கட்டி முதுகில் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

மாடியிலிருந்து இத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த மன்னன் அப்படியே அதிர்ந்து போனான். கூத்தாடியை மீண்டும் அழைத்து வரச் செய்தான்.

கூத்தாடியைப் பார்த்து "கலைஞனே, எனது உயர்வான மேலங்கியை அந்த நாற்றம் பிடித்த கிழிசல் அங்கியைச் சுற்றும் பொருளாக ஏன் ஆக்கினாய்? என்று சற்றுக் கோபமாகவே கேட்டான்.

கலைஞன் பதில் சொன்னான்: "மாமன்னா, தடியால் என்னைக் குத்தி; என் ஆட்டத்தை உற்சாகப்படுத்தியவர். என் கூத்தை முழுமையாக ரசித்தவர்; என்னை அந்த வேளையில் அவர் மாடாகவே கண்டார். எனவே தான் அவரது பரிசை உங்களுடையதை விட மேலாக நான் மதிக்கிறேன்" என்றான்

எல்லாம் ரசனையாகி விடுமா? எல்லாந்தான் பரிசில்களாகி விடுமா?

**எச்.எம்.பி. மொஹிதீன்**

# பாட்டியின் காதல்!

"இந்த நாட்டில் அடுக்குமா இந்த அநியாயம்?" என ஆத்திரப்பட்டாள் அந்தப் பாட்டி; அவளுக்கு 72 வயது.

அவளது மனக்குறை என்னவோ? அவள் கல்யாணம் செய்து கொள்ள அரசாங்கம் அனுமதிக்கவில்லையாம். எத்தனை யாவது கல்யாணம்? நாலாவது கல்யாணம்.

இஸ்ரவேல் நாட்டில் இந்தச் சம்பவம் நடந்தது. அங்கு கல்யாணம் செய்து கொள்ள விரும்பும் தம்பதிகள், அதற்கென்றே உள்ள கல்யாண நீதிமன்றத்தில் மனுச் செய்ய வேண்டும். அங்கு அனுமதி கிடைத்த பிறகே கல்யாணம் நடக்கலாம். அதேபோல, நாலாவது கல்யாணம் செய்து கொள்ள அந்தப் பாட்டி மனுச் செய்தாள். அவளுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

அவளது முன்னைய மூன்று கணவர்களும் இறந்து போனார்கள். "மூன்று கணவர்களைப் பறி கொடுத்தவள் முழு மூளி" என்பது இஸ்ரவேலிய நம்பிக்கை. இப்படிப்பட்டவளை மணந்து கொள்ள யாரும் முன்வர மாட்டார்கள். வந்தாலும் கல்யாண நீதிமன்றம் அனுமதிக்காது.

"இது அநியாயம் இல்லையா? எனக்கென்ன அப்படி வயசாகி விட்டது? என்னை அந்த மனிதர் (67 வயது) மனசாரக் காதலிக்கிறார்; அவர் நியாயவான்; கல்யாணம் பண்ணாமலே ஒன்றாக வசிக்கலாம் என்றால் கேட்க மாட்டேன் என்கிறார். கல்யாணம் செய்யவோ அனுமதி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். எங்கள் உண்மைக் காதலின் முடிவுதான் என்ன?" என்று அங்கலாய்க்கிறாள் அந்தப் பாட்டி.

# ஜெர்மனியர் அழித்தொழித்த ஹெரேரோ இனத்தவர்கள்

## மறக்கப்பட்ட மனிதக் கொலைகள்!



இன்றைய தலைவர் குவைமா நிறுவாக்கோ

வரலாற்றில் மறக்கப்பட்டுவிட்ட மனித இனக் கொலை பற்றிய பேச்சுக்கள் இப்போது தலையெடுத்துள்ளன.

நமீபியாவின் ஹெரேறோ இனத்தவர் ஜேர்மனியினால் 1904ம் ஆண்டு அழிக்கப்பட்டனர். இது தொடர்பான ஞாபகார்த்த வைபவங்களை நடத்தக்கூட இன்று ஆட்கள் இல்லை.

இன்று நமீபியாவை ஆளுபவர்கள் ஓவம்போ இனத்தவர். ஹெரேறோ இனத்தவர் பூண்டோடு அழிந்தவேளை ஓவம்போ இனம் தப்பி பிழைத்திருந்தது.

ஆனால் ஹெரேறோ இனத் தலைவரின் சிலையொன்று இப்போதும் நமீபியப் பாராளுமன்றத்தின் முன்றலில் இருக்கிறது. ஆட்சியாளரின் உத்தரவின் பேரில் அதனை



ஜேர்மனியினர் தூக்கிலிட்ட ஹெரேரோ இனத்தவர்களில் சிலர் பிரேதங்களாகத் தொங்கும் காட்சி

பிளாஸ்ரிக் துணியினால் மூடிக் கட்டியிருக்கின்றனர். இதேவேளை, அந்தக் காலனித்துவ காலகட்டத்தில் சுறுசுறுப்பாக இயங்கிவந்த ஒரு தடுப்பு முகாமொன்றின் முன்பாக ஒரு ஜேர்மன் படைவீரனின் சிலையொன்றும் சுவட்டைக் கிழித்துக்கொண்டு அங்கே வீசப்பட்டுக் கிடப்பதாக அறியப்படுகிறது.

ஹெரேறோ இனத்தவரில் இன்று எஞ்சியுள்ள மிகச்சிலர் கேவலமான உண்மைகளை தோலுரித்துக் காட்ட முன்வந்துள்ளனர். ஆகஸ்ட் மாதம் அவர்கள் ஓகஹண்ட்ஜாவில் ஒன்று கூடினர். ஓகஹண்ட்ஜா- அவர்களது மரபுவழித் தலைநகரம். 1900மாம் ஆண்டுகளில் எவ்வகை ஆடைகள் பழக்கத்திலிருந்தனவோ அவ்வகை ஆடைகளை அணிந்து அங்கு கூடினர். மரணித்தவர்களை மனத்திலிருத்திப் பாடல்களைப் பாடினர்.

படித்து அறிஞர்களாக உலகின் பல இடங்களிலும் வாழ்பவர்கள் தேசியப் பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடி ஒரு ஆணைக் குழுபோல் செயற்பட்டு, சாட்சியங்கள், சான்றுகளை பதிவுசெய்யவுள்ளனர்.

அதாவது, கைதிகளாக்கப்பட்ட ஹெரேறோக்கள் பற்றி விபரமறிந்தவர்கள் அளிக்கும் சான்றுகளை பதிவுசெய்வர். அச்சண்டையின்போது அவர்களின் அந்தப்புரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக பிடித்துச் சென்ற அழகிகளின் முடிவுகள் என்னவாயிற்று என்பது பற்றியெல்லாம் அறிந்தவர்களின் கூற்றுக்களைப் பதிவுசெய்வர். இவ்வாறு இவர்கள் முன்னெடுக்கும் பிரசாரத்திற்கு திட்டவட்டமான இலக்குகள் உண்டு.

அதாவது, பலியானவர்களின் பரம்பரை யினருக்கு பொருளாதார அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புகள் ஏற்படும். இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட யூத, ஜிப்சி, துருக்கிய அடிமைத் தொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட முடியுமானால் ஹெரேறோக்களுக்கு மட்டும் ஏன் முடியாது- அவர்கள் கறுப்பர்கள் என்பதனாலா என்று அவர்கள் கேள்வி யெழுப்புகின்றனர். உண்மைகளிலிருந்து ஜேர்மனி தப்பவே முடியாது என்று கூறும் அவ்வினத்தினரின் இன்றைய தலைவர் குவைமா றிறுவாக்கோ, தாம் சர்வதேச நீதிமன்றத்தில் ஜேர்மனியச் சட்டங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், யுத்தமொன்று இவ்விரு தரப்பினரிடையேயும் எவ்விதம் ஆரம்பித்தது என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு ஒவ்வொரு தரப்பும் எதிர்த்தரப்பை குற்றஞ்சாட்டுகின்றனர். பரஸ்பரம் வளர்ந்து வந்த சந்தேகமே காரணமென்றாலும், ஜேர்மனியரிடமிருந்த உள்நோக்கம் குறிப்பிடத்தக்கது.

சண்டை ஆரம்பித்த வேளை ஜேர்மன் அதிகாரியொருவர் தனது நாட்குறிப்பில் "இந்த இனம் முழுவதுமே அழிக்கப்படுவது மிகவும் பொருத்தமானதாகும்." எனக் குறிப்பிட்டிருந்தார். வேறு ஒரு அதிகாரி தனது போர்க் குறிப்பேட்டில் பின்வரும் வார்த்தைகளை பொறித்திருந்தார். "இந்தப் போரானது இந்த இனம் முழுவதும் அழிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்டது என்று முன்னரே எம்மிடம் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தது."

யுத்தம் முடிந்ததுமே 1904ல் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஹெரேறோக்கள் ஜேர்மனியின் வர்த்தக நிலையங்களுக்கு அடிமைத் தொழிலாளர்களாக அனுப்பப்பட்டனர். இத்தகைய நிறுவனங்கள் சில இப்போதும் உண்டு. ஒரு பகுதி அடிமைகள் கப்பற் துறை முகங்களுக்கு பயன்பட்டனர். அங்கெல்லாம் ஊட்ட மற்றவர்களாக, மிகை உழைப்பாளிகளாக அத்துடன் நோய் பீடிக்கப்பட்டவர்களாக ஆகி பலரும் இறக்க நேரிட்டது. இவ்வாறு ஆரம்பத்தில் 80,000 பேர்களாக விருந்த அகதிகள் 1910ல் 15,000 பேர்களாக குறைந்தனர்.

ஜேர்மனியிடமிருந்து நட்டஈடு பெறுவ தென்பது சிரமமான காரியம். அரிசோனா பல்கலைக்கழக மாணவர் ஒருவர் "அது ஆபிரிக்கா. அது ஓரங்கட்டப்பட்டுள்ளது. அவர்கள் வெள்ளையர்களல்லவே. (அதனால்) அரசாங்கம் ஆதரவு தராது." என தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். என்றாலும், மறக்கப்பட்ட மனிதக் கொலைகளை நினைவூட்டி- இந்தத் தலைமுறையைக் காப்பாற்ற முயற்சி உருவாகியுள்ளது!- இதன் வெற்றி ஜேர்மன் அரசின் கைகளிலும் முயற்சியின் தீவிரத்திலும் அடங்கியுள்ளது!

-தர்மலிங்கம்

# புலிகளுக்கு இன்று எங்கும் ஆபத்து



இலங்கையில் புலிகள் கொலை இப்போது அதிக அளவில் நடைபெற்று வருகிறது.

யானைகளைப் போலப் புலிகளும் தேடிக் கொல்லப்படும் 'அவலம்' நடக்கிறது.

இது எங்கே போய் முடியும்? புலிகள் அதாவது சிறுத்தைகள் முற்றாக அழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் பலருக்கு.

எகிப்திய அரசர்கள் சிறுத்தைகளை தம்முடன் செல்லப் பிராணிகளாக அழைத்துச் செல்வது வழக்கமாயிருந்தது. அவைகள் மணிக்கு 60 மைல்கள் (மணிக்கு 96 கி.மீ) வேகத்தில் ஓடக்கூடியன. இந்த வேகத்தை அவர்கள் பெரிதும் நம்பி இவைகளை வேட்டைகளின் போது பயன்படுத்தினர்.

கால்நூற்றாண்டிற்கு முன்னர் ஆபிரிக்காவின் 44 நாடுகளில் சுமார் 30,000 வரையில் வாழ்ந்த சிறுத்தைகள் இன்று 26 நாடுகளில் 15,000 ஆகக் குறைந்து காணப்படுகின்றன. இன்று தென்மேற்கு ஆபிரிக்காவில் நமீபியாவின் அழகிய சவன்னா காடுகளில் வாழும் 3000 சிறுத்தைகள்தான் இன்று வாழும் இவ்வினத்தின் மிகப்பெரும் தொகுதியாகும்.

இங்குதான், சிறுத்தை வளப்பாதுகாப்பு நிதியத் (**Cheetah Conservation Fund**)தின் ஆரம்பகர்த்தாவாகவும், வன வளப் பாதுகாப்பு உயிரியல் நிபுணருமான லௌறி மாக்கர் இப்பிராணியின் உயிர் வாழ்க்கையை உறுதி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

சிறுத்தைகளை இனப் பெருக்கம் செய்யும் வெற்றிகரமான முறையொன்றை இவர் விருத்தி செய்தார். காயம் (**khayam**) எனப் பெயரிடப்பட்டு இவரால் வளர்க்கப்பட்டு வந்த சிறுத்தையொன்றினை பயன்படுத்தி, இவற்றை மீண்டும் காடுகளுக்கு அனுப்பி விருத்தியடைய வைத்தல் சாத்தியமானதா என்பதை ஆய்வு செய்தார். இதற்கென இவர் 1980களில் பல தடவைகள் நமீபியா சென்று திரும்பினார்.

## தப்புவது எப்படி?

இந்தப் பிராணி தாயிடமிருந்து ஊட்டப்படும் 18-22 வரையான மாதகாலப் பயிற்சியெதுவும் இல்லாமலேயே தனது உளத்தூண்டல் காரணமாக வேட்டையாடி உண்டு வந்தாலும்கூட, எவ்வாறு தப்பிப் பிழைத்துக்கொள்வது என்பது காயத்திற்கு தெரியாமலேயே இருந்தது.

இதனால், சிறுத்தைகளை அழிவிலிருந்து காக்கும் விடயத்தில் கண்டிப்பாக இருக்க வேண்டுமானால், தான் ஆபிரிக்காவில் சென்று வசிக்கவேண்டியிருக்கும் என்பதை மாக்கர் உணர்ந்தார்.

1990ல் இவர் தேசிய வனவிலங்கு சரணாலயப் பகுதிக்கண்மையிலுள்ள மூன்று பண்ணைகளை தனது நோக்கங்களின் பாவனைக்காகப் பெற்றெடுத்தார். அத்துடன் சிறுத்தைவளப் பாதுகாப்பு நிதியமொன்றினையும் ஆரம்பித்தார். இவர் அவ்வூரின் விவசாயிகளுடன் பரஸ்பர உரையாடல்களையும் ஆரம்பித்தார். தான் முதன்முதலாக அங்கு சென்ற காலத்தில் அவர்கள் சிறுத்தைகளை ஒரேயடியாக கொன்று வந்தனர் என்று மாக்கர் இப்போது நினைவுகூர்கிறார்.

அதிஷ்டவசமாக, விவசாயிகளின் கவனத்தை தன் கருத்துக்களின்பால் ஈர்க்கக்கூடிய வழியொன்று அவரிடமிருந்தது. நல்லதொரு தூதுவராக 'காயம்' இருந்தது.

நன்கு பயிற்றப்பட்ட 'காயத்'தினை தன்னுடன் சேர்த்துக்கொண்டு அவர் விவசாயப் பண்ணைகளைச் சுற்றி வந்தார். ஆரம்பத்தில் இப்பணி சிரமமாகத்தானிருந்தது என்று ஒப்புக்கொள்ளும் மாக்கர் "சிறுத்தைகள் பற்றி விவசாயிகள் மென்மேலும் அறியவந்ததும் அவர்கள் நான் கூறியவற்றை மேலும் மேலும் செவிமடுக்கத் தொடங்கினர்" எனவும் தெரிவித்தார்.

அப்பகுதியில் பாலூட்டி விலங்குகளை விவசாயிகள் விட்டு வைப்பார்களாயின், சிறுத்தைகள் பண்ணை விலங்குகளை விரும்பி வேட்டையாடப் போவதில்லை என்று அவர் அவர்களுக்கு தெளிவுபடுத்தினார். சிறுத்தைகளை விரட்டிவிடும் பணியில் ஈடுபடுத்துவதற்கென அவர் காவல் நாய்களையும் விவசாயிகளுக்கு அன்பளிப்புச் செய்தார்.

## ஊக்குவிப்பு

விவசாயிகள் அவரது ஆலோசனைகளை கேட்டு நடக்கச் செய்வதற்கு அவர் முன்வைத்த ஊக்குவிப்பு என்னவாகவிருந்தது? ஞாபகச் சின்னங்களுக்காக சிறுத்தைகளை வேட்டையாடுபவர்கள் அவற்றைப் பெறுமதி வாய்ந்தவைகளாக கருதுவதே சிறுத்தைகளுக்கு போதிய பாதுகாப்பானதாக இருந்தது. சிறுத்தைகளை அவர்கள் தொடர்ந்து அழித்துக்கொண்டே போவதானால் தமக்கு பெரும் பயனேதும் கிடையாது என்பதனையும், தமது பண்ணையின் பகுதியொன்றில் எப்போதாவது ஓரிரு தடவைகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக சில சிறுத்தைகளை மட்டும் வேட்டையாடுவதற்கு அனுமதிப்பதால் பணவருவாய் நன்றாக இருக்கும் என்பதனையும் விவசாயிகள் உணர்ந்துகொண்டனர்.

1986ல் காயம் இறந்துவிட அதனிடத்தில் புதிய சிறுத்தையொன்று பயிற்றப்பட்டிருந்தது. சிறு குட்டியிலேயே அநாதையாக்கப்பட்டும், பண்ணையிலேயே வளர்க்கப்பட்டும் வந்ததால் அந்தப்புதிய சிறுத்தைக்கு "சௌபாக்கா" எனப் பெயரிடப்பட்டது. குறிப்பாக, கனல்கக்கும் ஸ்ரார் வார்ஸ் (**Star Wars**) பாத்திரத்தினையும் நினைவூட்டுவதாக இப்பெயர் இருந்தது.

# பெண்

## ஹலோ டாக்டர்



### ஜாக்கிரதை

◆ சில பெண் குழந்தைகள் எட்டு அல்லது ஒன்பது வயதில் பூப்பெய்தி விடுகிறார்கள். அவர்களுக்குச் சில வருடங்கள் கழித்தே மாதவிடாய் ஏற்படுகிறது.

◆ யோனி மடல் வழியாக இரத்தம் வெளியாகியதும் அக்குழந்தை பூப்பெய்தி விடடாள் என பலர் நினைக்கின்றார்கள். இது ஒரு தவறான அபிப்பிராயம். ஓமோன்களில் ஏற்படும் சில மாற்றங்கள் காரணமாக இவ்வாறு இரத்தம் வெளியேறலாம். இவ்வாறு நடந்தவுடன் பெற்றோர் மிகக் கவனமாக இருக்க வேண்டும். யோனிமடல் வழியாக இரத்தம் வெளியேறுவது சில நோய்களுக்கு அறிகுறியாக அமையும். எனவே வைத்தியர் ஒருவரை நாடி குழந்தை பூப்பெய்தி விட்டாளா என ஓமோன் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தவும்.

◆ உங்கள் அடுக்குப் பற்கள் பற்றி நண்பர் கடைசியா அடித்த காமெண்ட ஞாபகம் இருக்கிறதா? அடுக்குப் பற்களை கழற்றும் எண்ணம் இருந்தால் முதலில் ஒ ரு நல்ல பற் சிகிச்சை நிபுணரைச் சந்தித்து ஆலோசனை பெறுங்கள். பக்க விளைவுகள் ஏற்படுவதை இதன் மூலம் தடுத்துக் கொள்ளலாம். (படித்து அறிந்தது)

## அணிந்து பார்ப்போம்

"ஆள்பாதி ஆடைபாதி" என்பது பழமொழி. ஒருவர் அணியும் ஆடையை வைத்துக் கொண்டே அவர் எப்படியானவர் என்று எடைபோட்டு விடலாம். மானத்தைக் காப்பதற்காக உடை அணிந்தால்ப் போதும் என்ற எண்ணம் எம் மத்தியில் பலருக்குண்டு. அதனால் எல்லோரும் எப்படியோ ஆடைகளை அணிகிறார்கள். எல்லா வகையான ஆடைகளும் எல்லோரிற்கும் பொருந்துவது இல்லை. நமது நிறத்திற்கும், உயரத்திற்கும் பருமனிற்கும் ஏற்ற உடைகளைத் தெரிந்து கொள்வது சிறந்தது. நாம் போகும் இடங்களிற்குப் பொருத்தமான ஆடைகளைத் தெரிவு செய்வது மிகவும் அவசியம்.


வெளியில் போகும் போதுதான் அழகாக உடுத்திச் செல்ல வேண்டும், வீட்டில் எப்படியாவது இருக்கலாம் எனப் பலர் எண்ணுவதுண்டு. ஆனால் வீட்டிலும் நாம் எளிமையாகவும் பளிச்சென்றும் இருப்பது அவசியம். நீங்கள் வீட்டில் சேலை அணிபவராக இருந்தால் பருத்திச் சேலைகளை அணிவது சிறந்தது. காஸ் அடுப்பிலோ, விறகடுப்பிலோ சமைப்பவராக இருப்பீர்கள். அந்த வேளையில் ஏனைய சேலைகளை அணிந்தால் அது தீப்பற்றி விடும். எனவே எளிதில் தீப்பற்றாத பருத்திச் சேலைகளை அணிவது சிறந்தது. சேலை ஜாக்கட்டுக்களை இறுக்கமாக அணியாமல் கொஞ்சம் தளதளவென்று அணிந்தால் வேலை செய்வதற்கு இலகுவாக இருப்பதோடு காற்றோட்டமாகவும் இருக்கும்.



நீங்கள் வீட்டில் சட்டை அல்லது சல்வார் அணிபவராக இருந்தால் அவற்றையும் பருத்தியாலானதாக அணிவது பொருத்தமானதாகும். அத்துடன் நீண்ட கையுள்ள, காலருள்ள சட்டைகளையும் சல்வார்களையும் தவிர்த்து விடுங்கள். ஏனெனில் அவை உங்கள் உடலிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். வீட்டிற்கு அணியும் ஆடைகளை தெரிவு செய்யும் போது மெல்லிய நிறங்களைத் தெரிவு செய்யாமல், அழுக்குகளை அதிகம் வெளிக்காட்டாத நிறங்களைத் தெரிவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

இப்படி நீங்கள் எளிமையாக உடை அணிந்து இருந்தால் உங்களால் சந்தோஷமாக, சௌகரியமாக, வேலைகளைத் திறம்படச் செய்து முடிப்பதோடு பார்ப்பதற்கு வசீகரமாக இருப்பீர்கள்.

## அவளும் அடுப்படியும்



### தேங்காய்ச் சட்னி

தேவையான பொருட்கள்.

தேங்காய் - 2

பச்சைமிளகாய் - 50g

பொட்டுக்கடலை - 50 g

இஞ்சி - 2 துண்டுகள்

உப்பு - தேவையான அளவு

கடுகு - 20g

கறிவேப்பிலை - சிறிதளவு

எண்ணெய் - 1 கரண்டி

*செய்முறை*

தேங்காயைச் சிறிய துருவல்களாகத் துருவி வைத்துக்கொள்ளவும். பச்சைமிளகாய், இஞ்சி என்பவற்றைக் கழுவி வைத்துக் கொள்ளவும்.


தாச்சியை அடுப்பில் வைத்து எண்ணெயை ஊற்றவும். எண்ணெய் காய்ந்தவுடன் அதில் கருவேப்பிலைகளையும், கடுகினையும் போட்டு தாழித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், பொட்டுக்கடலை, இஞ்சி, உப்பு என்பவற்றை மிக்ஸியில் அல்லது அரவைக்கல்லில் அரைத்துக் கொள்ளவும் (மிக்ஸியில் என்றால் 3 நிமிடம் அரைத்தல் போதுமானது. அரவைக்கல்லில் என்றால் 15 நிமிடம்) அரைத்த சட்னியில் தாழித்த கடுகினைத் தூவிக் கலக்கவும்.

இதனை தோசை, இட்லி, அரிசிச்சாதம் வடை ஆகியவற்றுடன் சேர்த்துப் பரிமாறலாம்.

**உதவி: "மதுராவுட்லண்ட்ஸ்" கிருஸ்ணகோபால் திலகநாதன்**

## லவ் பண்ணணும்



நெஞ்சார நேர்மையாகக் காதலியுங்கள்.

**பணம், புகழ், செல்வாக்கு, அழகு எனும் நிலையற்ற விஷயங்களுக்கு அடிமைப்பட வேண்டாம்.**

கண்டதும் காதல் கொண்டாலும் உடனே வெளிக்காட்டக் கூடாது.

**காதலிப்பவர் பற்றி ஆராய்ந்து பாருங்கள்.**

கண்மூடித்தனமான நம்பிக்கை அபாயகரமானது

**எதிர்காலத்தை நினைத்து, இலக்கொன்றுடன் காதலியுங்கள்.**

உணர்வுகளை மதியுங்கள். ஆனால் அறிவுக்கு இடம் கொடுங்கள்.

**சுயகௌரவத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.**

காதல் எனும் இனிய கீதத்தைச் சுருதி தவறாமல் இசையுங்கள், வாழ்வு இனிக்கும்.

மண்ணில் பிறந்த பெண்களைத் தெய்வமாக மதிப்பது எமது கலாசாரம். வீட்டிலிருந்து நாடுவரை அனைத்துத்துறைகளிலும் அவள் தலைமை தாங்கி நிர்வகிக்கின்றாள். ஆனால் பெண் என்ற ஒரேகாரணத்தால் எத்தனையோ இன்னல்களை எதிர்நோக்குகின்றாள்.

பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதற்குப் பொறுப்பானவர்கள் யார்? என்ற வினாவை எழுப்பினால், பல விடைகள் கிடைக்கும். தொகுத்துப் பார்த்தால் சமுதாயம் என ஒரே வார்த்தையில் கூறலாம். இவ் வன்முறைகளை நிறுத்தவும் பொறுப்பானவர்களைத் தண்டிக்கவும் பல சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. பெண்ணியல்வாத இயக்கங்கள் செயற்படுகின்றன. இவற்றின் வெற்றி எவ்வளவு தூரம் சென்றுள்ளது என்பது இன்னும் கேள்விக்குறியே.



சட்டங்கள் மூலம் விமோசனம் பெறுவது இலகுவான காரியம் அல்ல. பல தடைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். முதலில் பொலிஸில் முறைப்பாடு செய்யும் போது எத்தனையோ கேள்விகள் பின்பு வழக்கு நீதி மன்றத்திற்கு வந்தவுடன் விசாரணைகள், குறுக்கு விசாரணைகள் எனப் பல மனத்தாக்கங்கள். நடந்த சம்பவத்தை ஒவ்வொரு நிகழ்வாக விவரிக்க வேண்டும். இவை அனைத்தும் முடிய அப்பெண் இன்னொருமுறை வன்முறைக்கு உட்படுத்தப்படுவது போன்ற உணர்வு ஏற்படும்.

சட்டத்தின் முன் குற்றவாளி தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு விட்டார். என வைத்துக்கொள்வோம். இந்த சமுதாயம் அப்பெண்ணைத் தலைநிமிர்ந்து வாழ விடுமா? அவளின் நடத்தை பற்றி பட்டிமன்றம் நடாத்தி விடும். இதற்குப் பெரும்பாலும் பெண்களே முன் நிற்பார்கள். பலாத்காரத்தால் குழந்தை பிறந்தால் அக்குழந்தைக்கு அங்கீகாரம் கொடுக்க எத்தனை பேருக்கு பெருந்தன்மை வரும்?

இந்நிலை மாற்றமடைய வேண்டும். ஆனால் அதை எவ்வாறு செய்வது? எந்த ஒரு பிரச்சினைக்கும் இரண்டு தீர்வுகள் உள்ளன. ஒன்று தற்காலிகமானது. மற்றது நீடித்து நிலைத்திருக்க கூடியது. கூட்டங்கள் கூட்டுவது பட்டிமன்றம் நடாத்துவது, இவ்வாறான கட்டுரைகளை எழுதுவது எல்லாம் தற்காலிக தீர்வையே தரும். ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தால் மாற வேண்டும். பரந்த மனப்பான்மை உடையவர்களாக, குறுகிய எண்ணங்களிலிருந்து விலகியவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் மட்டுமே பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழியும். காலங்கள் மாறி மக்களின் எண்ணங்கள் மாறுமா?

இங்கு பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் ஒன்று மட்டுமே காட்டப்பட்டுள்ளது. நீங்கள் பெண் என்ற ஒரே காரணத்தினால் எதிர் நோக்கிய சம்பவங்கள் இருந்தால் அவற்றை எமக்கு எழுதி அனுப்புங்கள்

*முகவரி*
பெண்
சுடர் ஒளி
36/2, பிரட்ரிகா வீதி, கொழும்பு - 06.

## படித்ததில் பிடித்தது

✱ உடல் நிலை சரியில்லாத வயோதிப உறவினர்களைப் பார்க்கச் செல்லும் போது உங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். சிறிய வயதிலிருந்தே வயோதிபர்களை பராமரிப்பது பற்றிய உணர்வு அவர்கள் மனதில் வளரட்டும். ஒரு நாள் அவர்கள் உங்களை அன்பாகப் பார்த்துக் கொள்வார்கள்.

✱ ஸ்டிக்கர் பொட்டுகளை ஒட்டி வைக்கும் இடங்களில் கம் தேங்கி நின்று, அவ்விடத்தில் அழுக்கு சேர்ந்து விடும். அந்த இடங்களை மண்ணெண்ணெய் தொட்ட துணியால் துடைத்து விடுங்கள். கறை அகன்றுவிடும்.

## பியூட்டி பார்லர் போவோமா?

கண்களைச் சுற்றிக் கருவளையம் உள்ளதா? அது உங்கள் முக வசீகரத்தைப் பாதிக்கின்றதே என்று கவலை கொள்கிறீர்களா? இன்றிலிருந்து உங்கள் கவலையை விட்டொழியுங்கள். கருவளையத்தைப் போக்கிக் கொள்ள இதோ ஒரு எளிய வழி.

நாம் சாதாரணமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பழம் தோடம்பழம். இதன் சக்கையை கண்களின் மீது வைத்து அரை மணி நேரம் உங்கள் கண்களிற்கு ஓய்வு கொடுங்கள். பின் குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுங்கள். இந்த முறையைத் தினமும் பின்பற்றுங்கள். பத்தே நாளில் நீங்கள் ஆச்சரியப்படக்கூடிய மாற்றம் ஏற்படும்.

அதிகம் கண்களிற்கு வேலை கொடுப்பவர்கள் வேலைகளிற்கு இடையே குறைந்தது 5 நிமிட நேரமாவது கண்களை மூடி ஓய்வு எடுங்கள். தூங்கும் போது நன்றாக ஆழ்ந்து தூங்குங்கள். இவற்றையும் நீங்கள் கடைப்பிடித்து வந்தால் உங்கள் கண்களைச் சுற்றியுள்ள கருவளையம் காணாமல் போய்விடும்.

இன்று டீன் ஏஜ் பெண்களை அதிகமாகத் தாக்கும் பெரிய பிரச்சினை பருத்தொல்லை. அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து பருக்களை மாற்றிவிடலாம். அதனால் முகத்தில் ஏற்பட்டுள்ள வடுக்கள் அவர்களிற்கு பெரும் பிரச்சினையாகி விடுகின்றது. இப் பிரச்சினையிலிருந்து விடுபட இதோ ஓர் ஆலோசனை, செய்து பாருங்கள்.

தேங்காய் எண்ணெய், சந்தனம் ஆகிய இரண்டையும் எலுமிச்சம் பழச்சாற்றுடன் சேர்த்து கலந்து வடுக்கள் மீது பூசி வந்தால் நாளடைவில் பலன் கிடைக்கும்.



# தங்கப் பாவாடை

—ஜெயநரசிம்மன்



*ஒம் பேரு என்ன?*
*செலுவி*
*செலுவியா?*
*ஓ... செல்வியா?*
*ஆமாம். செலுவி.*
*செலுவி இல்லம்மா*
*செல்வி.*
*செலுவி.*
*அப்படி இல்லம்மா.*
*செ...ல்...வி...செல்வி.*
*செலுவித்தான்.*
*போச்சுடா... 'செ'*
*சொல்லு*
*'செ' செல்வி.*
*முடியாது. செலுவி தான்.*
*செல்வின்னு சொல்லு.*
*காசு தர்றேன்.*
*நிஜம்மா...?*
*நிஜம்மா.*
*'செலுவி.' செலுவித்தான்*
*வருது.*
*சரி ... காசு கொடு.*
*செல்வி சொல்லு தர்றேன்.*
*வர மாட்டேங்குதே.*
*சொல்லிப் பாரு. வரும்.*
*சரி... காசு கொடு.*

முரளி அவள் கையில் காசு தருவதற்கு முன்பும் கடைசியாக ஒரு முறை கேட்டுப் பார்த்தான்.

அப்போதும் செலுவி என்றே சொன்னாள்.

முரளி அந்த ஊருக்கு மாற்றலாகி இரண்டு மாதம் ஆகிறது. தனியார் நிறுவனக் கிளையில் அசிஸ்டண்ட் கிளார்க். எந்த ஊராக இருந்தாலும் எளிதில் ஒட்டிக் கொண்டு விடும் சுபாவம் உடையவன். வீட்டு ஞாபக நோய் கிடையாது. ஆளை விட்டால் போதும் என்று ஓடி வந்த ஆள் மாதிரி இருப்பான்.

கல்யாணம் ஆகாததால், மனைவி, வீட்டு சாமான்கள் தூக்குவது போன்ற சிரமம் இல்லை. இரண்டு பெட்டிகளை மட்டும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டான்.



அந்த ஊர் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. நகரத்திலும் சேராமல், கிராமத்திலும் சேராமல் தனிப்பட்டிருந்தது. ஒரு சின்ன லைப்ரரி. குளிப்பதற்கு தோதாய் குளம். பஸ்டாண்டில் மட்டும் கொஞ்சம் கூட்டம். காலாற நடந்து போனால் எல்லா தெருக்களையும் சுற்றிவந்து விடலாம். அந்த ஊரின் செம்மண் புழுதி மட்டும் அவனுக்கு அலர்ஜியாக இருந்தது.

சின்னச் சின்ன கோயில்கள் தவிர, முக்கிய திருக்கோவில் நான்கும் அங்கு இருந்தன.

"போரெல்லாம் அடிக்காது. கவலைப்படாம போ. ஊர் முழுக்க கோயில்தான். தினமும் தரிசனம் பண்ணு. புண்ணியம் கிடைச்ச மாதிரியும் இருக்கும். சைட் அடிச்ச மாதிரியும் இருக்கும்." கோயில்களைப் பார்க்கும் போதெல்லாம் ஹெட்கிளார்க் அனந்து நக்கலாய் சொல்லி அனுப்பியது ஞாபகம் வந்தது.

இவன் தங்கியிருக்கும் வீட்டின் மொட்டை மாடியில் இருந்து பார்த்தால் அம்மன் கோவில் கோபுரம் நன்றாகத் தெரியும். அந்தக் கோயிலின் பிரமாண்டமும், வசீகரமும் பிடித்திருந்தது. வேலையில் சேர்ந்த முதல் நாள் சாயந்திரம் போரடிப்பது போல் இருந்தது. புதிய ஊர். புதிய முகங்கள். பழகுவதற்கு தோதான ஆள் இல்லை. எத்தனை நேரம்தான் நடை பழக முடியும்? வேறு வழியின்றி கோவிலுக்குப் போனான். வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் கோவிலுக்குப் போனால் விசேஷம் என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

கோவில் பிரகாரத்தைச் சுற்றி வந்து நிமிர்ந்து பார்த்தான். படுத்துக் கொண்டு பார்த்தால் நன்றாக இருக்கும் என தோன்றியது. ஆனால் தோதான இடம் இல்லை. அங்கிருந்த ஒற்றைத் தூணில் சாய்ந்து கொண்டு ஆகாயம் பார்த்தான்.

அர்ச்சனை மந்திரங்களும், வெளவால்களின் சத்தமும் அவனுக்கு இதுவரை இல்லாத புது அனுபவமாக இருந்தது.

குளக்கரையில் சிறிது நேரம் உட்கார்ந்தான். மீன்கள் துள்ளிக் குதிப்பது தெளிவாய்த் தெரிந்தது. காலை நீரில் வைக்கப் போனபோது அங்கிருந்த முதியவர் 'கடித்துவிடும்' என்று சொல்லவே எடுத்துக் கொண்டான். பொரித்தட்டு வாங்கித் தூவினான். நிமிடத்தில் பொரி காலியானது.

தரிசனம் முடிந்து வெளியே வந்து கடிகாரம் பார்த்தான். 'ரூமி'ற்குப் போக நேரம் இருந்தது. வேறு எங்கு போவது என்றும் தெரியவில்லை. யோசித்துக் கொண்டே நடந்தவனின் வலது கை நுனியை, 'அண்ணா அண்ணா' என்ற குரலோடு மெல்லிய கை ஒன்று தொட்டது. திரும்பிப் பார்த்தான். அரைப் பாவாடை கட்டிய பெண் காசு கேட்டு கை நீட்டினாள். பாவாடைக்கு மேல் வயிற்றைக் காட்டிக் கொண்டு மேல் சட்டை தூக்கிக் கொண்டு இருந்தது. ஒரு கை ஏற்றமும், இன்னொரு கை இறக்கமுமாய் தையல் பிரிந்து தரித்திரம் தெரிந்தது. பாவாடை, அங்கங்கே கிழிசல் தெரிந்தபடி, துவைத்து நாட்கணக்கில் ஆனது போல் மக்கிப் போயிருந்தது.

முரளிக்கு அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஒரு முழு ரூபாய் நாணயத்தை கொடுத்தான். சந்தோஷமாய் வாங்கிக் கொண்டவளிடம் பேர் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அதன் பிறகு கோவிலுக்கு வரும் போதெல்லாம் செல்வியைப் பார்க்காமல், 'ரூம்' திரும்ப மாட்டான்.

கோவில் முன் வாசலில், இரண்டு பக்கமும் பிச்சைக்காரர்கள் வரிசையாக உட்கார்ந்திருப்பார்கள். நெரிசலினால் பிச்சைக்காரர்கள் தவிர, காவிவேட்டி, ருத்திராட்சம் சகிதமாகவும் சிலர் கை ஏந்துவார்கள். ஆனால் அவர்களுக்கு எல்லாம் முரளி காசு போட மாட்டான்.

அங்கங்கே நின்று கொண்டு பிச்சை எடுப்பவர்களும் இருந்தார்கள். செல்வியைப் போன்ற சிறுமிகளும், நடுவயதுப் பெண்களில் சிலரும் இங்குமாங்கும் நடமாடிய படியே பிச்சை எடுத்தார்கள்.

பிச்சைக்காரர்களுக்கு காசு போடும் பழக்கம் அவனுக்கு கிடையாது. பிச்சை போடுவது அகங்கார எண்ணத்தை உண்டாக்கும் என்று மனோரீதியாக காரணம் சொல்லிக் கொண்டான்.

ஆனால் செல்வி விஷயத்தில் பிச்சை போடுவதாக நினைக்கவில்லை. மீன்களுக்கு பொரி போடுவது போன்ற குதூகலம் கிடைப்பதாக உணர்ந்தான்.

அதுவும் செல்வி சின்னப் பெண்ணாக இருந்ததால், அவளை பிச்சைக்காரியாக அவனால் நினைக்க முடியவில்லை.

செல்வியை சில நாட்கள் பிரகாரத்திலேயோ, கோவிலுக்குள்ளேயோ பார்க்க முடியாமல் போவதுண்டு. நோட்டம் பார்த்தபடி வாசலுக்கு வந்தால் பிச்சைக்காரர்கள் வரிசையில் கடைசியாக நின்று கொண்டிருப்பாள்.

முரளிக்கு தனியாக இருக்கும

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)



# கலையமுதம்



— கே. விஜயன்

## வேட்கை வெளியீட்டில் ஒரு புதுமை

'வேட்கை' சிறுகதை நூலின் வெளியீடும், ஆய்வரங்கும் வெள்ளவத்தையிலுள்ள பெண்களுக்கான கல்வி நிறுவன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

நூலாசிரியர் நீர்வை பொன்னையன் ஒரு மாக்ஸியச் சிந்தனையாளர். பலரைப்போல அப்படி இப்படி என்ற மழுப்பல் சமாச்சாரம் அவரிடம் கிடையாது.

'நானொரு மாக்ஸியச் சிந்தனையாளன். எனது கதைகள் அனைத்தும் தொழிலாளர் விவசாய மக்களின் கதைகள், அவர்களின் அன்றாடப் பிரச்சினைகள், போராட்டங்கள் என்பனவற்றை சித்திரிப்பவை' என வெளிப்படையாகக் கூறுகின்ற ஓர் அலாதியான எழுத்தாளர் அவர். இந்தியாவின் கல்கத்தா நகரின் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி பட்டத்தைப் பெற்றவர், வீரமிகு வங்க மக்களின் தொழிற்சங்கப் போராட்டங்களில் கலந்து நேரடியாகப் பல அனுபவங்களை நெஞ்சில் பதித்துக் கொண்டவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்ட காலம் பணியாற்றி இலங்கையிலும் தொழிற்சங்கப் போராட்டங்களின் அனுபவங்களைக் கிரகித்துக் கொண்டவர். அத்தகையதொரு படைப்பாளியின் கதைகள் வர்க்கப் போராட்டக் கதைகளாக இல்லாமல் வேறு எப்படித்தான் இருக்கும்?

பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதர் சிங் இந்நூலை வெளியிட்டுள்ளார்.

நூல் வெளியீட்டு விழாக்களில் மாமூலாக இடம்பெறும் முதற்பிரதி வாங்குபவர்களின் ஊர்வலம் இங்கு இடம் பெறவில்லை. 'விருப்பமானவர்கள் வாங்கிக் கொள்ளுங்கள்' என்பது போல் நூல்கள் மேசையில் வைக்கப்பட்டிருந்தன. பாக்கெட்டில் பணமிருந்தவர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் தலைமையில் ஆய்வரங்கம் நடைபெற்றது. அட, கொஞ்சம் வித்தியாசமானது என 'ச்சா' கொட்டாவிட்டால் கண்ணோட்டம் முழுமையடையாது. அப்படி என்ன வித்தியாசம் என சூள் கொட்டுகிறீர்களா?

நூல் வெளியீட்டு விழாக்கள் பலவற்றில் கலந்துகொண்டு அடக்கடவுளே! என தலைக்கேசத்தை பிய்த்துக் கொண்டிருக்கிறேன்.

நூல் விமர்சனம் என்ற பெயரில் கலாநிதி யாராவது மேடையேறுவார்கள். நூலை வாசிக்க கால அவகாசம் கிடைக்கவில்லை என கொஞ்சம் பெருந்தன்மையோடு கூறிவிட்டு பின்னர் சுயபுராணம் எனும் குதிரையின் கடிவாளத்தை இழுத்துவிட்டு 'அறு அறு' வென அறுக்கத் தொடங்கிவிடுவார்கள்.

வேட்கை ஆய்வரங்கம் வித்தியாசமானது. எழுத்தாளர்களான டாக்டர் முருகானந்தம், திக்வலை கமால், வ.இராசையா, துறைமுக மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஜெய்ரட்ணம் ஆகியோர் கதைகளின் உருவம், உள்ளடக்கம், பாத்திர வார்ப்பு ஆகிய சகல அம்சங்கள் குறித்தும் ஒவ்வொருவரும் தனித்தனியாக நயம் கண்டு சுவை மொழிந்தார்கள்.

விமர்சித்தவர்கள் அனைவருமே நீர்வையின் தீர்க்கமான சிந்தனைகள் குறித்து புகழ்ந்தார்கள், கருக்களும், உருக்களும் யதார்த்தமானவை என்பது அனைவரினதும் ஒட்டு மொத்தமான கருத்தாகும். மேலதிகச் செயலாளர் மட்டும் கொஞ்சம் மேலே தாவி, சில கதைகளின் கருக்கல் நீர்வையின் சிந்தனைகள் குறித்து சந்தேகங்களை ஏற்படுத்துவதாகச் சொன்னார். கதைகளின் முடிவுகள் சமூக நியதிகளின் வெளிப்பாடுகளாகவிருக்க வேண்டுமேயல்லாமல் தற்செயலான விபத்துகளாக இருக்கக் கூடாது என்பது மேலதிகச் செயலாளரின் ஆணித்தரமான வாதமாகவிருந்தது. ஒரு வக்கீலைப் போல அவர் அடித்து வாதாடினார்.

சபையினராலும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

'தேசிய இனப்பிரச்சினையில் இடதுசாரிகள் எப்பொழுதும் நழுவிச் சென்றுள்ளார்கள், நீர்வையின் கதைகளிலும் நழுவல் தன்மை தெளிவாகத் தெரிகின்றது' என இலக்கிய ஆய்வாளர் சோதிவேல் குறிப்பிட்டார்.

அழியாச் சுடர் எனும் கதையில் வருகின்ற ஆச்சி, பேரனின் கல்வியில் ஆர்வம் மிக்கவர். அதனைத் தவிர வேறு எதனையும் அவர் சிந்தித்ததில்லை. எனினும், மேதினத்தின் மகிமையை புரிந்து கொண்டவர் போல் அதில் போய் கலந்து கொள்வதற்கு பேரனுக்கு மகிழ்ச்சியுடன் விடையளிக்கின்றார்.

இது எப்படி என்ற கேள்வியை எழுப்பிய கட்டுரையாளர் ஆச்சியின் சிந்தனா பூர்வமான அந்தப் பரிணாமம் எப்படி ஏற்பட்டது என்பது விவரிக்கப்படாதது போல சகல கதைகளிலுமுள்ள பாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளன. அந்தப் பரிணாம மாற்றமே கதைகளின் பிரதான அம்சமாகும். பாத்திரங்களின் முழுத்தன்மை அவ்வாறே வார்த்தெடுக்கப்படவேண்டும் எனக் கருத்துகளை முன்வைத்தார்.

'தனது அனுபவங்களே கதைகளாகியுள்ளன என விபரித்த நீர்வை குறை, நிறை அவரவர் கண்ணோட்டத்தில் எழுவது. அதனை எதிர்த்து நான் வாதிடவில்லை. எனினும் அனைத்தையும் கிரகித்து தெளிவை ஏற்படுத்திக் கொள்வேன்' என அவை அடக்கத்துடன் விடையளித்தார்.

# ஆண்களுக்கு பெண்ணின் அதிரடி!

**உ**லக மகளிர் தினம் - இலங்கையிலும் பல இடங்களில் கருத்தரங்கு பொதுக்கூட்டம் அது இதுவென படு அமர்க்களம். கட்டுரை வாசிப்பு, கவிதை முழக்கம், உரிமை, கோஷம் என்று தூள் பறந்தது. அடேயங்கப்பா ஆண்வர்க்கத்திற்கு செமத்தியான அடி!



ஸ்ரீமான் சஞ்சரி

அரச மண்டபமொன்றில் பெண்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. வயதான அம்மாமார் சில குமர்ப்பிள்ளைகளின் கருங்கூந்தலோடு (டையாரின் அருட் கடாட்சத்தில் பெற்ற வரப்பிரசாதம்) மேடையை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீமான் சஞ்சாரியும் பூனை போல் மெல்லப் போய் அமர்ந்தார்.

ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையில் பணிபுரிந்து வருபவரும் சிங்கள டெலி டிராமா தயாரிப்பாளருமான பெண்மணியொருவர் மிகவும் ஆவேசத்துடன் ஆண்வர்க்கத்தை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தார்.

காப்புறுதி சம்பந்தமான விளம்பரம் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வருகின்றனர். மூன்று ஆண்கள், ஒரு பெண். ஆண்கள் அனைவரையும் உயர் கல்வி பெறுபவர்களாகவும், பெண்ணை மட்டும் மணமகளாக மாறுபவளாகவும் விளம்பரம் சித்திரிக்கிறது. அம்மணிக்கு இது ஆத்திர நெருப்பை விசிறிவிட்டது. எதிர்த்து போர்க் குரல் எழுப்பினார். வெற்றி பெற்றார். விளம்பரம் வாபஸ் பெறப்பட்டது.

இந்தக் கதையை பெண்களின் பலத்த கைத்தட்டல்களுக்கு மத்தியில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க அந்தப் பெண்மணி சொல்லி முடித்தார்.

ஸ்ரீமான் இலக்கிய சஞ்சாரியின் பக்கத்தில் பரமஹம்ஸரைப் போல ஒரு ஞானப்பழம் அமர்ந்திருந்தது. மனுஷன் பெண்களைத் தெய்வமென மதிக்கும் சிவாச்சாரியார் போன்றவர்.

அடடா நல்ல விஷயம்தானே பெண்ணுக்கு தாய்மை அந்தஸ்த்தை அல்லவா விளம்பரக்காரர் கொடுத்திருக்கிறார் என சஞ்சாரியிடம் முணு முணுத்து விட்டு, பின்னே இதுக்குப் போய் போராட்டம் 'மொனவாட்டத' எனப் பிரமிப்புடன் தனது சிங்களப் புலமையை வெளிப்படுத்தினார்.

அடேயங்கப்பா! வந்ததே ஆபத்து. துண்டைக்காணோம் துணியைக்காணோம் என பாய்ந்தோடும் அளவுக்குப் பெண்கள் மத்தியில் பெரும் கலாட்டா ஆரம்பமானது.

'பெண்கள் என்றால் என்ன கிள்ளுக் கீரை என்ற நினைப்போ, விளம்பரத்தில் கூட அவளைக் குழந்தை பெறுபவளாகவும், ஆண்களின் இச்சைப் பொருளாகவுமா சித்திரிக்கவேண்டும்? இது ஆணாதிக்கத்தின் கொடூரமாகும்' என அனைவரும் ஒரே தொனியில் மிதிபட்ட நாகங்களெனப் படமெடுத்துச் சீறினார்கள்.

நமது பரமஹம்சருக்கு காது கொஞ்சம் மந்தமோ தெரியவில்லை. மனுஷன் பெண் பாம்புக்களின் படமெடுப்பிற்கும், சீற்றத்திற்கும் அஞ்சியவராகத் தெரியவில்லை.

'பின்னே! கடவுளுக்கு எல்லா வீடுகளுக்கும் போய் சீவிக்க ஏலாது. அதாலதான் ஒவ்வொரு வீட்டிற்குள்ளேயும் ஒரு தாயை வைச்சிருக்கிறார்' என அவர் வேதாந்தம் ஆரம்பிக்க கடல் கொந்தளிக்குமாப் போல் மறுபடியும் ஹோவென ஒரே கூச்சல். பெண்கள் அவரைக் கால்வேறு கைவேறாகப் பிடுங்கி யெடுக்காமல் விட்டது பெரிய அதிசயம் தான்.

இதென்னடா சங்கடம் எனச் சஞ்சாரி நைசாக நழுவத்தொடங்கிய வேளையில், 'சரி சும்மா ஆம்பிளையாள்களுடைய எல்லா உரிமைகளையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கம்மா. தாயாகும் உரிமையை மட்டும் எங்களுக்குத் தாருங்கோ என பரமஹம்ஸர்' போட்டாரே ஒரு போடு படமெடுத்த பாம்புகளெல்லாம் கப்சிப்பென அடங்கிப் போய்விட்டன.

**ஜனனம் உயிருக்கு தந்தவள் தாயல்லவா.**

(முன்பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பங்களில் அவளைப் பற்றிய நினைப்பு உறுத்த ஆரம்பித்தது. இந்த வயதில் இவளுக்கு ஏன் இந்தச் சாபம்? வருத்தப்பட்டான். அவளுக்கு அப்பா, அம்மா யார்? எங்கேயிருப்பார்கள்? விட்டு விட்டுப்போய் விட்டார்களா? இல்லை... செத்துப் போயிருப்பார்களா? அவளுக்கு என்று உறவு யார்? எங்கேயிருப்பார்கள்? எப்படி சாப்பிடுகிறாள்? தலைவலி, ஜுரம் வந்தால் என்ன செய்வாள்? எத்தனை வயது முதல் இப்படி இருக்கிறாள்? இனி வயதானால் அவள் நிலை என்ன? என்றெல்லாம் தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தான்.

தான் தினமும் கொடுக்கும் இருபத்தி ஐந்து காசு அவளுக்கு எவ்விதத்தில் உதவியாக இருக்கும் என்றும் கணக்குப் போட்டுப் பார்த்தான்.

ஆண்டவன் மனிதர்களை எப்படி வேண்டுமானாலும் படைத்துவிட்டுப் போகட்டும்.

சின்னஞ்சிறு பிஞ்சுகளை விட்டு விடக்கூடாதா? அவர்களுக்கு ஏன் இந்த அவஸ்தை? பிச்சை எடுக்கும் அளவுக்கு செல்வி என்ன தப்பு செய்தாள்?

எப்படி எப்படியோ யோசித்தும் முரளிக்கு எதுவும் புரியவில்லை.

ஆபிஸ் விட்டு வரும்போது செல்விக்கு காசு கொடுத்துவிட்டு வருவதை மட்டும் தினப்படி வாடிக்கையாக கொண்டிருந்தான். அவளுக்கும் இவனைப் பார்த்தால் ஏகக் குஷி.

காசு வாங்கிக் கொண்டு மறுநிமிடமே காணாமல் போய்விடுவாள்.

செல்வி ஏதோ பூடகமான பெண்ணாகத் தெரிந்தாள். ஒருநாள் கனவில் செல்வி வந்தாள். அப்போதும் காசு கொடு என்றாள். காசைப் போடப் போனபோது கனவு கலைந்தது.

கண்களை கசக்கியபடி எழுந்து உட்கார்ந்தவனுக்கு பிரமிப்பாக இருந்தது. அந்த அர்த்த ராத்திரியிலும் கோவில் கோபுர கலசம் பளிச்செனத் தெரிந்தது. அடுத்த வினாடியே அம்மன் முகம் நிழலாடியது. பிரமையா, கனவோ என்று புரியவில்லை. நிஜம் போன்ற கனவு. நேரில் நடப்பது போல் இருந்தது. செல்விக்கும் அம்மனுக்கும் என்ன சம்பந்தம்? ஒருவேளை, சினிமாவில் வருவது போல, அம்மன் தான் செல்வியாக கிழிந்த பாவாடையோடு வந்து விட்டாளா? அதனால் தான் செல்வி தன்னைப் பற்றி எதுவும் சொல்வதில்லையோ?

ஒவ்வொன்றாய் மாறி மாறி யோசித்த முரளிக்கு தலை சுற்றியது. இனம் புரியாத உணர்வு படாதபாடு படுத்தியது. தூக்கம் வராமல் தவித்தான்.

மறுநாள் ஆபீசில் வேலை ஓடவில்லை. ராத்திரி தூக்கம் கெட்டதால் கண் எரிச்சலாக இருந்தது. அலுப்பாய் இருந்தது. மாத்திரை போட்டுக் கொண்டு படுத்தால் தேவலாம் போலிருந்தது. செல்வியின் உருவம் வேறு அவ்வப்போது வந்து போனது. செல்வி அம்மன் வடிவமோ என்று குழப்பமாக இருந்தது. யாரிடமாவது கேட்கலாம் என்றால் கிண்டல் செய்வார்கள். வேறு வழியில்லை. சாயந்திரம்

வரை பல்லைக் கடித்துக் கொண்டு இருந்துவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தான்.

சாயந்திரம் செல்வியை எப்படியும் பார்த்து விடுவது என்று தீர்மானமாக இருந்தான். செல்வி தான் அம்மன் என்றால் நேரில் பார்க்கும் போது புரிந்துவிடும். ராத்திரி கண்ட கனவிற்கும் அர்த்தம் தெரிந்துவிடும் என்றும் சொல்லிக் கொண்டான்.

சாயந்திரம் ஆபீஸ் நேரம் முடிந்ததும் அரக்கப்பரக்க கிளம்பினான். ஓட்டமும் நடையுமாக கோவிலுக்கு வந்து சேர்ந்தான். வாசலில் என்றும் இல்லாத அளவுக்கு கார்களும், ஆட்டோக்களும் நிரம்பியிருந்தன. வழக்கத்தை விட கூடுதலாய் போலீஸ் தலைகள் தெரிந்தன. இரண்டு பக்கமும் இருந்த பிச்சைக்காரர்களில் ஒருவர்கூட கண்ணில் படவில்லை. பிச்சைக் காரர்களே இல்லாத போது அவர்களில் செல்வியை எங்கே தேடுவது என்று அவனுக்கு குழப்பமாக இருந்தது. கோவிலுக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. கோவிலின் வலது பக்க பாதையில் கட்டை கட்டி க்யு வரிசை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒரே நாளில் இதென்ன திடீர் மாற்றம் என்று யோசித்துப் பார்த்தவனுக்கு விடை தெரியவில்லை. யாரிடம் கேட்பது என்று குழம்பினான்.

அந்தப்பக்கமாக வரிசையில போங்க சார் என்று போலீஸ்காரர் ஒருவர் வந்து அதட்டினார். 'இன்றைக்கு என்ன விசேஷம்?' என்று அவரிடமே கேட்டான்.

'அம்மனுக்கு தங்கப் பாவாடை சாத்தறாங்க. பதினெட்டு லட்ச ரூபா செலவு பண்ணி தங்கப் பாவாடை பண்ணியிருக்காறாங்க.' மந்திரிங்க வர்ற நேரம். அதான், மெயின் கேட்ல யாரையும் விடலை. போங்க 'க்யு ல' போய் நில்லுங்க.

'சரி' என்று தலையாட்டிவிட்டு கோவிலுக்குள் போகாமல் வீடு வந்து சேர்ந்தான் முரளி.

அன்று இரவு பிச்சைக்காரர்களை போலீஸ்காரர்கள் கம்பை வைத்து விரட்டுவது போல் கனவு கண்டான். அவர்களுக்கு நடுவே கிழிசல் பாவாடையோடு செல்வி இருக்கிறாளா என்றும் தேடிப் பார்த்தான்.

# குப்பை கொட்டுவது மேல்நாட்டில் ஒரு கலை!

## அதனால் பயன்கள் பல

குப்பையிலும் குண்டுமணி இருக்கும் என்பதை அனுபவபூர்வமாகக் கண்டவர்கள் மேலைநாட்டார். குப்பையில் இருந்து எத்தனையோ மூலப் பொருள்களைப் பிரித்தெடுக்கிறார்கள். கழிவுக் கடதாசிகள், பிளாஸ்டிக் கழிவுகள், கண்ணாடித் துண்டுகள், உலோகக் கழிவுகள் யாவும் குப்பையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு மீள் சுற்றுச் சுழற்சியாக புதுப்புது பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மக்கள் தமக்கு வேண்டாம் என்று கழித்துவிட்ட குப்பை மேடுகளில் கடதாசி, பிளாஸ்டிக், கண்ணாடி, உலோகப் பொருள் என்று புதிது புதிதாகப் பொருட்களை வார்த்தெடுக்கக் கூடிய மூலப் பொருள்கள் இருக்கின்றன. எனவே அந்தக் குப்பையை எண்ணி நாம் கவலை கொள்வதில் அர்த்தம் இல்லை அல்லவா?

### நடமாடும் இயந்திரம்

குப்பைகளில் இருக்கம் மூலப் பொருட்களைப் பிரித்தெடுப்பதற்காகக் குப்பையை ஓரிடத்தில் கொட்டிக் கிளறி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க முடியாது. எனவே இதற்காக ஒரு நடமாடும் இயந்திரத்தையே உற்பத்தி செய்திருக்கிறார்கள் ஜெர்மனியர்.

இந்த இயந்திரம் மிகவும் இலகுவாகக் கையாளக் கூடியது. சூழலை அதிகம் பாதிக்காதவாறு துரிதமாகக் குப்பைகளைப் பிரித்தறிந்து மூலப் பொருட்களை சேகரிக்கும் ஆற்றல் கொண்டது.

அத்துடன் இது இயங்கும் போது ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரத்தையும் விநியோகிக்கக் கூடியது. குப்பையின் தொல்லையிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி செய்யும் போது குப்பையின் பக்க விளைவாக எவ்வளவு நன்மை கிடைக்கிறது!

குப்பையில் இருந்து மூலப் பொருள்களைப் பிரித்தெடுக்கும் இயந்திரத்துக்கு "கார்பனைசேஷன் இன்சினரேட்டர்" என்று பெயர்

### பிரமிப்பு

ஒரு குப்பை அள்ளும் இயந்திரம் வீதி தோறும் சென்று ஒரு தடவையில் 6 ஆயிரம் கிலோ குப்பைகளை அள்ளக்கூடியது. அவ்விதம் சேகரிக்கப்பட்ட அதே அளவு குப்பைகள் இந்தப் பிரித்தெடுக்கும் இயந்திரத்தில் போடப்பட்டன. இயந்திரம் இயங்கத் தொடங்கியது. குப்பை முற்று முழுதாகச் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் சேகரிக்கப்பட்ட மூலப் பொருள்களின் அளவு பிரமிப்பைத் தந்தது.

உலோகத் துண்டுகள் 170 கிலோ, அலுமனியத் தகடுகள் 24 கிலோ, கண்ணாடித் துண்டுகள், பீங்கான் ஒடுகள் போன்றவை 700 கிலோ, தார் வீதி நிர்மாணிக்கும் போது சேர்க்கக்கூடிய கலவைப் பொருள் 900 கிலோ என்று பயனுள்ள பொருள்கள் அந்தக் குப்பையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

### மின்சார உற்பத்தி

அது மட்டுமா? இந்த சுத்திகரிப்பு வேலை நடைபெறும் போது, அந்த இயந்திரம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தையும் பயன்படுத்தலாம்.

அதாவது ஆறாயிரம் கிலோ குப்பைகளைக் கொட்டியவர்களில் 10 சத வீதத்தினருக்கு விநியோகிக்கக் கூடிய மின்சாரத்தை அதே குப்பைகள் உற்பத்தி செய்து தருகின்றன. குப்பையின் நன்றிக்கடன் தான் எத்தகையது!

### நன்மைகள்

வீதியில் கொட்டிக் குவிக்கப்படும் குப்பைகளை மீள் சுற்றுச் சுழற்சிக்குப் பயன் படுத்துவதால் எத்தனையோ நன்மைகள் ஏற்படுகின்றன.

பயனுள்ள மூலப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன.எஞ்சிய கழிவுகளை தாழ்நிலைப் பகுதிகளில் கொட்டும் போது அவை வெகு விரைவில் உக்கிப் போய் மண்ணோடு மண்ணாய்க் கலந்து விடுகின்றன.

இதனால் சூழல் அசுத்தமடைவது தவிர்க்கப்படுகிறது.

குப்பையின் நாற்றம் தாங்க முடியாமல் போய் மக்கள் அவதியுறும் அவலமும் இல்லாமல் போகிறது. ஆயினும் இந்த இனிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமானால் அதற்கு குப்பை கொட்டுபவர்களின் ஒத்துழைப்பு அவசியம். அப்படி என்ன ஒத்துழைப்பு?

நவீன உலகில் குப்பை கொட்டுவதிலும் ஒரு கலை இருக்கிறது.

### ஒரு கலை

ஆம்! நவீன உலகில் குப்பை கொட்டுவதும் ஒரு கலையாகி விட்டது. அந்தக் கலையை நாம் விரும்புகிறோமோ இல்லையோ அந்தக் கலையின் பிரகாரம் நாம் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதனை மீறி நடந்தால் அபராதம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது மேல் நாடுகளில்!

வேறொன்றும் இல்லை, எமது வீடுகளில் நாம் கழித்துவிடும் பொருள்களைக் குப்பை என்று மகுடமிட்டு வெளியில் நடைபாதையில் கொட்டி விடுகிறோம். அத்துடன் எம் வேலை முடிந்து விட்டது என்று கருதிவிடுகிறோம்.

ஆனால் மேல் நாட்டவர்கள் பழகியிருக்கும் குப்பை கொட்டுக் கலையின் படி அவர்கள் தாம் கழித்துவிடும் பொருட்களை எல்லாம் தரம்பிரித்துக் கொட்ட வேண்டும்.

### தனித் தனிப் பைகளில்

அதாவது கழிவு உணவுகள், பழத்தோல்கள், தானிய வகைகள் போன்றவற்றை அவர்கள் போட்டு வைக்க வேண்டும்.

- மண்ணுக்குள் புதைத்தால் மக்கிப் போய்விடாத உலோகப் பொருள்கள், கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்டிக் பொருள்கள், பொலித்தீன் உறைகள் போன்றவற்றை வேறாக ஒரு பைக்குள் போட்டு வைக்க வேண்டும்.

பழைய பத்திரிகைகளை வேறாகக் கழித்து விடுவதும் வரவேற்கத்தக்கது. நகர சுத்தித் தொழிலாளர்கள் வேறு வேறு வண்டிகளில் அவற்றை அப்புறப்படுத்துவார்கள். மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இவ்விதம் தரம் பிரித்து குப்பை அகற்றும் திட்டம் வெற்றி அளித்திருக்கிறது.

-சிகுநா

## வீடு தீப்பற்றி எரிந்தால் திடீர்ச் செல்வம்!

*பல கனவுகளின் பலன்களைக் கடந்த வாரம் கண்டோம். மேலும் சில கனவுகளின் பலன்கள் இதோ:*

◆ விமானம் விழுந்து நொறுங்கியது போல் கனவு கண்டால், உங்கள் வியாபாரத்தில் நஷ்டம் வரப் போகிறது என்று பொருள்.

◆ வீடு தீப்பற்றி எரிவதைப் போல் கனவு கண்டால் திடீர் செல்வம் வரும்.

◆ நண்டு ஊர்ந்து உங்களை நோக்கி வருவது போல் கனவு கண்டால், நீங்கள் கூடிய சீக்கிரம் சட்டத்தின் பிடியில் அகப்படப் போகிறீர்கள், உஷார்!

◆ மணி பர்ஸ் அல்லது கைப்பையை தொலைத்து விட்டு தேடுவதைப் போல் கனவு கண்டால், உங்களுக்குக் காதலில் தோல்வி உண்டாகப் போகிறது.

◆ யாரிடமாவது நீங்கள் அடிபடுவது போல் கனவு கண்டால், எதிரிகளால் உங்களுக்கு நன்மை.

◆ கைகளில் கறை படிந்தது போல் கனவு கண்டால், வேலையில் கஷ்டம் அல்லது கெட்ட பெயர் ஏற்படப் போகிறது.

◆ அரச குடும்பத்தாருடன் உரையாடுவது போல் கனவு கண்டீர்களானால், உங்கள் நண்பர்களால் உயர்வு உண்டாகும்.

◆ தோட்டத்தில் செடிகள் பூத்துக் குலுங்குவது போல் கனவு கண்டால், தொழிலில் அபரிதமான செல்வத்தை அடையப் போகிறீர்கள்.

## பேய்!

கறுப்பர் நாடாகிய தங்கநிக்காவில் ஒரு சுவையான சம்பவம் இடம்பெற்றது.

அங்கு மன்யாரா என்ற கிராமத்தில் உள்ள ஒரு பெண் தனது கணவனுடன் சண்டை பிடித்துக் கொண்டு, வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொள்வதென்ற முடிவுக்கு வந்தாள்.

அந்த ஆபிரிக்கக் கிராமத்தில் சிங்கங்கள் மலிந்து கிடந்தன!

சாகத் துணிந்த அந்தப் பெண், பசியோடிருந்த ஒரு சிங்கத்தின் முன் போய் நின்றாள்!

சிங்கம் அவளை ஏற இறங்கப் பார்த்தது. பின்னர் முகத்தைத் திருப்பிக் கொண்டு, அது அடித்து வீழ்த்தியிருந்த வரிக் குதிரையை ருசிக்க ஆரம்பித்து விட்டது.

பெண் என்றால் பேய் மட்டுமன்றிச் சிங்கம் கூட இரங்கும் என்பதையே இது காட்டுகிறது.

## படுக்கை

✱ ஒருவர் இரவிலோ, பகலிலோ படுத்து உறங்கும் போது வடக்கு திசையில் தலை வைத்து படுக்கக் கூடாது. அப்படி செய்தால் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதோடு மனதில் மகிழ்ச்சி குறைந்து, குழப்பமும் கலக்கமும் அதிகரிக்கும்.

மேற்கு திசையில் தலை வைத்து படுத்தோமானால் பெருமையும், புகழும் உண்டாகும். கிழக்கு திசையில் தலை வைத்து படுத்தால் செல்வமும், செல்வாக்கும் ஏற்பட்டு வாழ்வில் ஏற்றம் உண்டாகும். தெற்கு திசையில் தலை வைத்து படுத்தால், ஆயுள் விருத்தியும், தன, தான்ய விருத்தியும் ஏற்பட்டு சந்ததிகள் பெருகி குடும்பம் தழைக்கும்.

## அன்பான வாசகர்களே....

சுடர் ஒளியின் ஒவ்வொரு ஆக்கத்திலும் வளர்ச்சியிலும் உங்கள் பங்கேற்பு இருக்க வேண்டும் என விரும்புகிறோம்.

உங்களுக்குள் ஒளிந்திருக்கும் படைப்பாற்றலை வெளிக் கொண்டு வரும் வாகனமாய் சுடர் ஒளி விளங்கும்!

உங்கள் திறமைகளை- கை வரிசைகளை- கலை ஆர்வத்தை, சுடர் ஒளியில் காட்டுங்கள்.

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

உங்களது கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள், ஜோக்ஸ், ஆன்மிக எழுத்துகள்- என எல்லாவிதப் படைப்புகளையும் 'சுடர் ஒளி (வார இதழ்) - படைப்பு' என உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதி அலுவலக முகவரிக்கு உடனே அனுப்புங்கள்!

*கென் என்ற யு.எஸ். பக்தரின் கடிதம் நம்மை வியக்க வைக்கிறது. அவரது கடிதம்:*

"1996 நவம்பரில் நான் பெங்களூருக்கு விமான டிக்கெட் வாங்கியவுடனே எனது மனதில் எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. "என்று காண்போம் எனது தெய்வத்தை" என்று என் மனதில் நீண்ட நாட்களாக - 11 வருடங்களாக இருந்த ஒரு லட்சியம் நிறைவேறப்போகின்றது என்ற எண்ணமே என்னை ஒரு புதிய மனிதனாக்கியது.

நான் டிக்கெட் வாங்கியது நவம்பர் மாதம். நான் புறப்பட வேண்டிய நாள் டிசம்பர் 21. என் இனிய பயணத்திற்கான வேலைகளை நான் செய்து வந்தேன்

ஆனால், டிசம்பர் மாதம் இரண்டாவது வாரம். ஒருநாள், கீழே விழுந்த என் பையை எடுக்கக் குனிந்தேன். 'கடுக்' என்று என் முதுகெலும்பில் ஒரு சப்தம் கேட்டது. உடனடியாக எனது இடது கால் ஒரு யானையின் கால் அளவுக்கு வீங்கி விட்டது.

என்னால் நடக்க முடியவில்லை. உடனே அருகிலிருந்த மருத்துவமனையில் 'அட்மிட்' செய்தார்கள்.

மருத்துவமனையில் நான் சொன்னதை யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒரு டாக்டர், உடலில் ஒரு பகுதியில் இரத்த நாளத்தில் இரத்தம் கட்டியாக உறைந்து விட்டதால் தான் இவ்வாறு ஏற்பட்டது என்றார்.

இன்னொரு டாக்டர் பூச்சிக் கடிதான் என்றார். இரத்தம் உறைந்ததைக் கண்டு பிடிக்கும் 'டெஸ்ட்' முதல் பூச்சிக்கடி 'டெஸ்ட்' வரை எல்லாம் நடந்தன.

# பிரமிக்க வைக்கும் சாயி சக்தி




## ஓர் அமெரிக்கரின் அனுபவம்

இதற்குள் 5 நாட்கள் ஓடி விட்டன. பிரசாந்தி நிலையம் செல்லும் என்னுடைய எண்ணம் நிறைவேறாது என்று நிராசை என்னை வாட்டியது.

அடுத்த நாள் என்னைப் பார்க்க வந்த ஒரு சாயி பக்தர் எனக்கு ஒரு ஜபமாலை தந்தார். அதை வைத்துக் கொண்டு "சாயி ராம்" என்று நான் ஜபத்தைத் தொடக்கினேன்.

அன்று இரவு எனக்கு ஒரு வினோதமான இரவு. ஆன்மீக வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனை. உடலைச் சுற்றி ஒளி வெள்ளம் சூழ்ந்து இருப்பதைக் கண்டேன். மனதில் சொல்லத் தெரியாத ஒரு அமைதி ஏற்பட்டது.

அடுத்த நாள் காலை எழுந்த போது என் கால் வீக்கம் வடிந்திருந்தது உடனடியாக என்னை மருத்துவமனையை விட்டு "டிஸ்சார்ஜ்" செய்தார்கள்.



என்னால் காலை ஊன்ற முடியாத அளவுக்கு வலி இருந்தது. கையில் ஒரு கம்பை வைத்துக் கொண்டு ஊன்றி நடந்தேன். என[து] பயணத்தை ஒரு வாரம் ஒத்[தி] போட்டேன்.

ஜனவரி இரண்டாவது வாரம், நியூயார்க் விமான நிலையத்தில் ஒரு வாக்கிங் ஸ்டிக்குடன் நொண்டி, நொண்டி நடந்தேன். பிரசாந்தி நிலையம் வந்த போதுதான் என் மனம் அமைதி பெற்றது. நாட்கள் கரைந்தன. தினம் தினம் தரிசனம். தினம் தினம் ஆனந்தம்.

கடைசித் தரிசனம். பாபா என்னைத் தாண்டிச் சென்றார். நான் வழக்கமாக உட்காரும் சேரில் உட்கார்ந்திருந்த படியே தரிசனம் முடிந்தது.

அனைவரும் எழுந்தனர். நானும் எழுந்தேன். என்ன ஆச்சர்யம் என் கால் சரியாகி விட்டது! என்னால் சாதாரணமா[க] நடக்க முடிந்தது. நம்பிக்கையுடன் நான் நியூயார்க் நோக்கி அடி எடுத்து வைத்தேன்."

தனது சொந்த ஊர் திரும்பிய கென், நடந்த அற்புதத்தை தன்னால் மறக்க முடியவில்லை என்கிறார்.

**-வி.எஸ்.மீனாட்சிசுந்தர்**





### சினிமா



"என்ன கமராமேன் நாம் படாதபாடு பட்டு எடுத்தோமே அந்த "சீன்" தெளிவாக இருக்கிறதா?"

"ஐயோ! அந்த வேதனையை ஏன் கேட்கிறீங்க? அந்தக் காட்சியைப் படம் பிடிக்கும் போது கமராவுக்குள் இருந்த பில்ம் சுத்தாமலே நின்று விட்டது."

### பாதிக் கோழி

"ஆமாம் ஆர்டர் கொடுத்த பாதிக் கோழிக்காக நான் இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?"

"மறு பாதிக்கு ஆர்டர் வரும்வரைதான் சார்... ஒரு பாதிக்காக முழுக் கோழியை எப்படிக் கொல்லுவது?"

### ஜோசியர்

"இவர் போலி ஜோஸியர்னு எதை வைச்சு சொல்றே?"

"நான் கொடுத்த ஜாதகங்களைப் பார்த்துட்டு, 'பொண்ணுக்கு செவ்வாய் தோஷம்; பையனுக்கு ஜலதோஷம், பொருத்தம் சூப்பரா இருக்கு'னு சொல்றாரு!"

### மனைவி

"நேற்று விருந்தில் அழகான பெண் ஒருத்தி உன்னுடன் இருந்தாளே அவள் யார்?"

"என் மனைவியிடம் கூற மாட்டாய் அல்லவா?"

"நிச்சயமாகக் கூறமாட்டேன்!"

"ஆமாம்... அவள் என் மனைவி தான்."

### மருந்து

ஒரு நோயாளியைக் கவனமாக, நீண்ட நேரம் பரிசோதனை செய்தார் டாக்டர். அதன்பின் ஒரு மருந்தை எழுதிக் கொடுத்தார்.

"மருந்தைச் சாப்பிட்டுப் பாருங்கள். எப்படிக் குணமளிக்கிறது என்பதை என்னிடம் சொல்லுங்கள். நானும் இதே வியாதியால் தான் கஷ்டப்படுகிறேன்!" என்று சொன்னார் டாக்டர்.

### அதிஷ்டம்

**தந்தை:** (கலியாணத் தரகரிடம்) எனது பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து தரவேண்டும். இது வரை நீங்கள் எத்தனை திருமணங்கள் செய்து வைத்துள்ளீர்கள்.



**தரகர்:** இதுவரை பதினேழு திருமணங்களை ஜாம்! ஜாம்! என்று முடித்து வைத்துள்ளேன். இவர்களில் ஐந்து பேர் காலமாகிவிட்டார்கள், ஏழு பேர் டைவோஸ் பண்ணி விட்டார்கள், மூன்று பேர் கோடேற ஆயத்தம், மற்ற இருவருக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டிருப்பதாகக் கேள்வி.

**தந்தை:** ?....... ?.......

### வதந்தி

"சாப்பாட்டுல ஏகப்பட்ட கல்லுங்க இருந்தும் ஹோட்டல்ல சாப்பிடுறவங்க யாரும் குறை சொல்லாம சாப்பிடுறாங்களே, என்ன விஷயம்?"

"இந்தக் கல்லுங்களோட ஒரு வைரக் கல்லும் கலந்திருக்கு. அதிஷ்டம் உள்ளவங்களுக்கு மட்டும் இது கிடைக்கும்'னு ஹோட்டல் முதலாளி வதந்தி பரப்பிவிட்டார், அதான்!"

### ஒற்றுமை

சுமார் இருபது வருடங்களாக ஒரு வழக்கு நடந்து வந்தது. சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் வழக்கை வாபஸ் பெறுவதாக நீதிமன்றத்தில் கூறினர்.

நீதிபதி: மிகவும் சந்தோஷப்படுகிறேன். உங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு விட்டதா?

வாதி, பிரதிவாதி: அப்படி ஒன்றும் இல்லை எங்களுடைய வழக்கறிஞர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்து விட்டார்கள்.

### பரீட்சை

"அப்பா, ஒன்பதாம் நம்பர் ரொம்ப ராசிதானே?"

"பரீட்சையிலே நூற்றுக்கு ஒன்பது மார்க் வாங்கிட்டு வந்துட்டு இப்படிச் சொல்லாதடா!"

"........................................"

# கண்ணைக் கவரும் வண்ண மட்டிகள்

இந்து சமுத்திரத்தில் பெருமளவில் காணப்படும் சோழி வகை இன்றுகூட ஆபிரிக்காவிலும், ஆசியாவில் அபிவிருத்தி அடையாத சில நாடுகளிலும் நாணயங்களாகப் பயன்படுகிறது.

பொழுதுபோக்காக மட்டுமன்றி விற்பனைக்காகவும் இன்று பலர் மட்டி வகைகளைச் சேகரித்து வருகின்றனர்.

உலக நாடுகள் பலவற்றில் கிளைகளைக் கொண்டுள்ள ஷெல் பெற்றோல், எண்ணெய்க் கம்பனி கடல் மட்டியையே (ஷெல்) அதன் பெயராகவும் சின்னமாகவும் கொண்டுள்ளது. பல நாடுகளில் கடல் மட்டிகளைச் சேகரித்து விற்பனை செய்யும் ஒரு ஸ்தாபனமாகவே இந்தக் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. பல காலத்தின் பின்னர்தான் பிரஸ்தாப ஸ்தாபனம் கடல் மட்டி வியாபாரத்தைக் கைவிட்டுப் பெற்றோல் விற்பனையில் இறங்கியது.

இன்று விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளுக்காகப் பெருமளவில் பணத்தைச் செலவு செய்து மிகுந்த ஆர்வத்துடனும், சிரமத்துடனும் பலர் கடல் மட்டிகளைச் சேகரிக்கிறார்கள்.

அமெரிக்காவில் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர் ஒருவர் 40 வருடங்களில் உலகில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து கடல் மட்டிகளைச் சேகரித்துள்ளார்.

பிலெடெல்பியாவில் உள்ள இயற்கை சாஸ்திர ஆய்வகம் பெரும் பணச் செலவில் உலகின் பல பாகங்களிலும் இருந்து மட்டிகளைச் சேகரித்து வருகிறது.

சிறந்த ஓவியர்களால் வண்ணம் தீட்டப்பட்டவை போன்று பல மட்டிகள் லாவண்யம் மிக்கவையாக இருக்கின்றன.

அழகிய வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகளையொத்த மட்டிகளை மட்டக்களப்புக் கடற் கரையிலும் சென்னைக் கடற் கரையிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் லட்சக் கணக்கில் காணலாம்.

நியூகினியாவிலும் பிலிப்பைன்ஸ் தீவுகளின் அருகிலும் அபூர்வமாகக் கிடைக்கும் ஒரு வகை மட்டி (''குளோறி ஒப் த சீஸ் கோன் ஷெல்'') மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். இது சுமார் 5 அங்குல நீளமுள்ளது.

இந்த வகை மட்டி ஒன்று 1963இல் 2000 டாலர்களுக்கு அப்போதைய பெறுமதியில் (ரூபா 10,000/-) விற்பனையாகியது.

''சைபீரியா கட்டாட்டா'' என்ற பெயருள்ள ஒரு சோழி அதே ஆண்டில் ஆயிரம் டாலர்களுக்கு விற்கப்பட்டுள்ளது.

பிஜி தீவுகளில் கிடைக்கும் ''கோல்டன் கவ்ரி'' என்ற சோழியும், மேற்கிந்தியத் தீவுகளின் அருகே கிடைக்கும் ''புளூ ரோட்டோ மரியா'' என்ற கடல் நத்தையும் அபூர்வமான இருவகைகளாகும். இவை ஒவ்வொன்றும் பல நூறு டாலர்கள் பெறுமதியானவை.



மட்டியைச் சுட்டு உயர்ரகச் சுண்ணாம்பு எடுக்கப்படுகிறது.

மட்டியின் சதையும் சுவையான உணவாக இருக்கிறது.

சில மட்டி வகைகள் தீராத நோய்களைத் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகின்றன.

கடற் கரைகளில் எண்ணிறந்த வண்ண மட்டி வகைகளும், கண்கவர் சங்கு, சோழி வகைகளும் காணப்படுகின்றன.

இவற்றைத் தேடிச் சேகரிப்பதிலும், கண்டு களிப்பதிலும் இன்பம் அடைகின்றனர் பலர்.

மெல்லுடலிகள் என்ற உயிரினத்தைச் சேர்ந்த இவற்றில் பல கடல் நத்தைகளும், சங்குகளும், சோழிகளும் வயிற்றுக்காலிகளும் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. நன்னீர் மட்டிகள், கடல் மட்டிகள், முத்துச் சிப்பிகள் என்பன லெமல்லி பிரான் சியேட்டா அல்லது பெலிசிபோடா எனப்படும் பரசு காலிகள் என்ற வகையைச் சேர்ந்தவை.

இந்த உயிரினங்களின் ஓடுகளையே நாம் கடற் கரைகளில் கண்டு, பொறுக்கிச் சேகரிக்கிறோம். இவை எண்ணற்ற வடிவங்களையும், அமைப்புகளையும் கொண்டவை.

புராதன காலம் முதற் கொண்டே யுத்தத்தின் போதும் சமய வைபவங்கள், மற்றும் சடங்குகள் என்பனவற்றிலும் ஊதுவதற்குப் பயன்பட்டு வந்துள்ள சங்கு ஒரு புனிதப் பொருளாகக் கருதப்படுகிறது.

இன்று இலங்கையில் இருந்து வெளி நாடுகளுக்குப் பெருமளவில் சங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பண்டைய ரோமர்கள் தண்ணீர், மது முதலான பான வகைகளை அருந்துவதற்கான அலங்காரப் பாத்திரங்களைக் கடல் மட்டிகளால் தயாரித்துக் கொண்டனர்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதர்கள் கடல் மட்டிகளைச் சேகரிப்பதில் ஆர்வம்காட்டி வந்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன.

சுமார் 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸ் நாட்டில் கற்குகைகளில் ஒருவகைப் பழங்கால குடி மக்கள் வாழ்ந்தனர். அவர்களால் சேகரிக்கப்பட்ட கடல் மட்டிகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கைகளுக்குக் கிட்டியுள்ளன.

இந்து சமுத்திரத்தில் மட்டும் கிடைக்கக்கூடிய மட்டி வகைகளும் அவற்றிடையே காணப்பட்டன. கப்பல்கள் இல்லாத அந்தப் புராதன காலத்தில் வாழ்ந்த குடிகளுக்கு அவ்வளவு தூரத்தில் இருந்த மட்டிகள் எப்படிக் கிடைத்தன என்பது பெரும் ஆச்சரியமான ஒன்றாகும்.

எகிப்தில் கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தான் பிரமிட்டுகள் அமைக்கப்பட்டன. அதற்கு முன்னர் கூட பேர்ஸியன் குடாவில் இருந்து புராதன துருக்கிக்கும், புராதன ஜேர்மனிக்கும் ஒருவகைச் சோழிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன., இவற்றை அங்கு நாணயமாகப் பயன்படுத்தி உள்ளனர்.



# கண்ணதாசனின் கன்னிக் கவிதை

கவிஞர் கண்ணதாசன் 1944ஆம் ஆண்டு ''திருமகள்'' என்னும் இதழில் முதன் முதலாகத் தன் கன்னிப் படைப்பான கவிதையை எழுதினார்.

அக்கவிதை கவிஞரின் கன்னிக் கவிதை மட்டுமல்ல; கன்னியொருத்தி தன் காதலனுக்கு எழுதிய காதல் கடிதமாகவும் அமைந்திருந்தது. அக் கவிதைதான் இக் கவிதை:-

காலை குளித்தெழுந்து
கருஞ் சாந்துப் பொட்டுமிட்டு
கருநாகப் பாம்பெனவே
கார்கூந்தல் பின்னலிட்டுக்
காத்திருந்தேன் உம்வரவை
கடைக்கண்ணால்
பார்த்திருந்தேன்!
கண்ணில் தெரிந்திலைநீர்!
கனவுலகில் சஞ்சரித்தேன்!
அந்தி மயங்க
அடிவானம் செக்கரிட
அண்டை அறியாமல்
ஆடவன் நீர் ஓடிவந்தீர்!
தந்தையில் லத்திலில்லை!
தாயும்வெளிப் போயிருந்தாள்!
தகதகத்த உம்எழிலில்
தன் குணத்தாள் சொக்கிவிட்டேன்
உம் அழகுக் கென்மனத்தை
ஒத்தியாய் வைத்தபின்னர்
உளத்தைத் திடப்படுத்தி
ஓர் வார்த்தை கேட்டுவிட்டேன்!
''யார் நீங்கள்'' என்றதற்கு
''ஆணழகன்'' என்றிறுத்தீர்!
''அதைக் கேட்கவில்லை! உமை
அறிந்து கொண்டேன்;
கண்டவுடன்
அத்தை மகன்போல
அவசரமாய் ஓடிவந்த
வித்தைதனைக்கூறி
விரைவில் வெளியேறு''
மென்றேன்!
''கண்ணே'' எனக்கூவிக்
கரத்தைப் பிடித்துவிட்டீர்!
கரம்பறிக்க எத்தனித்தேன்
காதல் தடுத்ததையோ!
கட்டிப் பிடித்தீர்!
கனிமுத்தம் கொடுத்தீர்
பின்னர் பிரிந்த உமைப்
பேதை இன்னும் காணவில்லை
ஒரு நாளை இன்பமன்று
உருவாகி விட்டதையோ!
ஒன்றும் புரியவில்லை
உடன்வந்து காவீரோ!
சொல்லாலே கொல்லுகிறார்?
சோர்வு பொறுக்கவில்லை!
உற்றார் உளங்களிக்க,
ஊராரின் வாயடைக்க
பெற்றார் உடன்வந்து
பேதையெனைக் காவீரோ!

இங்ஙனம்
காதலி



அன்றலர்ந்த செந்தாமரைபோல மலர்ந்த முகத்துடன் எழிற் கோலம் காட்டி இன்றைய சுடர் ஒளி முகப்பை அலங்கரிக்கும் இந்த ஆரணங்கு யார் தெரியுமா? ''வண்ணத்தமிழ்ப் பாட்டு'' படத்தில் நடிக்கும் புதுத்தாரகை வைஜயந்தி.


தமிழகத்தின்
தலை சிறந்த சோதிடர்
M.S. இராமலிங்கம்
கொழும்பு வந்துள்ளார்
21ம் தேதி வரை மட்டுமே இங்கு இருப்பார்.
காண வேண்டியவர் தொடர்பு கொள்க.
ஹோட்டல் எம்ரெஸ்
383, டூப்ளிகேசன் ரோடு,
கொழும்பு – 03
போன்: 577405
Room No: 19



# தொழில் உச்சம்


நாட்டின் நெற் களஞ்சியமான கிழக்கு இலங்கையில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தொழில்வாய்ப்பு இப்போது உச்சக் கட்டத்தில் இருக்கிறது.

சிறுபோக நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதனால் பெரும் எண்ணிக்கையினருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

அக்கரைப்பற்று- அம்பாறை வீதியில் உள்ள வயல் ஒன்றில் தொழிலாளர்கள் நெல் அறுவடை வேலையில் ஈடுபட்டு இருப்பதைப் படத்தில் பார்க்கிறீர்கள்.

அம்பாறை மாவட்டத்தில் 46,170 ஹெக்டேயரில் சிறுபோக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

# தொழில் மந்தம்



விவசாயத் தொழில் வாய்ப்பு இப்போது நிறைய இருக்கும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நெசவுத் தொழில் வாய்ப்பு மந்தமாக உள்ளது.

மருதமுனை, காத்தான்குடி முதலான பகுதிகள் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்றவை.

இந்த இரண்டு ஊர்களோடு கல்லாறு, ஒருவில், பெரிய நீலாவணை, பாலமுனை, கல்முனைக்குடி, நிந்தவூர், நற்பிட்டிமுனை முதலான கிராமங்களையும் சேர்ந்த மக்கள் கைத்தறி நெசவுத் தொழிலையே பெரிதும் நம்பி வாழ்பவர்கள்.

இப்போது அந்த மக்களின் வயிற்றில் அடி! கைத்தறி நெசவுத் தறிகள் தூங்குகின்றன. வேலை நடைபெறவில்லை. படத்தைப் பாருங்கள். இவை மருதமுனைக் கைத்தறிகள் சில.

வெளிநாட்டுச் சாரங்களின் இறக்குமதியைக் கட்டுப் படுத்தவேண்டும்.

கைத்தறி நெசவுக்குத் தேவையான மூலப் பொருட்கள் அனைத்தையும் இறக்குமதி செய்து நெசவாளர்களுக்கு இலகுவில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் மூலந்தான் முடங்கிக் கிடக்கும் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உயிர் கொடுக்க முடியும் என்பது நெசவாளர்களின் கருத்து.



# தொழில் சொந்தம்

துணிவும் விடா முயற்சியும் இருந்தால் தொழிலுக்கா பஞ்சம்? சொந்தத்தில் தொழில் செய்து பிழைக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று கரத்தையில் கடலை வியாபாரம்.

படத்தைப் பாருங்கள். கடலைக்கார அம்மா வெற்றிப் பெருமிதத்தோடு "போஸ்" கொடுக்கிறார்.

*படங்கள்:அக்கரைப்பற்று, கல்முனை காத்தான்குடி நிருபர்கள்.*

# எலி விளையாட்டு: பிளாஸ்டிக் உருவாச்சு!

இது ஒரு பிளாஸ்டிக் யுகம் என்று சொல்லலாம். பாலர் முதல் பல் போன முதியோர் வரையில் பிளாஸ்டிக் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டுவிட்டது. கண்கவர் வர்ணங்களில் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் பொம்மைகளுடன் விளையாடுகிறான் சிறுவன். தனது பிளாஸ்டிக் பொடி டப்பியைத்திறந்து "இஸ்" என்று உறுஞ்சுகிறார் தாத்தா. பிளாஸ்டிக் வளையல், பிளாஸ்டிக் மணிமாலை, பிளாஸ்டிக் காலணி, பிளாஸ்டிக் பேக் ஆகியவற்றுடன் வலம் வருகிறது பெண்ணுலகம். கற்காலம், உலோக காலம் என்றெல்லாம் மனித நாகரீகம் வளர்ந்ததாக சரித்திர ஆசிரியர்கள் விவரிக்கிறார்கள். எனவே தற்காலத்தை, பிளாஸ்டிக் காலம் என்று குறிப்பிடலாம்.

மிகவும் அத்தியாவசிய தேவையாகி விட்ட பிளாஸ்டிக் உருவான கதை மிகவும் ஆச்சரியம் தருவதாகும். ஒரு இரசாயன ஆய்வாளர் ஏதோ ஒரு பரிசோதனையை நடத்திக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக உருவான ஒரு விநோதக் கலவையே பிளாஸ்டிக் ஆக மறு உருவம் பெற்றது என்பது ஆச்சரியம் தானே.

அதுவும் துர்நாற்றமுள்ள இரு வேறு திரவங்கள் ஒன்று கலக்கும்போது எவ்வித நாற்றமும் இல்லாத திடப் பொருள் உருவாகியது. அதுவே பிளாஸ்டிக் ஆகியது.

பெல்ஜியம் நாட்டவரான பேக்லண்ட் என்னும் ஆய்வாளர் பார்மோல்டிஹைட் என்னும் திரவத்தையும் கார்போலிக் அமிலத்தையும் கலந்து சூடேற்றினார். இரு திரவங்களும் ஒன்று கலந்து சிறிது நேரத்தில் ஒரு குழம்பு போல் ஆகியது. பின்னர் சிறிது சிறிதாகப் பிசின் உருவத்தில் மாறிய அந்தக் குழம்பு நன்கு குளிர்ந்தவுடன் சிறிதும் நாற்றமில்லாத மிகக் கடினமான திடப் பொருளாகக் காட்சி தந்தது. அதுவே உலகில் முதன் முதலில் செய்யப்பட்ட பிளாஸ்டிக் ஆகும். இந்தப் பேக்லைட் பிளாஸ்டிக்கைக் கொண்டு பலவிதமான மின்சார உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன. பின்னர் சிறிது காலம் கடந்து காசீன் பிளாஸ்டிக் என்ற ஒரு ரகம் உருவாக்கப்பட்டது.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை மனிதனுக்கு மிகப் பெரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஜீவராசியாக இருந்து வருவது எலி ஆகும். எத்தனையோ தொல்லைகளை அள்ளித்தரும் எலி சிலவேளைகளில் தான் அறியாமலே மனிதனுக்கு நன்மையும் செய்வதுண்டு. பிளாஸ்டிக் கண்டு பிடிப்புக்கும் ஓர் எலி மறைமுகமாக உதவியிருக்கிறது. என்றால் அதை நம்ப முடியுமா? அதுவும் போத்தலைத் தட்டிவிட்டதால் ஏற்பட்ட நன்மை அது என்பது தான் முக்கியம்.

எல்லாருக்கும் இருக்கும் எலித்தொல்லை அந்த விஞ்ஞானிக்கும் இருந்தது. தனது விஞ்ஞான கூடத்தில் தொல்லைகளை ஏற்படுத்திய எலிகளைப் பிடிப்பதற்காக அவர் பொறி வைத்தார். பொறியில் எலிகளுக்கு மிகவும் பிடித்தமான பாலாடையைத் தூண்டிலாக வைத்திருந்தார்.



பாலாடையைக் கண்ட ஒரு எலி அங்கு வந்தது.ஆயினும் என்ன நினைத்ததோ தெரியாது. பொறியில் சிக்காமல் தப்பியோடிவிட்டது. ஆனால் அருகிலிருந்த ஒரு போத்தலைத் தட்டி அதிலிருந்து திரவத்தை கீழே சிந்தும்படி செய்துவிட்டது.

மறுநாள் விஞ்ஞானி ஆய்வு கூடத்துக்கு வந்தார். தனது பொறியில் ஒரு எலியும் அகப்படாதது அவருக்குக் கவலையைத் தந்தது. ஆனால் எலியைக் கவர்ந்திழுப்பதற்கு அவர் பொறியில் வைத்திருந்த பாலாடை பளிங்கு போல் பளபளப்பாக மின்னியது. அவருக்கு அதிசயத்தைத் தந்தது. எலிப் பொறிக்கு அருகில் அவர் வைத்திருந்த போத்தலில் இருந்து பார்மோல்டிஹைட் திரவம் பாலாடையில் சிதறி அதனை நனைத்திருந்ததை அவர் அவதானித்தார். காசீன் பிளாஸ்டிக் ரகம் உலகில் பிறந்தது இவ்விதமே. பாலும் பிளாஸ்டிக்காக மாறிப் பெரும் பயன்களை அளிப்பதை இன்று நாம் காண்கிறோம்.

இதன் தொடர்ச்சியாக மேலும் பல வகையான பிளாஸ்டிக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. பொலித்தீன் வகை பிளாஸ்டிக்குகள் மக்களின் அன்றாடத் தேவைகளுக்குப் பெரிதும் உதவிபுரிந்தன.

ஒரு சில பிளாஸ்டிக்குகள் கண்ணாடியைப் போல ஒளியைச் செலுத்தக்கூடியவை. ஆனால் உடையாத் தன்மை கொண்டவை. காகிதம், கயிறு போல் செய்யவும் சில பிளாஸ்டிக்குகள் பொருத்தமானவை. பிளாஸ்டிக் தண்ணீரால் பாதிக்கப்படாதது. அமிலம், காரம் போன்றவற்றினால் பாதிக்கப்படாத பிளாஸ்டிக்கும் இருக்கிறது. பிளாஸ்டிக்கில் இருந்து எந்த உருவத்தையும் வார்ப்புச் செய்யலாம். எந்த வர்ணத்தையும் அது ஏற்கக்கூடியது. விஞ்ஞானம் கண்ட அபூர்வப் பொருள் பிளாஸ்டிக் என்றால் அது மிகையாகாது.

-கதாசி.

இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் செப்டெம்பர் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.